அன்பும் பண்பும் நிறைந்த வாசகப் பெருமக்களுக்கு முதலில் வணக்கம். இரண்டாவது நன்றி.. எதுக்கு திடீர்னு நன்றி சொல்றேன்னு பார்க்கறீங்களா..? சென்ற இதழ் கிரேட் நாவல், எவரெஸ்ட் நாவல், பெஸ்ட் நாவல் பொங்கல் சிறப்பிதழுக்கு தாங்கள் அளித்த ஆதரவுக்குத்தாங்க இந்த ஸ்பெஷல் தாங்ஸ்.

இந்த இதழில் உங்கள் அபிமான எழுத்தாளர் ராஜேஷ்குமார் எழுதிய முழுநீள... அதாங்க.. அட்டைப் படத்தில் தெரிவித்தது போல் மிகப் பெரிய்யயய.. முழு நாவல் இடம் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த நாவல் பல அதிர்ச்சியான திருப்பங்களுடன் விறுவிறுப்பாக அண்ணன் ராஜேஷ்குமாருக்கே உரித்தான ஸ்டைலில் சுவாரஸ்யமாக அதே சமயம் பிரமிப்பை ஏற்படுத்தும் விதமாக அமைந்திருக்கிறது இந்த நாவல் என்றால் மிகையாகாது.

படியுங்கள்...!

ரசியுங்கள்...!

பிரமிப்படையுங்கள்...!

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்
R.M.குமரவேல்
(ஆசிரியர்)

கிரேட் : 11
நாவல் : 8

உங்கள் படைப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி :
ராஜ்ஸ்ரீ பப்ளிகேஷன்ஸ்
'கிரேட் நாவல்'
49-B, சூர்யா அவென்யூ,
(குறிஞ்சி நகர் அருகில்)
குரோம்பேட்டை, சென்னை - 600 044.

# ஆபத்... பாவமுண்டு

**ராஜேஷ்குமார்**

## 1



**கோ**வை ரயில்வே ஸ்டேஷன்.

விடிவதற்கு இன்னும் நேரமிருந்தது. கிழக்குத் திசை இன்னமும் அட்டைக் கரியாகவே இருக்க – கோவைக்கே உரித்தான ஏர்கண்டிஷன் காற்று மட்டும் ஜிலீரென்று வீசிக் கொண்டிருந்தது.

மும்பையிலிருந்து வந்த ஒரு எக்ஸ்பிரஸ் ஐந்து நிமிட நேரம் கோவை ஜங்ஷனில் இளைப்பாறிவிட்டு நகர்ந்ததும் – பிளாட்பார இருட்டில் ஒளிந்து கொண்டிருந்த கேசவனும், குருமூர்த்தயும் வெளியே வந்தார்கள். இரண்டு பேருக்குமே அமாவாசை நிறம். வயது இருபத்தைந்திலிருந்து முப்பதுக்குள் இருக்கலாம். பட்டைச் சாராயம் குடித்து குடித்து ரத்தம் வற்றிப் போனதால் மோசமான உடம்புவாகு. இரண்டு பேருமே பத்து நாள் தாடி மீசையோடு தெரிந்தார்கள். கடந்த இரண்டு வருஷ காலமாய் ஒன்றாகவே படுத்து ஒன்றாகவே சாப்பிட்டு ஒன்றாகவே ஜெயிலுக்குப்

போனவர்கள். விடுதலையாகும் தேதிகளில் மட்டு வித்தியாசம் இருக்கும்.

நீங்கள் பார்க்கும் இந்த நிமிஷம் — பிளாட்பா இருட்டில் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண் நடந்தார்கள். தொலைவில் மேம்பாலம் சோடியம் வேப மாம்பழ நிற விளக்குகளோடு தெரிந்தது.

''டேய் குரு...'' கேசவன் கூப்பிட்டான்.

''என்னடா...?''

''இன்னிக்கு நாலு வேகன் நிறைய மீன் கூடை பாலக்காட்டிலிருந்து வருதாம். கவனிப்பு கம்மியாத்தா இருக்கும். எப்படியாவது ரெண்டு கூடை மீனாவது திருடணும்...''

''அமுக்கிடலாம்...''

''நான் கரீம் பாய்கிட்டே ரேட் பேசிட்டேன்...''

''எவ்வளவு பேசியிருக்கே...?''

''பத்து கிலோ கூடை மீன் ஐநூறு ரூபா...''

''வஞ்சிரம் மீனாயிருந்தா...?''

''ஆயிரம் ரூபா.''

''நீ சொன்ன ரேட்டுக்கு கரீம்பா ஒத்துக்கிட்டாரா...?''

''ஒத்துக்கிட்டார்.''

''அட்வான்ஸ் கேட்டியா...?''

''கேட்டேன்.''

''என்ன சொன்னார்...?''

''செய்யறது திருட்டுத் தொழில். இதுக்கென்னட அட்வான்சுன்னு முறைச்சுப் பார்த்தார்.''

''அவர் மட்டும் திருட்டு மீனை வாங்கி வெளியில் கொள்ளை லாபத்துக்கு விக்கலாமா...? சரியான கஞ்ச புடிச்ச ஆளு...'' அவன் சொல்லிக் கொண்டிருக்கு போதே பின்பக்கம் அந்தக் குரல் கேட்டது.

''டேய் நில்லுங்கடா ரெண்டு பேரும்...''

அதிர்ந்து போய் திரும்பிப் பார்த்தார்கள்.



கழுத்துக்கு மப்ளர் சுற்றியிருந்த அந்த கான்ஸ்டபிள் தெரிந்தார். கையில் டார்ச்சும் தடியும் பளிச்சிட்டது.

''ரெண்டு பேரும் இங்கே என்னடா பண்ணிக் கிட்டிருக்கீங்க...?''

குருமூர்த்தி பவ்யமாய் சொன்னான்.

''ரயிலுக்காக... காத்திட்டிருக்கோம் சார்...''

''எந்த ஊருக்குப் போறீங்க...?''

''ஒலவக்கோடு.''

''எங்கே டிக்கெட்டை காட்டு பார்க்கலாம்...''

முன்னேற்பாடாய் வாங்கி வைத்திருந்த இரண்டு டிக்கெட்டுகளையும் சர்ட்டிலிருந்து எடுத்து நீட்டினான் குருமூர்த்தி. வாங்கிப் பார்த்த கான்ஸ்டபிள் அதை அவர்களிடமே கொடுத்துவிட்டு சந்தேகப் பார்வையாய் பார்த்தபடியே நடந்தார்.

குருமூர்த்தியும் — கேசவனும் ஒருத்தரை யொருத்தர் பார்த்துக் கொண்டார்கள். ''என்னடா... போலீஸ்காரர் இந்த முறை முறைச்சுட்டு போறார்?''

''வழக்கமா வர்ற கான்ஸ்டபிளைக் காணோமே...''

''ட்யூட்டி மாத்திருப்பாங்க...''

''சரி, வா. இப்படியே இருட்டுல இறங்கி மூணாவது பிளாட்பாரத்துக்கு போயிடலாம். பாலக்காடு வேகன் வர்ற நேரம்..''

''போலீஸ்காரரு போயிட்டாரான்னு பாரு...''

''போயிட்டார்...''

''சரி, கீழே இறங்கு...''

இருட்டில் தண்டவாளத்தில் இருவரும் இறங்கினார்கள். சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு தண்டவாளங்களைக் கடந்தார்கள்.

மூணாவது பிளாட்பாரத்துக்கு வந்தார்கள்.

பிளாட்பாரம் வெறிச்சோடிக் கிடக்க, நான்கைந்து பிச்சைக்காரர்கள் மட்டும் சிமெண்ட் பெஞ்சுகளில் மக்கட்டைகளாய் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

ரெயில்வே வேகனில் வரும் மீன் கூடைகளை திருடுவதற்காக குருமூர்த்தியும் கேசவனும் மூன்றாவ பிளாட்பாரத்தில் காத்துக் கொண்டிருந்த அதே நேர — ஸ்டேஷனுக்கு வெளியே ரெயில்வே போலீ இன்ஸ்பெக்டர் தாமோதரர் தன் எதிரே நின்றிருந் கான்ஸ்டபிளிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

''கூட்ஸ் வேகன்ல மீன் கூடைகள் திருட்டு போறது சம்பந்தமா நிறைய கம்ப்ளைய்ண்ட் வந்திட்டிருக்கு. நேத்து ராத்திரி டி.எஸ்.பி.கூப்பிட் என்னை எகிறிட்டார். இன்னும் ரெண்டு நாள்ல அந் திருட்டு கோஷ்டியை அமுக்கணும்... இல்லேன்ன போலீஸ் உடுப்பை கழட்டி வெச்சிட்டு வீட் பொண்டாட்டிக்கு ஒத்தாசையா இருக்க வேண் வந்துடும்.''

''நான் தினமும் அந்தப் பக்கமாத்தான் பார போறேன் ஸார்... எவனும் என் கண்ணுக்கே தட்டுப்படுறதில்லை...''

''போய்யா... போய் ஒழுங்கா வேலையைப் பாரு இன்னும் கொஞ்ச நேரத்துல பாலக்காட்டிலிருந் வேகன்ஸ் வரும். வேகன்சுக்குப் பக்கத்துல எவனாவ சந்தேகப்படும்படியா நின்னுட்டிருந்தா... உடனே தள்ளிக்கிட்டு வா. மத்ததை நான் கவனிச்சுக்கிறேன்.''

''எஸ் ஸார்...''

''இதோ பாரய்யா....திருடனைப் பிடிக்கிறதுக் யூனிபார்மோட போகாதே. ஒரு அழுக்குச் சட்டை மாட்டிகிட்டு லுங்கி கட்டிகிட்டு போ. ஒரு பெஞ்சு படுத்து தூங்குற மாதிரி பாவ்லா பண்ணு. ஆசா வேகனுக்குள்ளே நுழைஞ்சு மீன்கூடை மேல கை வெச்சான்னா போய் அமுக்கிடு...''

''சரி சார்...''

''மீனைத் திருடறவன்கிட்டே கமிஷ வாங்கிகிட்டு... அவனை விட்டுடாதே. எனக் எப்படியும் தெரிந்து போயிடும்.''

★★★



பாலக்காட்டிலிருந்து வந்த சரக்கு ரயில் மூன்றாவது பிளாட்பாரத்தில் வந்து நின்றிருந்தது. வேகன்கள் திறந்து கிடக்க — மீன் நாற்றம் அமோகமாய் பிளாட்பாரம் பூராவும் மணத்தது. இருட்டில் ஒண்டிக் கொண்டு ஒரு தூண் மறைவில் உட்கார்ந்திருந்த கேசவனும் — குருமூர்த்தியும் சுற்றும் முற்றும் பார்த்தார்கள்.

பிளாட்பாரம் முழுவதும் அரையிருட்டு.

குறைப்பிரசவமாய் வெளிச்சம்.

''குரு...''

''என்னடா....?''

''மணி எவ்வளவு....?''

''அஞ்சே கால்...''

''வேகனுக்குப் போலாமா...?''

''ம்... போலாம்...''

''பிளாட்பாரத்துல யாருடைய தலையாவது தெரியுதா பாரு...?''

''ஒரு ஜீவராசிகூட இல்லை,...''

''நல்லா பார்த்துக்க... எவனாவது எங்கேயாவது ன்னு பார்த்திட்டிருக்கப் போறான்...''

''என்னோட பார்வைக்கு எட்டின வரைக்கும் ார்த்துட்டேன்... ஒரு ஈ காக்காய் இல்லை. கும்பல் ல்லாம் முதல் பிளாட்பாரத்துலதான்...''

''சரி... எந்திரி... நான் முன்னாடி போய் வகனுக்குள்ளே நுழையறேன். நீ பின்னாடியே வா...'' ருமூர்த்தி சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே றுவிறுவென்று நடந்து போய் வேகனுக்குள்ளே ழைந்தான்.

மீன் நாற்றம் குபீரென்று ஆளையே தூக்கியது. வகனுக்குள் பரவியிருந்த இருட்டை கைகளால் டவிக் கொண்டே கூடையருகே உட்கார்ந்தான் ருமூர்த்தி.

''கேசவா... தீக்குச்சியை எடுத்து உரசு...''

உரசினான்.

கம்பார்ட்மெண்டுக்கு ஒரு அவசர வெளிச்ச... வந்தது. வேகன் பூராவும் சொத சொதவென்றிருக்... மீன் நிரம்பிய கோணிப்பை கூடைக்குள்ளிருந்து நீ... கொட்டியது.

''குரு! கூடையை அள்ளு...''

''வஞ்சிர மீன் கூடையா பார்த்து அள்ளலாம். அப்பத்தான் கரீம்பாய் ரேட்டைக் கூட்டித் தருவார்...''

''அதையெல்லாம் பார்த்திட்டிருக்க நேரமில்லை... குரு... எதையாவது தூக்கிக்க... நானும் ஒண்ணை... தூக்கிக்கறேன்...''

குரு 'தம்'பிடித்து கூடையைத் தூக்கி... கொண்டான்.

தொடர்ந்து கேசவனும் ஒரு கூடையைத் தூக்கி... கொள்ள இருவரும் வேகனை விட்டு வெளி... வந்தார்கள்.

''கேசவா! நின்னு திரும்பித் திரும்... பார்த்திட்டிருக்காமே என் பின்னாடியே ஓடி வ... கூட்ஸ்ஷெட்ரோட்டு கார்னர்ல கரீம்பாய் நமக்கா... காத்திட்டிருப்பார்.''

''ம்...ம்...நான் வர்றேன்...நீ முன்னாடி பார்த்... ஓடு.''

இருவரும் இறைக்கும் மூன்று நிமிஷ ஓட்ட... கூட்ஸ்ஷெட் ரோட்டுக்கு வந்தார்கள்.

கார்னரில் கரீம்பாய் லுங்கியைத் தூக்கிக் கொண்... வாயில் புகையும் பீடியோடு காத்திருந்தா... குருமூர்த்தியையும், கேசவனையும் பார்த்தது... மலர்ந்தார்.

''சீக்கிரம் வாங்கடா...''

கரீம்பாயை நெருங்கி மீன் கூடைக... வைத்துவிட்டு இறைத்தார்கள்.



''பாய்...! சீக்கிரமா பணம் குடுங்க...'' குருமூர்த்தி அவசரப்படுத்தினான்.

''கூடையில் என்ன மீனுடா...?''

''என்னவோ ஒண்ணு... பணம் கொடுங்க பாய்...''

''கூடையிலே என்ன மீனுன்னு பார்த்துட்டுத்தான் பணம் தருவேன். வெறும் கெண்டையா இருந்தா... பேசின பணத்துல பாதியைக் குறைச்சுடுவேன்...''

''சரி... சரி... கூடைக்குள்ளே கையைவிட்டு ஒரு மீனை எடுத்துப் பாருங்க... செகண்டல என்ன மீனுன்னு தெரிஞ்சுடும்...''

கரீம்பாய் கோணிப்பையைக் கிழித்து –?

உள்ளே கையை விட்டு,

ஒரு மீனை உருவினார்.

தெருவிளக்கு வெளிச்சத்தில் உயர்த்திப் பார்த்தார்.

அடுத்த விநாடி –

குபீரென்று அதிர்ச்சி அவர் உடம்பு பூராவும் ஓடியது.

அவர் கையில் இருந்தது மீனில்லை!

நொத நொதவென்று அழுகிப் போயிருந்த ஒரு மனிதக் கை.

## 2



கரீம்பாயின் கையிலிருந்த – அந்த வெட்டப்பட்ட கை அதிர்ச்சியில் நழுவி கீழே விழுந்தது. குருமூர்த்தியும், கேசவனும் பயந்து போய் இரண்டடி பின்வாங்கினார்கள். கரீம்பாய் பதட்டமாய் கேட்டார்.

''என்னடா இது... மீன் கூடைக்குள்ளே துண்டான கையிருக்கு...?''

''எங்களுக்குத் தெரியாது பாய்...''

''எவனோ எவனையோ தீர்த்துக்கட்டி... அவனோட உடம்பைக் கூறு போட்டு உள்ளே வெச்சிருக்கான் போலிருக்கு...''

''கூடையை அவுத்து பார்க்கலாமா பாய்?''

''அந்த கர்மத்தை வேற முழுசா பார்க்கணுமா...?'

போலீஸ் கையில மாட்டிக்கிறதுக்கு முந்தி ரெண்டு
கூடையையும் அந்த சாக்கடையில வீசிட்டு ஓடி
போயிடுங்க... போலீஸ் அமுக்கினாங்கன்னா விவகார
பெரிசா போயிடும்...''

''பெரிசா போயிடுச்சி கரீம்பாய்...''

பின்பக்கம் குரல் கேட்டு மூன்று பேரும் திரும்பி
பார்த்தார்கள். போலீஸ் இன்ஸ்பெக்டர் தாமோதரும்
கைலி சர்ட்டோடு ஒரு கான்ஸ்டபிளும் நின்றிரு
தார்கள். ஓட முயன்ற குருமூர்த்தியும், கேசவனு
தாமோதரின் கையிலிருந்த பிஸ்டலைப் பார்த்து
அப்படியே ஆணியடித்த மாதிரி நின்றார்கள்.

''ரெண்டு பேரும் கூடைகளைத் தூக்
அவங்கவங்க தலைமேல வெச்சுக்குங்க...! கரீம்பாய்.
கீழே கிடக்கிற கையை நீ எடுத்துக்க...''

இன்ஸ்பெக்டர் தாமோதர் சொன்னப
செய்தார்கள். மூன்று பேர்களையும் பிஸ்டலின் நுனியி
நகர்த்திக் கொண்டு ஸ்டேஷனை நோக்கிப் போனா

★★★

போலீஸ் ஸ்டேஷன்.

வெளியே கோவை விடிந்து கொண்டிருக்க
ஸ்டேஷனின் உள்ளே ஒரு பதட்டம் அரும்பி
கொண்டிருந்தது. தாமோதர் கரீம்பாயை விசாரித்து
கொண்டிருந்தார்.

''கரீம்பாய்! இது யாருடைய கை...?''

''எனக்குத் தெரியாது சார்...''

''பின்னே உங்க கைக்கு எப்படி வந்தது...?'

''சார்... நான் உண்மையைச் சொல்லிடறேன் சா
நான் வழக்கமா இவங்ககிட்டயிருந்து திருட்டு மீ
வாங்குவேன். வழக்கமா கூடையில என்ன மீ
இருக்குன்னு பார்த்து வாங்குவேன்... இந்தக் கையை
பற்றி எனக்கு ஒண்ணும் தெரியாது சார்...''



குருமூர்த்தியும் கேசவனும் ஒன்றாய் கைகளை குவித்தார்கள். ''எங்களுக்கும் ஒண்ணும் தெரியாது சார்... திருடிட்டு வந்த மீன் கூடையிலே யாரோ கையைப் போட்டு வைச்சிருக்காங்க சார்...''

''இந்த திருட்டு மீன் தொழிலை எத்தனை நாளா நடத்தறீங்க?''

''கொஞ்ச நாளாத்தான் சார்...''

''கான்ஸ்டபிள் இந்த மூணு பேரையும் லாக் அப்புல கொண்டு போய் வை... இந்த 'கை' விவகாரத்தைப் பார்த்துட்டு அப்புறமா அவங்களைக் கவனிப்போம்...''

''எஸ் சார்...''

கான்ஸ்டபிள் மூன்று பேர்கள்ளயும் லாக்கப்பிற்கு ஓட்டிக்கொண்டு போய் உள்ளே அடைத்துவிட்டு திரும்பினார். இன்ஸ்பெக்டர் தாமோதர் ஒரு பழைய நியூஸ்பேப்பரின் மேல் வைக்கப்பட்டிருந்த அந்தக் கையை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்தக் கை – மணிக்கட்டு வரைக்கும் வெட்டப் பட்டிருந்த ஒரு மனிதனின் வலது கை. நீர் வடியும் மீன் கூடையில் வந்ததால் நொத நொதத்து போயிருந்தது. தோலுரிந்து சிவப்பாய் சதையைக் காட்டியது.

''கான்ஸ்டபிள்!''

''சார்...''

''அந்த ரெண்டு மீன் கூடையையும் நல்லா கிளறிப் பாரய்யா... இன்னும் எதையாவது வெட்டிப் போட்டிருக்கானான்னு பார்த்துடலாம்...''

கான்ஸ்டபிள் ஒரு குச்சியால் இரண்டு கூடை களையும் கிளறிப் பார்த்தார். ரெண்டு நிமிஷங்கள் கழித்து நிமிர்ந்தார்.

''எல்லாமே மீன்தான் சார்...''

''நல்லா பார்த்தியா...?''

''பார்த்தேன் சார்...''

இன்ஸ்பெக்டர் தாமோதர் நாற்காலியில் சாய்ந்து டெலிபோனின் ரிசீவரை எடுத்துக் கொண்டார். சில எண்களைச் சுழற்றிவிட்டு – மறுமுனையில் லைன் கிடைக்க காத்திருந்தார்.

லைன் கிடைத்தது.

மறுமுனையில் ''ஹலோ...'' சொன்னார்கள்.

''இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன்...?''

''எஸ், ஹோல்டிங்...''

''நான் இன்ஸ்பெக்டர் தாமோதர் பேசறேன். குட்மார்னிங்...''

''குட்மார்னிங் தாமோதர். என்ன விஷயம்...?''

''உங்க பீட்டுக்கு ஒரு கேஸ் கொண்டு வந்திருக்கேன்.''

''கேஸா... என்ன கேஸ்...?''

''பாலக்காட்டிலிருந்து டிரெய்ன்ல வந்த மீன் கூடையில ஒரு மனிதனோட கை இருந்தது. மணிக்கட்டு வரைக்கும் வெட்டப்பட்ட வலது கை...''

''மை குட்னஸ்... எப்போ கண்டுபிடிச்சீங்க...?''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான்.''

''எப்படி...?''

''மீன் கூடைகளை வேகனிலிருந்து திருடற ஒரு கும்பலை மடக்கி பிடிச்சப்போ, அந்த கை கூடையில இருந்தது தெரிய வந்தது.''

''மீன் கூடையில கை மட்டுந்தான் இருந்ததா...?''

''ஆமா...''

''நானும் சப்–இன்ஸ்பெக்டர் அவினாஷும் இன்னும் அஞ்சு நிமிஷத்துல அங்கே வர்றோம்.''

''ப்ளீஸ் வாங்க.''

★★★

பாலக்காடு. மத்தியான நேரம்.

பணிக்கரின் தென்னந்தோப்புக்குள் காற்று குளுமையாய் இருக்க, ஒரு மரத்துக்குப் பின்னால்



தங்கமும், ராஜனும் தோளை தோளை இடித்தபடி உட்கார்ந்திருந்தார்கள். இரண்டு பேர் முகங்களிலும் தீவிரமான கவலை.

தங்கம் மாநிறத்தில் சுருட்டை முடியோடு வளப்பமாய் தெரிய – ராஜன் செக்கச்சேவேலென்று சினிமா நடிகர் சுரேஷை ஞாபகத்துக்கு கொண்டு வந்தான்.

''என்ன தங்கம்... நீ முடிவா என்னதான் சொல்றே...?''

''எனக்கு பயமாயிருக்கு ராஜன்...''

''என்ன பயம்...? அந்த ஆஸ்பத்திரியில் இருக்கிற டாக்டரம்மா எனக்கு ரொம்பவும் தெரிஞ்ச அம்மா. விஷயம் வெளியே கசியாம... காதும் காதும் வெச்ச மாதிரி டி அண்ட் ஸி பண்ணிட்டு வந்துடலாம்...''

''வீட்ல என்னான்னு சொல்லிட்டு வர்றது ராஜன்?''

''ஒலவக்கோட்டில ஒரு தோழியோட கல்யாணம்... போகணும்ன்னு சொல்லிட்டு வாயேன்...''

எங்க அப்பாவைப் பத்தி உங்களுக்குத் தெரியாதா, ராஜன்? அவர் கல்யாணப் பத்திரிகை கேட்பார்.''

வேற என்னதான் சொல்லிட்டு வரமுடியும்?''

''அதான் யோசிக்கிறேன்.''

''நீ யோசிச்சு ஒரு முடிவுக்கு வர்றதுக்குள்ளே... நம்ம வாரிசு உன்னோட வயித்துல மளமளன்னு வளர்ந்துடுவான்...''

''நான் எவ்வளவோ தரம் வேண்டாம் வேண்டாம்னு சொன்னேன். நீங்கதான் கேட்கலை...''

''சரி... சரி நடந்து போன விவகாரத்தைப் பத்தி பேசி ஒரு பிரயோஜனமும் இல்லை. நீ வீட்டுல் ஏதாவது காரணத்தை சொல்லிகிட்டு ஒலவக்கோடு வந்தேயாகணும்...''

''இப்படி செஞ்சா என்ன ராஜன்?''

''எப்படி...?''

''என்னோட அக்கா மீராவுக்கு இன்னும் பதினஞ்சு நாள்ல கல்யாணம் நடக்கப் போகுது. கல்யாண அழைப்பிதழ்களெல்லாம் வீட்டுக்கு வந்தாச்சு. அதுல ஒரு பத்து அழைப்பிதழை எடுத்துகிட்டு ஒலவக் கோட்டில் இருக்கிற என்னோட ஃப்ரண்ட்ஸுக்கு தரணும்னு அம்மாகிட்டே மாத்திரம் சொல்லிவிட்டு வந்துடறேன்...''

''எப்படியோ... நீ வந்தா சரி...''

''ராஜன்!''

''என்ன...?''

''அக்கா கல்யாணம் முடிஞ்சதுமே... நம்ம கல்யாணத்துக்கான ஏற்பாடுகளை நீதான் பண்ணணும்...''

''இதோ பார் தங்கம்... எனக்கு மட்டும் உன் கழுத்துல சீக்கிரமா தாலி கட்டணும்கிற ஆசை இருக்காதா...? உன் அக்கா கல்யாணம் முடிஞ்சதும் நம்ம கல்யாணம் நிச்சயமாயிடும். அது சரி... கல்யாணத்துக்கு எனக்கு அழைப்பிதழ் கிடைக்காதா?''

''கண்டிப்பா உண்டு...''

''கல்யாணம் எங்கே நடக்குது...?''

''குருவாயூர் கோயில்லே...''

''நம்ம கல்யாணத்தையும் அங்கேயே வெச்சுக்கலாமா தங்கம்...?''

''நீங்க எங்கே வெச்சுகிட்டாலும் சரி... சீக்கிரமா என் கழுத்தில் தாலி ஏறணும். அவ்வளவுதான்.''

''சரி புறப்படலாமா...? இன்னும் கொஞ்ச நேரத்துல தோப்புக்கு வேலை செய்ய ஆட்கள் வந்துருவாங்க... யாருடைய கண்ணிலாவது படறதுக்கு முந்தி நாம கழண்டுக்கிறது நல்லது.''

இருவரும் எழுந்தார்கள்.

★★★

இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணனும், சப்-இன்ஸ்பெக்டர் அவினாஷும் வயர்லெஸ்



பொருத்தப்பட்ட போலீஸ் பைக்கினின்றும் இறங்கினார்கள்.

ஸ்டேஷனுக்குள் நுழைந்து – இன்ஸ்பெக்டர் தாமோதரின் இருக்கைக்கு முன்னால் இருந்த நாற்காலிகளில் நிரம்பினார்கள்.

''காலங்கார்த்தால 'கை' விவகாரமா...? அதை கொண்டாங்க பார்க்கலாம்...'' நவநீதகிருஷ்ணன் சொல்ல – கான்ஸ்டபிள் செய்திதாளில் சுற்றிய அந்த கையை மேஜையின் மீது கொண்டு வந்த வைத்தார்.

மேஜை மேலிருந்த இரும்பு ஸ்கேலை எடுத்து – அந்தக் கையை மெல்லப் புரட்டினார் நவநீத கிருஷ்ணன். அது உயிருள்ள ஜீவராசி மாதிரி மல்லாந்து விழுந்தது.

''அவினாஷ்!''

''சார்...''

''கையோட ஷேப்பை பார்த்தா... இது ஆணோட கை மாதிரி தெரியலை...?'' அந்தக் கையை அவினாஷ் உற்றுப் பார்த்துவிட்டு நிமிர்ந்தார்.

''நோ... சார்... இது ஒரு பெண்ணோட கைன்னு நான் நினைக்கிறேன்.''

''எப்படி சொல்றீங்க....?''

அவினாஷ் ஒரு புன்னகையோடு அந்தக் கையின் ஒரு பகுதியைச் சுட்டிக்காட்டி ''இதைப் பாருங்க சார்...'' என்றார்.

3



சப்–இன்ஸ்பெக்டர் சுட்டிக்காட்டிய இடத்தைப் பார்த்தார் இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன். அவர் சுட்டிக்காட்டிய இடம் கையின் மேற்புறம். சில விநாடிகள் உற்றுப் பார்த்துவிட்டு உதட்டைப் பிதுக்கினார். ''எனக்கும் ஒன்னும் தெரியலையே...''

''கொஞ்சம் உத்துப் பாருங்க சார்... நொத நொதத்துப் போன சதையின் மேல் லேசான பச்சைக் கோடுகள் தெரியும்...''

நவநீதகிருஷ்ணன் பார்வையை எக்ஸ்ரேவாக மாற்றிப் பார்த்துவிட்டு ''எஸ்... தெரியுது... அதென்ன நரம்புகளா...?''

''நோ சார்... பச்சை குத்தின அடையாளம்...''

''மே பி. பெண்கள் மட்டும்தான் பச்சை குத்திக்கிறாங்களா? ஆண்களும் பச்சை குத்திக் கிறாங்களே...''

''மணிக்கட்டு மேலே ஆண்கள் பச்சை குத்திக்க மாட்டாங்க் சார். தொண்ணூறு சதவீதம் இது ஒரு பெண்ணோட கையாகத்தான் இருக்க முடியும்... விரல்களோட நீளத்தையும் நகங்களோட அமைப்பையும் பார்க்கும்போது — அது இன்னமும் ஊர்ஜிதமாகுது சார்...''

''ஃபாரன்ஸிக் லாப்புக்கு அனுப்பினா... மிஸ்டர் முனிராஜ் துல்லியமா சொல்லிடுவார். இதை அங்கே அனுப்ப ஏற்பாடு பண்ணிடுங்க மிஸ்டர் தாமோதர்...''

நவநீதகிருஷ்ணன் மறுபடியும் எழுந்து லாக்கப் அருகே வந்தார். கம்பிகளுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த கேசவனும் குருமூர்த்தியும் மலங்க மலங்க விழித்துக் கொண்டு பார்வையில் மிரட்சியைக் காட்டினார்கள்.

''ஏண்டா... இந்த மீன் திருடற தொழிலை எத்தனை நாளா பண்ணிட்டிருக்கீங்க...?''

குருமூர்த்தி மெல்லிய குரலில் சொன்னான்.

''ரெண்டு வருஷமா சார்.''

''அந்த வெட்டுப்பட்ட கை யாரோடதுன்னு தெரியாதா...?''

''தெரியாது சார்...''

''உன்னோட கோஷ்டியில மொத்தம் எத்தனை பேர்...?''



''கோஷ்டியல்லாம் கிடையாது சார்... நானும் இவனும் மட்டும்தான். இனிமே இந்த திருட்டு வேலையை பண்ணமாட்டோம் சார்... எங்களை விட்டுடுங்க சார்'' இரண்டு பேரும் கையெடுத்து கும்பிட்டு கெஞ்ச ஆரம்பித்தார்கள்.

★★★

தங்கமும் ராஜனும் ஒலவக்கோடு பஸ் நிலையத்தில் இறங்கும்போது காலை பதினோரு மணி. வெய்யில் அகோரமாய் தகித்தது. அந்த அ[illegible] பஸ் ஸ்டாண்ட் பூராவும் கேரளா டிரான்ஸ்போர[illegible] தகர டப்பா பஸ்கள் மொலுமொலுவென்று நி[illegible] மிருந்தன. எல்லா பஸ்களிலும் ஜனங்கள் வழிந்தார்கள்.

பஸ் ஸ்டாண்டை விட்டு வெளியே வந்தார்கள் தங்கமும் ராஜனும். தங்கத்தின் பார்வை பயமாய் எல்லா பக்கமும் அலைந்தது.

''என்ன தங்கம், ஆட்டோ பிடிச்சுடலாமா...?''

''ஆஸ்பத்திரிக்கு ரொம்ப தூரம் போகணுமா...?''

''பக்கந்தான்... ஆனா வெய்யில்ல உன்னால நடக்க முடியாது. ஆட்டோ பிடிச்சு போயிடுவோம்....''

''ஆட்டோ பிடிக்கிறதுக்கு முன்னாடி இன்னொரு காரியம் பண்ணணும் ராஜன். அந்தக் காரியத்தைப் பண்ணினாத்தான் நாம ஆஸ்பத்திரிக்கு போகமுடியும்...''

''என்னது...?'' ராஜன் குழப்பமாய் கேட்டான்.

''டாக்டரம்மா சந்தேகப்படாம இருக்கிறதுக்காக கழுத்துல தாலி கட்டிக்க வேண்டாமா?''

''பார்த்தியா... மறந்தே போயிட்டேன். வா... வா... மொதல்ல அந்த ஹோட்டலுக்குப் போய் கூட்டமில்லாத பேமிலி ரூம் எடுத்து ஒரு காப்பி சாப்பிட்டுகிட்டே தாலி கட்டற வைபவத்தை முடிச்சுக்கலாம்...''

ரோட்டைக் கிராஸ் செய்து சௌபாக்கியா என்று நெற்றியில் போர்டு பதித்த அந்த ஹோட்டலுக்குள் நுழைந்தார்கள். தங்கம் தயங்கித் தயங்கி அவனைத் தொடர்ந்தாள். பார்வையால் சுற்றுப்புறத்தின் நான்கு திசைகளையும் சட்டென்று துழுவினாள்.

''ராஜன் எனக்கு பயம்மாயிருக்கு...''

''பயப்டாம வா தங்கம்... நீ இப்படி மிரள மிரள பார்த்தாதான் மத்தவங்களுக்கு சந்தேகம் வரும். சகஜமா புருஷன் கூட நடந்து போற பெண்டாட்டி மாதிரி நடந்து வா. பார்க்கிற யாருக்கும் சந்தேகம் வராது...''

தங்கம் தலையாட்டிக் கொண்டே பயத்தில் வியர்க்க ஆரம்பித்துவிட்ட முகத்தை சேலைத் தலைப்பால் ஒற்றிக் கொண்டே ஹோட்டலுக்குள் நுழைந்தாள்.

ஹோட்டலில் சொற்ப ஜனங்கள் உட்கார்ந்து எதையோ கொரித்துக் கொண்டிருக்க – ராஜன் பக்கவாட்டில் 'பேமிலி ரூம்' என்று சொன்ன அறைக்குள் தள்ளுகதவைத் திறந்துகொண்டு பிரவேசித்தான்.

''ம்... வா... வந்து உக்கார்...''

பக்கத்து பக்கத்து நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள். தங்கம் சாய்ந்து உட்கார்ந்து பெருமூச்சு விட்டாள்.

''யாராச்சும் பார்த்துடுவாங்களோங்கிற பயத்துல உயிர் போய் உயிர் வருது ராஜன். இனிமே நாம பழகறதுல ரொம்பவ:ம் ஜாக்கிரதையா இருக்கணும்...''

ராஜன் சிரித்தான்.

''இனிமே ஜாக்கிரதையா இருந்து என்ன பிரயோஜனம் தங்கம்... அதான் தலைக்கு மேலே வெள்ளம் போயிடுச்சே...''

தங்கம் ஏதோ பேச முயற்சித்தபோது –

வெயிட்டர் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தான். கையிலிருந்த பென்சிலால் காதை குடைந்து கொண்டே கேட்டான்.

''எந்தா வேணும் ஸாரே?''

''ரெண்டு கப் கோப்பி...''

வெயிட்டர் கதவுக்குப் பின்னால மறைந்ததும் – ராஜன் அவசர அவசரமாய் தன் சர்ட் பாக்கெட்டில் இருந்த காகிதப் பொட்டலத்தை எடுத்துப் பிரித்தான்.



உள்ளே முன்கூட்டியே எடுத்து வைக்கப்பட்ட–

மஞ்சள் தடவப்பட்ட தாலிச்சரடு.

ஏற்கெனவே மூன்று முடிச்சு போட்டு வைத்திருந்த தாலிச்சரட்டை கையில் எடுத்தான் ராஜன். ''நீயே கழுத்துல போட்டுக்கிறியா... இல்லே... நானே போட்டு விடட்டுமா...?''

''நீங்களே போட்டு விடுங்க...''

தங்கம் தலையைக் குனிந்து கொள்ள – ராஜன் அந்த தாலிக்கயிற்றை கழுத்தில் மாட்டினான். அவளுடைய கண்களில் நீர் துளிர்த்தது.

''அட... ஏன் அழறே...?''

''எவ்வளவோ மங்களகரமா நடக்கவேண்டிய இந்த காரியம்... இவ்வளவு சீப்பா... ஒரு ஹோட்டல் ரூம்ல நடந்ததை நினைக்கும்போது மனசைக் கட்டுப்படுத்திக்க முடியலை ராஜன்.''

''பைத்தியம்...'' அவன் சிரித்தான். ''இது ஒரு செட்டப்பதானே? நிஜக் கல்யாணமா பண்ணிக் கிட்டோம்.... டாக்டரம்மா உன்னையும் என்னையும் பார்த்ததும் ஆயிரத்தெட்டு கேள்வி கேப்பா. அந்த கேள்விகளிலிருந்து நம்மை காப்பாத்தப் போறது இந்த தாலி என்கிற கேடயம்தான். தாலியை டாக்டரம்மாவுக்கு காட்டினா போதும். மத்தவங்களுக்கு தெரியாதபடி சேலைத் தலைப்பால் போர்த்திக்க.''

வெயிட்டர் காப்பி கோப்பைகளோடு வந்து மேஜையின் மேல் பரப்பினான். ''சாப்பிட ஏதாச்சும் வேணுமா ஸார்...'' மலையாளத்தில் கேட்டான்.

''வேண்டாம்...''

பில்லை எழுதி மேஜையின் மேல் வைத்துவிட்டு வெயிட்டர் நகர்ந்ததும், ராஜன் ஒரு காப்பி டம்ளரை தங்கத்தின் பக்கமாய் நகர்த்திக் கொண்டே கேட்டான்.

''ஊருக்கு கொஞ்சம் லேட்டா போனாலும் வீட்ல ஒண்ணும் சொல்ல மாட்டாங்களே...தங்கம்...''

''அம்மா ஒண்ணும் சொல்லமாட்டா... அப்பாதான் எகிறுவார். அப்பாகூட அக்கா மீராவும் சேர்ந்துக்குவா.''

ராஜன் காப்பியை யோசனையோடு உதட்டுக்கு கொடுத்து வயிற்றுக்கு வார்த்தான். மனசுக்குள் ஒரு திகில் வளை எலி மாதிரி அலைந்தது.

'யார்க்கும் தெரியாமல் தங்கத்தின் வயிற்றை சுத்தம் பண்ணிக் கொண்டு போக முடியுமா...? டாக்டரம்மாள் இரண்டு நாட்கள் இருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டாள்...?'

''என்ன ராஜன் யோசனை...?''

''வேற என்ன யோசனை...? உன்னையும் என்னையும் பத்திதான்... டி அண்ட் ஸி முடிகிற வரைக்கும் என் கூட்டுல உசிரே இருக்காது தங்கம்...''

''என்னங்க...?''

''ம்...'

''டி அண்ட் ஸி ஆபரேஷன் ரொம்ப வலிக்குமா...?''

''உனக்குத்தான் மயக்க மருந்து குடுத்துருவாங்களே...''

''ஆபரேஷன் பண்ணின பின்னாடி ரொம்பவும் வலிக்குமா...?''

''லேசா வலியிருக்கும்.... வலி இருந்தா என்ன செய்ய முடியும்...? கொஞ்சம் பொறுத்துக்க வேண்டியதுதான்.''

காப்பியைக் குடித்து முடித்து இருவரும் எழுந்தார்கள். தங்கம் சேலைத் தலைப்பால் கழுத்தையும் முதுகையும் இறுக்கமாய் போர்த்திக் கொண்டாள்.

''தங்கம்... தயங்காமே சகஜமா என் பின்னாடி வா... பார்க்கிறவங்களுக்கு சந்தேகம் வரும்படியா நடந்துக்காதே. மிரள மிரள ஜனங்களைப் பார்க்காமே... எம் மூஞ்சியைப் பார்த்து சிரிச்சு பேசிகிட்டே வா...''

கல்லாவில் பணத்தை செலுத்திவிட்டு —

இருவரும் வெளியே வந்தார்கள். ரோட்டின் ஓரமாய் நின்று ஆட்டோ ஒன்றை தேடிக் கொண்டிருந்தபோது தங்கத்தின் பார்வை எதேச்சையாய் பஸ் ஸ்டாண்டுக்குள் போய் — அப்போதுதான் பாலக்காட்டிலிருந்து வந்து



நின்ற பஸ்ஸிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த நபரின் மேல்பட்டது.

''ரா...ரா...ராஜன்...''

குரல் நடுங்கினாள்.

''என்ன தங்கம்...?''

''அ...அ...அங்கே பார்த்தீங்களா...? எ...எ... எங்கப்பா!''

★★★

**பா**ரன்ஸிக் லாபரட்டரியின் வாசலில் பைக்கை நிறுத்தினார்கள் இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணனும் சப்—இன்ஸ்பெக்டர் அவினாஷும்.

சாயந்தரம் மணி நான்கு.

லாபரட்டரியின் முன் அறையிலேயே கிடைத்தார் ஆய்வாளர் முனிராஜன். முகத்திற்கு கண்ணாடி கொடுத்து தலையில் பளீரென்று வழுக்கையை வாங்கி தொப்பை போட்டு குள்ளமாய் தெரிந்தார். ஷெர்வானி அமைப்பில் கோட் போட்டிருந்தார்.

''வாங்க இன்ஸ்பெக்டர்...''

''அந்த கை ரிப்போர்ட் ரெடியா மிஸ்டர் முனிராஜன்?''

''ரெண்டு மணிக்கே ரெடி.''

''ரிப்போர்ட் என்ன சொல்லுது...?''

''ஒரே குழப்பம்....''

''குழப்பமா...?''

''எஸ்... நானும் என்னோட சீனியர் டெக்னீசியன் விக்டரும் மூணு மணி நேரம் ட்ரை பண்ணிப் பார்த்தும் அது ஆணோட கையா பெண்ணோட கையான்னு கண்டுபிடிக்க முடியலை. சில சோதனைகள் ஆணுக்கு ஒத்துப் போகுது. இன்னும் எங்களாலே ஒரு முடிவுக்கு வரமுடியலை...''

நவநீதகிருஷ்ணனும் அவினாஷும் ஏமாற்றமாய் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள். என்ன முனிராஜ், ஒரேயடியாய் கண்ணை மூடிட்டீங்க?''

''நானென்ன செய்யட்டும் இன்ஸ்பெக்டர். ஒரு தலைமுடியை கொண்டாந்து குடுங்க. ஆணா பெண்ணான்னு சொல்ல முடியும். இடுப்பெலும்பை கொண்டு வந்து குடுங்க, ஆணா பெண்ணான்னு சொல்ல முடியும். ஒரு கையைக் கொண்டு வந்து கொடுத்தா கஷ்டம். ஏன்னா, ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே விதமான தசைநார்கள்தான். விரல்களோட அமைப்பை வெச்சும் இது ஆண், இது பெண்ன்னு சொல்ல முடியாது. நான் சந்திச்ச நிறைய ஆண்களுக்கு பெண்கள் மாதிரியே நீளமான விரல்கள் இருந்திருக்கு. ஸோ... இந்தக் கை ஒரு ஆணுக்கு சொந்தமா, பெண்ணுக்கு சொந்தமான்னு சொல்றது ரொம்பவும் கஷ்டம்...'' அவர் சொல்லிக் கொண்டே போக,

முதன் முதலாய் கேஸில் சிக்கல் ஆரம்பமாவதை உணர்ந்தார்கள் நவநீதகிருஷ்ணனும், அவினாஷும்.

## 4



கோவை ரயில்வே ஸ்டேஷன்.

பார்சல் புக்கிங் அண்ட் டெலிவரி செக்ஷன். காலை மணி பத்து. இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணனும், சப்–இன்ஸ்பெக்டர் அவினாஷும் கன்சர்ன் கிளார்க்கிடம் விசாரணை நடத்திக் கொண்டிருந்தார்கள்.

''அந்த ரயில் வேகன்ல வந்த மொத்த மீன் கூடைகள் எத்தனைன்னு சொல்ல முடியுமா ராகவன்?''

''மொத்தம் நூத்தி பதிமூணு சார்...''

''மீன் கூடைகள் எந்த ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஏற்றப்பட்டிருக்கு...''

''பாலக்காடு...''

''புக் பண்ணின பார்ட்டி யாரு...?''

''முகமது காசிம்...''

''அவர் எந்த ஊர்க்கு யார் பேர்க்கு புக் பண்ணியிருக்கார்?''



புக்கிங் கிளார்க் ராகவன் அழுக்கான ரசீதுகளைப் புரட்டிப் பார்த்து எச்சில் தொட்டு ஒன்றை உருவினார். மூக்குக் கண்ணாடிக்கு எதிரே உயர்த்திப் பிடித்துக் கொண்டு சொன்னார். ''நோட் பண்ணிக்குங்க சார்... எம்.சபாபதி, நெம்பர் ஃபார்ட்டி ஒன், தேர்ட் க்ராஸ் ரோடு, காந்திபுரம், கோயமுத்தூர்.''

''இந்த சபாபதி உங்களுக்கு ரெகுலர் கஸ்டமரா ராகவன்?''

''ஆமா சார்... வாரத்துல மூணு தடவை இவர்க்கு மீன் லோடு வரும். என்னிக்குமே இது மாதிரியான ஒரு சம்பவம் நடந்ததில்லை. ஒரு மனுஷக் கை மீன் கூடையில் இருந்ததா அவர்க்கு நியூஸ் தெரிஞ்சதுமே வேகன்ல வந்த அத்தனை மீன் கூடைகளையும் திருப்பி அனுப்பச் சொல்லிட்டார். ரெயில்வே போலீஸ் இன்ஸ்பெக்டர்தான் அதை திருப்பி அனுப்பாமே... அத்தனை கூடைகளையும் திறந்து பார்த்து அந்தக் கைக்கு சொந்தமான வேற உறுப்புகள் ஏதாவது இருக்கான்னு உள்ளே கிளறி பார்த்திட்டிருக்கார்...''

''புக் பண்ணின முகமது காசிம் அட்ரஸ் வேணுமே?''

''தர்றேன் சார்...'' ராகவன் மறுபடியும் ரசீதை உயர்த்திப் பார்த்து படித்தார். ''முகமது காசிம், ஃபிஷ்மெர்ச்சண்ட், நெம்பர் பைவ், மெயின் ரோடு, கொழிஞ்சம் பாறை.''

அவினாஷ் இந்த அட்ரஸை மளமளவென்ற டயரியில் குறித்துக் கொண்டிருக்க, நவநீதகிருஷ்ணன் யோசித்தார்.

'அந்த விபரீதம் முகமது காசிமிடமிருந்தோ அல்லது சப்பாபதியிடமிருந்தோதான் ஆரம்பமாகிறது. இரண்டு பேர்களையும் லாக்–அப்புக்கு கொண்டு போய் தட்டினால் உண்மை வெளியே வந்துவிடும்.''

''புறப்படலாமா சார்...?''

அவினாஷின் குரல் கேட்டு எழுந்தார் நவநீத கிருஷ்ணன். புக்கிங் கிளார்க் ராகவனிடம் விடை

பெற்றுக் கொண்டு வெளியே நின்றிருந்த ஜீப்பை நோக்கி இருவரும் நடந்தார்கள்.

''செத்தது ஆணா பெண்ணான்னு தெரிஞ்சாலாவது கேஸை கொஞ்சம் நகர்த்தி பார்க்கலாம். ஃபாரன்ஸிக் ரிப்போர்ட் அதைச் சொல்ல முடியாதுன்னு பெப்பே காட்டிடுச்சு. புக் பண்ணப்பட்ட பார்ட்டி சபாபதியும், புக் பண்ணின பார்ட்டி கொழிஞ்சம் பாறை முகமது காசிமும்தான் இந்த கேஸுக்கு உதவப் போகிற ஆசாமிகள்... அவங்களை விசாரிக்கிற விதத்துல விசாரிச்சாதான் உண்மை வெளியே வரும் அவினாஷ்.''

★★★

தங்கமும், ராஜனும் அவசர அவசரமாய் பஸ்ஸுக்குப் பின்னால் மறைந்தார்கள். இருவருடைய முகங்களிலும் குபீர் வியர்வை.

''என்ன தங்கம், உன்னோட அப்பா திடீர்னு ஓலவக்கோட்டுக்கு வந்திருக்கார்? அவர் வர்றது உனக்குத் தெரியாதா?''

''தெரியாது ராஜன்... நான் காலையில ஓலவக் கோட்டுக்கு போறதா சொன்னபோதுகூட அவர் தான் வரப்போறதைப் பத்தி சொல்லலே. திடீர்னு யாரையாவது பார்க்க வந்திருப்பார். நீங்க இப்படி மறைவா என் பக்கமா வாங்க...''

''உன்னை அவர் ப்பார்த்துடலையே...?''

''நல்லவேளை பார்க்கலை...''

பஸ்ஸின் முன்பக்க முகப்பினின்றும் மெல்ல தலையை நீட்டி எட்டிப் பார்த்தான் ராஜன். ''கிழக்கு பக்கமா வேகவேகமா நடந்து போறார்... கையில தோல் பை வெச்சிருக்கார்...''

''அந்தப் பக்கமா யாரை யர்க்கப் போறார்...?'' தங்கம் வியர்வை பெருகிவிட்ட முகத்தை சேலைத் தலைப்பால் ஒற்றிக் கொண்டே பதட்டமாய் சொன்னாள்.

''அவர் எங்கேயோ போயிட்டுப் போறார்... நீ இந்தப் பக்கமா வா தங்கம்... அந்த தெரு



முனைக்குப்போய் ஆட்டோவை பிடிச்சு ஆஸ்பிடலுக்கு போயிடலாம்...''

இருவரும் திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டே தெருமுனையில் நின்றிருந்த ஆட்டோ ஸ்டாண்டை நோக்கிப் போனார்கள்.

ஆட்டோ வரிசையில் முதலாவதாய் நின்றிருந்த ஆட்டோவை அமர்த்திக் கொண்டு புறப்பட்டார்கள்.

வேகமான ஐந்து நிமிஷ பயணம்.

''எனக்கு இன்னும் படபடப்பா இருக்குங்க...'' ராஜனின் கையை வியர்வை பிசுபிசுக்கும் கையால் பற்றிக் கொண்டாள் தங்கம்.

''உங்கப்பாதான் பார்க்கலையே... ஏன் பயப் படறே...?''

''இருந்தாலும் நெஞ்சு 'திக் திக்'ன்னு அடிச்சுக்குது... அவர் மட்டும் பார்த்திருந்தா இந்நேரம் என்னாயிருக்கும்?''

ஹாஸ்பிடல் வாசலில் ஆட்டோ நின்றது. ராஜனும் தங்கமும் கீழே இறங்கினார்கள். ராஜன் ஆட்டோ டிரைவர்க்கு காசை கொடுத்துக் கொண்டிருக்க, தங்கம் அந்த ஆஸ்பத்திரியை பிரமிப்போடு பார்த்தாள்.

ஆஸ்பத்திரிக்குப் பக்கத்தில் அதிக கட்டிடங்கள் இல்லாமல் ஒருவித பாலைவன வெறுமையோடு தெரிந்தது. கேட்டின் இடதுபக்க சுவரில் அந்த பெயர்ப்பலகை தெரிந்தது. 'டாக்டர் ஞானசௌந்தரி எம்.பி.பி.எஸ்.' மலையாளம், தமிழ், ஆங்கிலம் என்று மூன்று பாஷையிலும் பெயிண்ட் எழுத்துக்கள் மின்னின.

''உள்ளே போலாமா தங்கம்...?''

''என்னங்க, ஆஸ்பத்திரியை பார்த்தா ஒரு மாதிரி இருக்கு...''

''எப்படி இருக்கு...?''

''ஆட்களே இல்லாத மாதிரி...''

''இந்த ஹாஸ்பிடல் கருச்சிதைவுக்கு பெயர் போனது. அது சம்பந்தப்பட்ட கேஸ்கள் மட்டும்தான் வரும். அதனாலதான் கூட்டம் இருக்காது.''

இருவரும் காம்பௌண்ட் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனார்கள். போர்டிகோ படிகளில் உயர்ந்து வராந்தாவில் கால் பதித்தபோது எதிரே அந்த நர்ஸ் எதிர்ப்பட்டாள்.

''டாக்டரம்மா இருக்காங்களா?''

''அந்த கடைசி ரூமுக்கு போங்க. டாக்டர் வெளியே புறப்படுகிற நேரம். சீக்கிரமா போங்க...''

இருவரும் வராந்தாவில் வேகவேகமாய் நடந்து கடைசி அறையைத் தொட்டு,

''வணக்கம் டாக்டரம்மா...''

கைகளை குவித்தார்கள்.

ஞானசௌந்தரி மௌனமாய் நாற்காலிகளைக் காட்டினாள். இருவரும் உட்கார்ந்தார்கள். தங்கம் தலையை குனிந்தபடி மேஜையின் விளிம்பைக் கீறிக் கொண்டிருக்க, ராஜன் அசட்டுச் சிரிப்போடு டாக்டரம்மாவை ஏறிட்டான். அவள் கேட்டாள்.

''யார்க்கு என்ன உடம்பு...?''

''இவ என்னோட ஒய்ப் டாக்டர்... நவ் ஷீ ஈஸ் பிரக்னன்ட்.''

''கர்ப்பம் வேண்டாம்ன்னு முடிவு பண்ணிட்டீங் களாக்கும்...?'' டாக்டரம்மாள் புன்னகையோடு கேட்டாள்.

''ஆமா டாக்டர்...''

''உம் பேரென்னம்மா...?''

''தங்கம்...''

''இதுதான் மொதல் கர்ப்பமா...'

''ம்...''

''மொதல் கர்ப்பம் இருந்துட்டு போகட்டுமே.. கல்யாணமாகி எவ்வளவு நாள் ஆகுது...?''

ராஜன் குறுக்கிட்டான். ''ஒரு வருஷம் டாக்டர் இவ்வளவு சீக்கிரத்துல குழந்தை ஆகும்ன்னு நாங் நினைக்கலை...''

டாக்டரம்மாள் தங்கத்தின் பக்கமாய் திரும்பினாள் ''எவ்வளவு நாள் தள்ளிப் போயிருக்கும்மா?''



''பத்து நாள்...''

''பத்து நாள் வரைக்கும் என்னம்மா பண்ணிட்டிருந்தே?''

''மாத்திரை சாப்பிட்டுப் பார்த்தேன்... அசையலை... அதான் இங்கே வந்தோம்'' தங்கம் சொல்லி முடித்ததும் டாக்டரம்மாள் எழுந்தாள்.

''மிஸ்டர்... நீங்க கொஞ்சம் வெளியே போய் இருங்க... நான் பரிசோதிக்கணும்...''

ராஜன் வெளியே எழுந்து போனதும் கதவைச் சாத்திக் கொண்டு தங்கத்திடம் வந்தாள் டாக்டரம்மாள்.

''அந்த டேபிள் மேலே ஏறி படும்மா...''

தங்கம் மெல்ல நடந்து ரப்பர் ஷீட்டால் போர்த்தப்பட்டிருந்த அந்த மேஜையருகே போய் மேலே ஏறி படுத்தாள்.

''சேலைக்கட்டையும் பாவாடையையும் தளர்த்திக்கோ.''

தங்கம் தளர்த்திக் கொள்ள, இடுப்பும் வயிறும் தாய்மையின் பூரிப்போடு மினுமினுப்பாய் தெரிந்தது. அவளுடைய வயிற்றின் மேல் கையை வைத்துக் கொண்டு டாக்டரம்மாள் கேட்டாள்.

''சொந்த ஊர் இதேதானா...?''

''ஆமா...''

''வீடு எங்கே...?''

''மலம்புழா டேங்க் ரோட்ல...''

''உன்னோட வீட்டுக்காரர்க்கு என்ன வேலை...?''

''பாலக்காட்ல ஒரு பிரைவேட் கம்பெனியில் டைப்பிஸ்டா இருக்கார்...''

''கல்யாணமாகி ஒரு வருஷம் ஆச்சா?''

''ஆமா.''

ராஜன் ரெடிமேடாய் சொல்லிக் கொடுத்த பொய்களை தங்கம் 'பளிச்'சென்று சொல்லிக் கொண்டே வர, டாக்டரம்மாள் புன்னகைத்தாள்.

''நான் உன்னை ஒரு கேள்வி கேட்கலாமா தங்கம்...?''

''கேளுங்க டாக்டர்...''

''இப்போ உன்னைக் கூட்டி வந்திருக்கிற ஆள் நிஜமாவே உன்னை கல்யாணம் பண்ணிக்குவானா...? இல்ல நடுவுல விட்டுட்டு ஓடிப்போயிடுவானா...?''






டாக்டரம்மாள் கேட்ட கேள்வியில் மூச்சடைத்துப் போனாள் தங்கம். விழிகளில் வியர்வை ஒட்ட வைத்துக் கொண்டு மிரள மிரள விழித்தாள்.

''டா...க்...டர்...''

டாக்டரம்மாள் புன்னகைத்தாள்.

''சொல்லம்மா... அவன் உன்னை நிஜமாகவே கல்யாணம் பண்ணிக்குவானா? இல்லே நடுவில விட்டுட்டு போயிடுவானா...?''

தங்கம் தன் கழுத்தில் இருந்த தாலி தெரிகிறதா என்று பார்க்க, டாக்டரம்மாள் அவளுடைய தோளைத் தொட்டாள். ''இந்த ரெடிமேட் தாலியைப் பத்தி எனக்கு நல்லாவே தெரியும்.. வயத்துல இருக்கிறதை கலைக்கிறதுக்காக இங்கே வர்ற எல்லாப் பெண்களும் இப்படியொரு திருட்டுத் தாலியைக் கட்டிட்டு வந்துடுவாங்க... கயித்துல பூசியிருக்கிற புது மஞ்சளே இது திருட்டுத் தாலின்னு காட்டிக் கொடுத்துடுமே...''

''டா,..க்...டர்...'' டாக்டரம்மாளுக்கு உண்மை தெரிந்து போனதில் அவசர அவசரமாய் கண்களில் நீர் கோர்த்தாள் தங்கம். திணறலோடு சொன்னாள்.

''அ...அ...அவர்... ரொம்பவும் நல்லவர்.''

டாக்டரம்மாள் மறுபடியும் புன்னகைத்தாள். இங்கே வர்ற எல்லா பெண்களுமே இப்படித்தான் சொல்றாங்க.... ஆனா ஆறு மாசம் ஒரு வருஷம் கழிச்சி



நான் அவங்களை எங்கேயாவது பார்க்க நேர்கிறபோது வேறொருத்தன் கையாலே தாலியை வாங்கிகிட்டு என்னைப் பார்த்ததும் பார்க்காத மாதிரி பயந்துகிட்டு போவாங்க...''

''அவர் என்னை ஏமாத்த மாட்டார் டாக்டர்.''

''உன்னைக் காதலிச்சவன் நல்லவனாயிருந்தா... உன்னோட உடம்பை இவ்வளவு அவசரப்பட்டு தொட்டுப் பார்த்திருக்க மாட்டான். மனசைத்தான் தொட்டு பார்த்திருப்பான். சரி... சரி... ஏன் அழறே... வயித்தை சுத்தம் பண்ண நானாச்சு. ஒரு தடவை ஏமாந்தது போதும். இனிமே ஜாக்கிரதையா இருந்துக்க...''

தங்கம் தலையாட்டிக் கொண்டே அந்த மேஜையின் மேல் படுத்தாள்.

''இங்கே ஒரு நாள் தங்கியிருந்து டி அண்ட் ஸி பண்ணிக்க முடியுமா...?''

''நான் சாயந்தரம் ஆறு மணிக்குள்ளே வீட்டுக்குப் போகணும் டாக்டர்... இல்லேன்னா வீட்ல சந்தேகப்படுவாங்க...''

டாக்டரம்மாள் சிரித்தாள். ''தலைவலி, காய்ச்சலாயிருந்தா உடனே ஊசி போட்டு மாத்திரை கொடுத்து அனுப்பிடலாம். நீ ஒரு உயிரைச் சுமந்திட்டிருக்கே... அந்த உயிரை அவசர அவசரமா சுத்தம் பண்ண முடியுமா? உன்னோட உடம்பு அந்த இழப்பைத் தாங்கிக்க வேண்டாமா...? என்னால முடிஞ்சவரைக்கும் சீக்கிரமா உன்னை அனுப்பப் பார்க்கிறேன். ஆமா... உன்னோட ஆள் பணம் கொண்டு வந்திருக்கானா...?''

''கொண்டு வந்திருக்கார் டாக்டர்...''

''எவ்வளவு...?''

''ஆயிரம் ரூபாய்...''

''என்னது ஆயிரம் ரூபாயா...?''

''ஆமா டாக்டர்...''

''என்னோட ஃபீஸ் நிலவரம் தெரியாமே உன்னோட ஆள் உன்னை இங்கே கூட்டி வந்துட்டான் போலிருக்கு. இந்த மாதிரி சட்டவிரோதமான கருக்களை கலைக்கிறதுக்காக நான் வாங்கற ஃபீஸ் ரெண்டாயிரத்து ஐநூறு ரூபா. போ... போய் உன்னோட ஆளை உள்ளே கூட்டிட்டு வா. ரேட் விபரத்தை பேசிகிட்டு அப்புறமா நான் உனக்கு டி அண்ட் ஸி பண்றேன்...''

தங்கம் மறுபடியும் தயக்கமாய் எழுந்து உட்கார்ந்தாள். சேலைத் தலைப்பால் கண்களில் படர்ந்திருந்த நீர்ப்பரப்பைத் துடைத்துக் கொண்டே கதவைத் திறந்து கொண்டு வெளியே போய் ராஜனைக் கூட்டி வந்தாள்.

டாக்டரம்மாள் நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தபடி சேலைத் தலைப்பால் தன் மூக்குக் கண்ணாடியைத் துடைத்துக் கொண்டே ராஜனை ஏறிட்டாள்.

''என்னப்பா... என்னோட ஃபீஸ் நிலவரம் தெரியாமே இந்தப் பொண்ணை கூட்டிட்டு வந்துட்டே போலிருக்கு... நான் இந்த மாதிரி கேஸுக்களுக் கெல்லாம் ரெண்டாயிரத்து ஐநூறு ரூபா வாங்கறேன்... அவ்வளவு பணம் வெச்சிருக்கியா....?''

முகம் மாறினான் ராஜன்.

''ஸாரி டாக்டர். என்னோட ஃபிரண்ட் ஒருத்தன் தான் உங்களைப் பத்தி சொன்னான். ரேட் இவ்வளவு சொல்லலையே...?''

''இந்தப் பொண்ணுக்கு டி அண்ட் ஸி பண்ணப் போறவ நானா... உன்னோட ஃபிரெண்டா?''

''டாக்டர்...''

''நான் சொல்ற மாதிரி பண்ணு. இந்தப் பொண்ணை கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு போய் அட்மிட்டு பண்ணிடு. அவங்க இலவசமா ரொட்டியும் பாலும் கொடுத்து வயத்த சுத்தம் பண்ணி ராஜமரியாதையோட வீட்டுக்கு அனுப்பிச்சு வெப்பாங்க...''

ராஜனின் குரல் குமுறியது.



''அங்கே சரியா பண்ணமாட்டாங்க டாக்டர்...''

''அது தெரியுதுல்ல...? பணத்தை அதிகமா கொண்டு வர்றதுக்கென்ன? இந்த ஆப்ரேஷன் எவ்வளவு ரிஸ்க்கான ஆபரேஷன் தெரியுமா...?'' துடைத்த கண்ணாடியை பளபளப்பாய் மாட்டிக் கொண்டே ராஜனை கடுமையாக ஏறிட்டாள்.

''டாக்டர்...''

''என்ன...?''

''நீங்க ஆபரேஷனை ஆரம்பிங்க... நான் பாலக்காட்டுக்குப் போய் பதினைஞ்சு நிமிஷத்துலு பணம் எடுத்துட்டு வந்துடறேன்...''

''நீ மொதல்ல பணத்தை கொண்டு வா. பணம் என் கைக்கு வந்து சேர்ந்ததும் நான் ஆபரேஷனை ஆரம்பிக்கறேன். முறையா தாலிகட்டி... புருஷன் பெஞ்சாதியா இருக்கறவங்களே ஏமாத்தற காலம் இது...''

ராஜன் டாக்டரம்மாவை கையெடுத்து கும்பிட்டான். ''டாக்டர், நாங்க யார்ங்கிறதை நீங்க அடையாளம் கண்டுக்கிட்டீங்க. எங்களோட இக்கட்டான நிலைமையும் உங்களுக்குத் தெரியும்.... நானும் இவளும் மரியாதையான குடும்பத்தைச் சேர்ந்தவங்க டாக்டர்...''

டாக்டரம்மாள் சிரித்தாள். ''மரியாதையான குடும்பத்துல பிறந்தவங்க பண்ற காரியமா இது...?''

''தப்புத்தான் டாக்டர். நாங்க ரெண்டு பேரும் எல்லை மீறி பழகினது தப்புத்தான். நீங்கதான் பெரிய மனசு பண்ணணும்... நீங்க ஆபரேஷன் பண்ண ஆரம்பிங்க... நான் எப்படியும் ரெண்டு மணி நேரத்துல பணத்தோட வந்துடறேன்...''

டாக்டரம்மாள் யோசனையாய் அவ்னைப் பார்த்தாள். பார்த்துக் கொண்டே கேட்டாள்: ''பணம் இப்போ எவ்வளவு வெச்சிருக்கே...?''

''ஆயிரத்து இருநூறு...''

''சரி நூறு ரூபாயை நீ வெச்சுகிட்டு... பாக்கியிருக்கிற ஆயிரத்து நூறு ரூபாயை என்கிட்டே குடுத்துட்டு பாலக்காட்டுக்கு போய் பாக்கி பணத்தை கொண்டா... நான் ஆபரேஷனை ஆரம்பிச்சுடறேன்...''

''ரொம்ப நன்றி டாக்டர்...'' ராஜன் அவசர அவசரமாய் தன் சர்ட் பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து ஒரு நூறு ரூபாய் நோட்டை மட்டும் உருவிக் கொண்டு பாக்கி பணத்தை அவளிடம் நீட்டினான்.

''வாம்மா... வந்து மேஜை மேலே படு...''

சொல்லிக் கொண்டே டாக்டரம்மாள் திரையைத் தள்ளிக் கொண்டு பக்கத்து அறைக்குப் போக, தங்கம் ராஜனை ஏறிட்டாள்.

''என்னங்க... உங்ககிட்டே பணம் இருக்கா...?''

''இருக்கு தங்கம்...''

''போயிட்டு சீக்கிரமா வந்துடுங்க...''

''உன்னோட ஞாபகத்தை விட்டா... எனக்கு வேற ஞாபகம் வருமா தங்கம்? பணத்தை எடுத்துட்டு எவ்வளவு சீக்கிரம் வர முடியுமோ அவ்வளவு சீக்கிரத்துல வந்துடறேன்...''

அவளுடைய கன்னத்தை மெல்லத் தட்டிவிட்டு நகர்ந்தான் ராஜன். அவன் ஆஸ்பத்திரி வராந்தாவில் நடந்து போவதையே கண்களில் மின்னும் நீர்த்திரையோடு பார்த்துக் கொண்டிருந்தாள் தங்கம்.

★★★

கோவை.

காந்திபுரம் தேர்ட் கிராஸ் ரோட்டின் கடைசியில் இருந்த அந்த ஓட்டு வீட்டின் முன்னால் போலீஸ் ஜீப் நின்று தன் உடம்பின் உதறலை நிறுத்திக் கொள்ள, இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணனும் சப்–இன்ஸ்பெக்டர் அவினாஷும் பக்கத்திற்கொருவராய் கீழே இறங்கினார்கள்.

''இந்த வீடுதானே அவினாஷ்...?''

''ஆமா ஸார்'' என்று சொல்லிக் கொண்டே வீட்டுச் சுவரில் இருந்த அந்த போர்டைச் சுட்டிக்காட்டினார்.



நவநீதகிருஷ்ணன் பார்வையை அந்த போர்டின் மேல் போட்டார். 'இங்கே கடல் மீன்களும் ஆற்று மீன்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்கப்படும். உரிமையாளர் சபாபதி.'

உள்ளே நுழைந்தார்கள் இருவரும்.

காலியான மீன் கூடைகளிலிருந்து ஒரு முடை நாற்றம் கிளம்பிக் கொண்டிருக்க, நான்கைந்து பேர் வர்ாந்தாவில் படுத்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். கொஞ்சம் பெரிய சைஸ் வீடு.

அவினாஷ் வேகவேமாகமாய் நடந்து போய் கையிலிருந்த லத்தியால் ஒருத்தனின் தோளைத் தட்டினார். அவன் அரக்கப் பரக்க எழுந்து பரட்டைத் தலையைக் கீறிக் கொண்டு போலீசை பயப் பார்வை பார்த்தான்.

''சபாபதி எங்கே...?''

''அ...அவர் வெளியூர் போயிருக்கார் ஸார்...''

''வெளியூரா...?''

''ஆ...ஆமா... ஸார்...'' அவன் குரல் நடுங்கியது.

''எந்த ஊருக்குப் போயிருக்கார்....?''

''தெரியலை ஸார்...''

''சபாபதியோட ரூம் எது?''

''வீட்டுக்குள்ளாற அவரோட சம்சாரம் இருக்காங்க சார்... அவங்ககிட்ட கேட்டுக்குங்க ஸார்...'' அந்த ஆள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே வீட்டுக்குள் இருந்து அந்தப் பெண் வெளிப்பட்டாள்.

அவளைப் பார்த்ததும் இன்ஸ்பெக்டர் நவநீத கிருஷ்ணனின் முகம் ஆச்சரியத்துக்குப் போனது.




சபாபதியின் வீட்டுக்குள்ளிருந்து வந்த பெண்ணுக்கு முப்பது வயதிருக்கலாம். மாநிறமா

மிருந்தாலும் உடம்பின் ஏற்ற இறக்கங்களில் பார்க்கிற ஆண்களுக்கு ஒரு போதையைக் கொடுத்தாள். தோள்பட்டையின் செழிப்புகளில் ஜாக்கெட் திணறியிருந்தது. ஷிபான் சேலைக்கு உடம்பைக் கொடுத்து தலையின் கொண்டைய்யை உயர்த்திப் போட்டிருந்தளா.

இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணனைப் பார்த்ததும் அவளும் முகம் மாறினாள். நாக்கு உலர்ந்து போக வாய் குழறினாள்.

''வா...வாங்க... இன்ஸ்பெக்டர்...''

நவநீதகிருஷ்ணன் அவளை கூர்மையாய் பார்த்துக் கொண்டே கேட்டார். ''நீ...நீ...திலகாதானே...?''

''ஆ...மா...இன்ஸ்பெக்டர். உ...உள்ளே வாங்க...''

தடுமாற்றமாய் கூப்பிட்டுக் கொண்டு உள்ளே போனாள்.

அவினாஷும், நவநீதகிருஷ்ணனும் அவளைத் தொடர்ந்தார்கள்.

வீட்டின் உள் அறைக்கு வந்ததும் அவள் நாற்காலிகளைக் காட்டினாள். ''உட்காருங்க... ஸார்...''

''உட்கார்றது இருக்கட்டும். நீ சபாபதிக்கு என்னாகணும்?''

''ஒய்ப்... ஸார்...''

''ஒய்ப்பா...?''

அந்த திலகா சிரித்தாள். ''ஏன் ஸார்... நான் அவர்க்கு ஒய்ப்பா இருக்கக் கூடாதா...? ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி நான் தொழில்காரிதான்... நீங்க ரெய்ட் வந்தப்போ லாட்ஜ்ல மாட்டிக்கிட்டவதான்... நான் மறுக்கலை. என்னோட வாடிக்கையாளரா வந்துட்டிருந்த சபாபதிதான் ஒரு நாள் என்னை கல்யாணம் பண்ணிக்கிறியான்னு கேட்டார். தலையாட்டினேன். தாலியைக் கட்டிட்டார்.''

''சரி; சபாபதி இப்போ எங்கே...?''

''வெளியூர் போயிருக்கார்.''



''வெளியூர்னா, எந்த ஊரு...?''

''என்கிட்டே சொல்லலை.''

''போகும்போது நீ கேக்கலையா...?''

''எங்கே போனாலும் சொல்லிட்டு போக மாட்டார். கேட்டாலும் சொல்ல மாட்டார்.''

''எப்போ கிளம்பிப் போனார்?''

''இன்னிக்கு காலையில அஞ்சு மணிக்கு...''

''மீன் கூடையில ஒரு மனிதக் கை இருந்தது சம்பந்தமா சபாபதி உன்கிட்டே ஏதாவது சொன்னாரா...?''

''சொன்னார்...''

''என்ன சொன்னார்...?''

''அவரை போலீஸ்ல மாட்டி விடறதுக்காக யாரோ பண்ணின சூழ்ச்சின்னு சொல்லிட்டிருந்தார்...''

''அவரோட ரூம் எது?''

''வாங்க காட்டறேன்....''

தில்கா இடது பக்கமாய் திரும்பி நடந்து எதிர்ப்பட்ட ஒரு அறையைக் காட்டினாள். ''இது அவரோட ரூம்... மீன் வாங்க வர்ற வியாபாரிகளை அந்த ரூம்லதான் உட்கார வைச்சு பேசிக்கிட்டிருப்பார். வரவு செலவு கணக்கையும் இங்கேதான் பார்ப்பார்.''

நவநீதகிருஷ்ணன் அறைக்குள் நுழைந்தார். திலகா ஜன்னல் கதவுகளைத் திறந்து வைத்தாள். சூரிய வெளிச்சம் பளீரென்று உள்ளே நுழைந்தது.

லாமினேட் செய்யப்பட்ட ஒரு சிறிய மேஜை நாற்காலி. ஒரு டீபாய். டீபாயின் மேல் டெலிபோன். அருகே ஒரு காட்ரேஜ் பீரோ. அதன் மேல் சில பைல்கள்.

நவநீதகிருஷ்ணன் ஒரு பைலை உருவினார்.

பிரித்தார்.

உள்ளே ரெயில்வே சம்பந்தப்பட்ட ரசீதுகள். பார்ட்டி லெட்டர்கள். இன்னொரு பைல் முழுக்க வவுச்சர்கள். பைல்களைப் புரட்டிக் கொண்டே திலகாவை ஏறிட்டார் நவநீதகிருஷ்ணன்.

''சபாபதி உன்னை எப்போ கல்யாணம் பண்ணிக்கிட்டார்...?''

''ஆறு மாசத்துக்கு முன்னாடி...''

''உன்னைப் பத்தி நல்லா தெரிஞ்சுகிட்டேதான் கல்யரணம் பண்ணிக்கிட்டாரா...?''

''ஆமா...''

''அவர்க்கு வேறு எந்த பெண்கள்கிட்டயாவது தொடர்பு இருக்கா?''

''எனக்கு தெரிஞ்சவரைக்கும் இல்லை...''

இன்னொரு பைலை எடுப்பதற்காக அதன் விளம்பைப் பற்றி அவினாஷ் உருவின அதே விநாடி உள்ளேயிருந்து அந்த சிவப்புத்தாள் கீழே விழுந்தது.

நவநீதகிருஷ்ணன் குனிந்து எடுத்தார்.

அது ஒரு டெலிகிராம்.

சபாதிக்கு வந்த டெலிகிராம்.

தந்தியைப் பிரித்து மேட்டரைப் பார்த்தார்.

'ஸ்டார்ட் இம்மீடியட்லி – ராதா.'

★★★

டாக்டரம்மாள், தங்கத்திற்கு அனிஸ்தீஸியா கொடுத்து மயக்கமாக்கிவிட்டு தன் அருகே நின்றிருந்த நர்சைப் பார்த்தாள். ஆபரேஷன் தியேட்டருக்குள் ஜில்லிப்பு பரவியிருந்தது.

''ஷீலா...''

''டாக்டர்...''

''சிம்பிளான கேஸ்தான்... சுத்தம் பண்ணிடறியா. நான் வீடு வரைக்கும் போய்ட்டு வந்துடறேன். சிஸ்டர் ஒருத்தி ஊர்லேயிருந்து வந்திருக்கா... நான் போய் பேசிட்டு ஒரு மணி நேரத்துக்குள்ளே வந்துடறேன்.''

''சரி டாக்டர்...''

''அந்த ஆள் பணத்தோட வந்தான்னா... ஆபரேஷனை முடிச்சுட்டு டாக்டர் இப்பத்தான் வெளியே போனார்ன்னு சொல்லு...''



அந்த நர்ஸ் தலையாட்டினாள். டாக்டரம்மா வெளியே வந்து ஆஸ்பத்திரிக்கு பின்புறம் நிறுத்தியிருந்த தன் காரை நோக்கிப் போனாள்.

காருக்குள் ஏறி அமர்ந்து அதை நகர்த்திக் கொண்டு மலப்புழா ரோட்டில் இருக்கும் தன் பங்களாவை நோக்கி விரட்டினாள்.

பத்து நிமிஷப் பயணம்.

பங்களா வந்திருந்தது.

போர்டிகோவில் காரை நிறுத்திவிட்டு கீழே இறங்கும்போதே டாக்டரம்மாளின் தங்கை – அவள் ஜாடையில் வாசலில் நின்று கோபப்பட்டாள்.

''என்னக்கா இது... பத்து மணிக்கே வர்றதா சொன்னே, இவ்வளவு சாவகாசமா வர்றே..?? நான் 'டெக்'ல போட்டு பாதிப்படம் பார்த்துட்டேன். மம்முட்டியோட நடிப்பு அற்புதமா இருக்கு...''

டாக்டரம்மாள் சிரித்தாள். ''அதனாலென்ன, இன்னொரு வாட்டி ஆரம்பத்துலயிருந்து காலெஸட்டை போட்டுப் பார்த்துட்டா போகுது! நான் பத்து மணிக்கே புறப்படலாம்ன்னு நினைச்சேன். கல்யாணத்துக்கு முன்னாடியே வயித்தை ரொப்பிகிட்ட கேஸ் ஒண்ணு வந்தது. செமத்தியான கேஸ்... வீட்டுக்கு வரமுடியுமா?''

''சரி, சீக்கிரமா வா. முழு படத்தையும் பார்க்க மனசு கிடந்து அடிச்சுக்குது. சீனெல்லாம் அட்டகாசமா இருக்கு.''

இருவரும் உள்ளே போனார்கள். அந்த சின்ன ஹாலின் ஓரத்தில் டி.வி.யும் டெக்கும் தெரிய, எதிரேயிருந்த நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள்.

''காஸெட்டை சீக்கிரமா போடு. ஒரு மணி நேரத்துக்குள்ளே நான் மறுபடியும் ஹாஸ்பிடலுக்குப் போகணும். அந்த ஆள் பணத்தோட வந்திடுவான்...''

''ஏன்க்கா இப்படி பணம் பணம்ன்னு அலையறே... கல்யாணம் பண்ணிக்காமே ஒண்டிக்கட்டையாவே இருந்துட்ட உனக்கு... இனியும் எதுக்காகப் பணம்?''

''பணம் எனக்கில்லே... உனக்கும் ராதாவுக்கும் தான் சேர்த்து வெக்கறேன். உனக்கு நல்ல இடத்துல கல்யாணம் முடிச்ச மாதிரி ராதாவுக்கும் கல்யாணத்தை முடிக்க வேண்டாமா... ஏதோ ஒரு மாப்பிள்ளை பையன் ஒரு பேங்க் ஆபீஸரா இருக்கிறான். புரோக்கர் ஒருத்தர் வந்து சொல்லிட்டு போனார். ஈரோட்ல இருக்கிற ராதாவுக்கு லெட்டர் போட்டு ரெண்டு நாளாச்சு. அவகிட்டயிருந்து ஒரு பதிலும் வரலை. நாளைக்கு வரைக்கும் பார்த்துட்டு, லெட்டர் வரலைன்னா ஈரோடு போய் நேரிலேயே அவளைப் பார்த்துட்டு வந்துடலாம்னு பார்க்கிறேன்...''

''ஏன் அவ வரமாட்டாளா...?''

டாக்டரம்மாள் சிரித்தாள். ''எம்மேல உனக்கு இருக்கிற பாசம் அவளுக்கு இல்லையே... தான் வேலை பார்த்து சம்பாதிக்கிறோம்ங்கிற திமிர் அவளுக்கு. நீ காஸெட்டைப் போடு மங்களம்.''

அவள் காஸெட்டைப் போட்டாள். மம்முட்டி நடித்த ஒரு புது மலையாளப் படம் டி.வி. திரையில் பளிச்சிட ஆரம்பித்தது. படத்தின் உற்சாகமான ஓட்டத்தில் நிமிஷங்கள் கரைய – பாதிப்படம் ஓடியிருந்த நிலையில்...

பக்கத்து அறையிலிருந்து டெலிபோன் கூப்பிட்டது.

''யார்ன்னு போய் பாரு மங்களம்...''

அந்த மங்களம் எரிச்சலோடு எழுந்து பக்கத்து அறைக்குப் போய் ரிஸீவரை எடுத்து காதுக்கு கொடுத்து செவிமடுத்தாள், அங்கிருந்து கத்தினாள்.

''அக்கா... உனக்குத்தான் போன்.''

''போன்ல யாரு...?''

''ஹாஸ்பிட்டல்ல இருந்த நர்ஸ் பேசறா...''

''நர்ஸா?'' உட்கார்ந்திருந்த நாற்காலியிலிருந்து விருட்டென்று எழுந்து வேகவேகமாய் ரிசீவரை வாங்கினாள்.

''என்ன ஷீலா...''



''டாக்டர்... நீங்க ஹாஸ்பிட்டலுக்கு உடனே வரணும்...''

''ஏன்... என்ன விஷயம்...?''

''அ...அ...அந்தப் பொண்ணு தங்கம்...''

''அவளுக்கென்ன? சுத்தம் பண்ணிட்டியா...?''

''அதைத்தான் சொல்ல வர்றேன், டாக்டர்...''

''சொல்லு... ஏன் இப்படி வார்த்தைகளை மென்னு மென்னு பேசறே?''

''டா...க்...டர்...''

''ம்...''

''அந்தப் பொண்ணு தங்கம்....''

''தங்கம்...''

''செத்துட்டா... ஓவர் ப்ளீடிங்...''

## 7



டாக்டர் அம்மாளின் கையிலிருந்த ரிஸிவர் நடுங்கியது. 'திக்'கென்ற அதிர்ச்சி இருதயத்தை தாக்க, சுவாசிக்கத் திணறினாள். டெலிபோனின் மறுமுனையிலிருந்து நர்ஸ் கேட்டுக் கொண்டிருந்தாள். ''டாக்டர்... நீங்க உடனே வர்றீங்களா... எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலை...''

''அந்தப் பொண்ணு செத்துப் போனது ஹாஸ்பிடல்ல யார் யார்க்குத் தெரியும்?''

''யார்க்கும் தெரியாது டாக்டர்...''

''ஆயாக்களுக்கு...?''

''அவங்களுக்கும் தெரியாது...''

''சரி... இன்னும் பத்து நிமிஷத்துல நான் அங்கே வர்றேன்... விஷயத்தை யார்கிட்டேயும் லீக் பண்ணிடாதே... பண்ணினா நீயும் நானும் ஜெயிலுக்கு போகவேண்டி வரும்...''

''நான் சொல்லலை டாக்டர்...''

''சரி. டென்ஷனைக் காட்டிக்காதே... எப்பவும் போல இயல்பா இரு...''

''சரி டாக்டர்...''

டாக்டரம்மா ரிஸீவரை வைத்தாள். அதற்குள் முத்து முத்தாய் வியர்த்திருந்த வியர்வையை சேலைத் தலைப்பால் ஒற்றிக்கொண்டு இருட்டடித்த முகத்தோடு திரும்பினாள்.

''என்னக்கா என்னமோ மாதிரி ஆயிட்டே...?''

''அட்மிட் பண்ணின பேஷண்ட் ஒருத்தி சீரியஸான ஸ்டேஜ்ல இருக்காளாம்...''

''அடேடே...!''

''நான் ஹாஸ்பிடல் வரைக்கும் போயிட்டு வந்துடறேன் மங்களம். மத்தியான சாப்பாட்டுக்கு வரமாட்டேன், சாயந்தரம் நான் வர்றதுக்கும் லேட்டாயிடும்.''

''பரவால்லக்கா... நீ மொதல்ல பேஷண்டை கவனி...''

டாக்டரம்மாள் வீட்டை விட்டு வெளியே வந்து போர்டிகோவில் நின்றிருந்த காருக்குள் பாய்ந்தாள்.

'இருந்து டி அண்ட் ஸி செய்துவிட்டு வந்திருக்க வேண்டும். அனுபவம் இல்லாத நர்ஸை நம்பியது பெரும் தப்பு.'

காரை விரட்டினாள்.

மனசுக்குள் போலீஸ் பயம் நண்டுபிடி போட்ட மாதிரி உட்கார்ந்திருந்தது. 'போய் என்ன செய்யலாம்?'

'போலீஸில் சொல்லிவிடலாமா?'

'என்னவென்று சொல்லுவது...?'

'ஆபரேஷனை செய்தது நான்தான். உடம்பு வீக்காய் இருந்ததால் அவளால் ஆபரேஷனை தாங்கிக் கொள்ள முடியவில்லை.'

'போலீசார் நம்பாமல் துருவித் துருவி விசாரிக்க ஆரம்பித்தால்...?'



'வேண்டாம். இந்த போலீஸ் விவகாரமே வேண்டாம். பேப்பர்க்கு நியூஸ் போனால் டிஸ்பென்சரியின் பெயர் நாறிவிடும். அப்புறம் ஒரு கேஸ் கூட இந்தப் பக்கம் எட்டிப் பார்க்காது.'

கார் டிஸ்பென்சரியின் வாசலில் டயர்கள் சூடுபறக்க வந்து நின்றது. டாக்டரம்மாள் கதவை அறைந்து சாத்திவிட்டு வாசற்படி ஏற, உள்ளே உட்கார்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்த ஆயாக்கள் இரண்டு பேர் கப்பென்று வாயை மூடிக் கொண்டார்கள்.

ஆபரேஷன் தியேட்டர் அருகே அந்த நர்ஸ் இருண்டுபோன முகத்தோடு நின்றிருந்தாள். வராந்தாவில் வேகமான நடை போட்டு நர்ஸை நெருங்கினாள். தாழ்ந்த குரலில் பற்களைக் கடித்துக் கொண்டு கேட்டாள்.

''என்ன பண்ணினே...?''

''டெவலப்ட் எம்ப்ரியோ டாக்டர்...''

''என்னைக் கூப்பிட்டிருக்க வேண்டியதுதானே?'' அடிக்குரலில் சீறிக்கொண்டே கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனாள் டாக்டரம்மாள்.

தங்கம் ஆபரேஷன் டேபிள் மேல் நீளமாய் சலனம் காட்டாமல் படுத்திருந்தாள். வாய் லேசாய் பிளந்திருந்தது. கண்களில் வெள்ளை விழிப்படலம் மட்டும் தெரிய தங்கத்தின் முகம் பார்க்கவே கோரமாயிருந்தது.

''சுத்தம் பண்ணும்போது செத்தாளா இல்லே சுத்தம் பண்ணின பிறகு செத்தாளா?''

''பண்ணிட்டிருக்கும்போதே...''

''டெவலப்ட் எம்ப்ரியோன்னு தெரிஞ்சதும் எனக்கு போன் பண்ணியிருக்கலாமே... இப்படியொரு விபரீதத்தை பண்ணிட்டியே...''

''ஸாரி டாக்டர்...''

''ஸாரியா...? என்னோட காலை மிதிச்சுட்டு 'ஸாரி' சொல்றமாதிரி சொல்றே... நீ ஒரு உயிரையே தீர்த்திருக்கே...''

அந்த நர்ஸ் பளிச்சென்று டாக்டரம்மா கால்களில் விழுந்தாள். ''எனக்கு பயமாயிருக்கு டாக்டர்...'' கண்களில் நீர் கரகரவென்று சுரந்தது.

''எழுந்திரி...''

நர்ஸ் எழுந்தாள்.

''உனக்கு ஒரு வயசுல பையன் ஒருத்தன் இருக்கான் இல்லையா...?''

''ஆமா டாக்டர்...''

''இந்த விஷயம் வெளியே வந்தா... உன்னோட நிலைமை என்னாகும்...?''

''என்னால நினைச்சுக்கூட பார்க்க முடியலை டாக்டர். நான் ஜெயிலுக்குப் போயிட்டா, என் குடிகார புருஷன்கிட்டே அடிபட்டே என் குழந்தை செத்துப் போயிடும்...''

''இதையெல்லாம் மனசுல வெச்சுகிட்டு நான் இப்போ சொல்ற மாதிரி செய்யணும்...''

''நா...நான் என்ன செய்யணும் டாக்டர்...''

''இந்தப் பொண்ணைப் பீத்தி யார் என்ன கேட்டாலும் நீ வாயைத் திறக்கக்கூடாது...''

''மாட்டேன் டாக்டர்...''

''ஆயாக்களுக்கு ஏதாவது வேலை கொடுத்து வெளியே அனுப்பிடு...''

தலையாட்டினாள் நர்ஸ்.

''இன்னொரு முக்கியமான விஷயம்...''

''என்ன டாக்டர்...?''

''தங்கத்தை கூட்டிக்கிட்டு வந்த அந்த ராஜன் இன்னும் கொஞ்ச நேரத்துல இங்கே வருவான். அவன் கிட்டே நீ எதுவும் பேசாதே.... என்னோட ரூமுக்கு அவனை அனுப்பி வை. நான் அவன்கிட்டே பேசிக்கிறேன்...''

''இந்த பாடியை என்ன பண்றது டாக்டர்...?''



டாக்டரம்மா ஒரு நிமிஷம் யோசித்தாள். பிறகு ஏதோ தீர்மானத்துக்கு வந்தவளாய், ''பாடியோட காலை நீ பிடி. நான் தோளைப் பிடிக்கிறேன் பாத்ரூமுக்கு கொண்டு போயிடலாம்...''

பிடித்தார்கள்.

கொண்டு போனார்கள்.

''அப்படி சுவரோரமா படுக்க வை...''

தங்கம் படுக்க வைக்கப்பட்டாள்.

டாக்டரம்மாள் மூச்சு வாங்கிக் கொண்டே சேலைத் தலைப்பால் முகத்தை ஒற்றிக் கொண்டு நர்ஸிடம் திரும்பினாள். ''அந்த பாத் டப்பிலே இருக்கிற தண்ணீரை கொட்டிட்டு அதை பாடி மேலே கவுத்தி மூடிடு...''

''சரி டாக்டர்.''

நர்ஸ் பாத்டப்பிலிருந்து தண்ணீரை முழுவதுமாய் கொட்டிவிட்டு காலி டப்பை தங்கத்தின் மேல் கவிழ்த்து முழுவதுமாய் மூடினாள்.

பாத்ரூமை விட்டு இருவரும் வெளியே வந்தார்கள். கதவைச் சாத்திக்கொண்டே டாக்டரம்மாள் சொன்னாள்.

''ஆபரேஷன் தியேட்டர் கதவை பூட்டாதே... ஆயாக்களை வெளியே அனுப்பிட்டு நீ என்னோட வா! இந்த நிமிஷத்திலிருந்து பிரச்னை ஓய்கிற வரைக்கும் எப்படியெப்படி நடந்துக்கணுங்கிறதை நான் சொல்றேன்...''

★★★

''யார் இந்த ராதா...'' கையிலிருந்த டெலிகிராமைக் காட்டி சபாபதியின் மனைவி திலகாவிடம் கேட்டார் இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன்.

''எனக்கு தெரியாது இன்ஸ்பெக்டர்...''

''இந்த டெலிகிராம் வந்ததே உனக்குத் தெரியாதா...?''

''தெரியாது...''

''இதோ பார்... பொய் சொன்னே தூண்டு பிடிச்சுடுவோம். உடனே வரச் சொல்லி அந்த ராதா டெலிகிராம் கொடுத்திருக்கா...''

''டெலிகிராம் எந்த ஊரிலிருந்து வந்திருக்கு...?''

''ஈரோடு.''

''ஈரோட்ல ராதான்னு யாரு இருக்கா?'' மோவாயில் விரல் வைத்து யோசித்தவள்...

''ராஜப்பா...''

''அம்...மா...''

''ராஜப்பா, அய்யாவுக்கு ஈரோட்ல ராதாங்கிற பேர்ல தெரிஞ்சவங்க யாராவது இருக்காங்களா...?''

அவன் யோசித்தான். யோசித்துவிட்டு சொன்னான். ''எனக்கு தெரிஞ்சளவில் அது மாதிரி யாரும் கிடையாதம்மா...''

நவநீதகிருஷ்ணன் அவினாஷிடம் அந்த டெலிகிராமைக் கொடுத்தார்.

''அவினாஷ்... இங்கே இந்த வீட்ல யாருமே சரியில்லை... ஏதோ ட்ராமா பண்றாங்க. நீங்க டெலிகிராப் ஆபீஸ காண்டாக்ட் பண்ணி ராதாவோட அட்ரஸை வாங்குங்க. உடனே ஸ்டெப்ஸ் எடுப்போம்...''

''எஸ் ஸார்.''.

அவினாஷ் அந்த டெலிகிராமை வாங்கிப் பத்திரப்படுத்திக் கொண்டே அதே நேரம் அருகே மேஜையின் மேலிருந்த டெலிபோன் ரீங்கரிக்க ஆரம்பித்தது.

ரிஸீவரை எடுப்பதற்காக பாய்ந்த திலகாவை கண் அசைவினாலேயே தடுத்து நிறுத்தி தான் நகர்ந்து போய் ரிஸீவரை எடுத்தார்.

''ஹலோ...''

''பொன்வண்டு...'' ஒரு ஆண்குரல் கேட்டது.

''பொன்வண்டா...? யார் பேசறது...?''

நவநீதகிருஷ்ணன் அப்படிக் கேட்டதுமே...

மறுமுனையில் ரிஸீவர் வேகமாய் சாத்தப்பட்டது.

# 8



நவநீதகிருஷ்ணன், திரும்பி தனக்குப் பின்னால் நின்றிருந்த சபாபதியின் மனைவி திலகாவைப் பார்த்தார். அவள் பயந்த குரலில் கேட்டாள்.

''என்ன இன்ஸ்பெக்டர்... போன்ல யாரு...?''

''இங்கே பொன்வண்டுங்கிறது யாரு...?''

''பொன்வண்டா...?''

''ஆமா...''

''அந்த மாதிரி பேர்ல இங்கே யாருமேயில்லை இன்ஸ்பெக்டர்...''

நவநீதகிருஷ்ணன் கடுமையானார். ''இதோ பார்... போலீஸ்கிட்டேயிருந்து எதையுமே மறைக்க முடியாது... இன்னிக்கு இல்லேன்னாலும் நாளைக்கு விஷயம் வெளியே வந்துடும். அந்த சமயத்துல எங்க நடவடிக்கை உங்களுக்கு பாதகமாத்தான் இருக்கும். மரியாதையா இப்பவே உண்மையைச் சொல்லிடு. இந்த வீட்டுக்கு எவனோ ஒருத்தன் போன் பண்ணி 'பொன்வண்டு'ன்னு சொன்னான். நான் பொண்ண வண்டான்னு கேட்டதும், உடனே ரிஸீவரை வெச்சுட்டான். போன் பண்ணின ஆள் நேர்மையானவனா இருந்தா... மேற்கொண்டு ஏதாவது பேசியிருப்பான். அவன் சரியில்லை. தப்பு ஆசாமி. அதுதான் ரிஸீவரை வெச்சுட்டான்...''

திலகா கையெடுத்து கும்பிட்டாள்.

''இன்ஸ்பெக்டர் ஸார்.... சத்தியமா எனக்கு அந்த 'பொன்வண்டு' யார்ன்னு தெரியாது. ஒருவேளை என் வீட்டுக்காரருக்கு தெரிந்திருக்கலாம்.''

''அவர் எத்தனை மணிக்கு வருவார்ன்னு சொன்னே...?''

''ராத்திரிக்கு மேல்தான் வருவார்.''

''அவர் எப்போ வந்தாலும் சரி, உடனடியா ஸ்டேஷனுக்கு வந்து என்னைப் பார்க்கச் சொல்லணும்...''

திலகா தலையாட்டினாள்.

''கண்டிப்பா பார்க்கச் சொல்றேன் ஸார்...''

நவநீதகிருஷ்ணனும் அவினாஷும் வீட்டை விட்டு வெளியே வந்தார்கள். நவநீதகிருஷ்ணன் சொன்னார். ''இப்போ நேரா டெலிகிராப் ஆபீஸுக்குப் போகப் போகிறோம் அவினாஷ். இந்த தந்தியைக்காட்டி ஈரோட்டில் இருக்கிற அந்த ராதா அட்ரஸை ட்ரேஸ் அவுட் பண்ணணும்...''

போலீஸ் ஜீப் டெலிகிராப் ஆபீஸை நோக்கி ஓட ஆரம்பித்தது.

★★★

டாக்டரம்மாளுக்கு உடம்பு வியர்த்துவிட்டது. தொண்டை உலர்ந்து போய் அடிக்கடி வாட்டர் ஜக்கில் இருந்த தண்ணீரை டம்ளரில் சரித்து சரித்து குடித்தாள். நர்ஸ் கதவருகே கையைப் பிசைந்து கொண்டு கலவரமாய் நின்றிருந்தாள்.

''நர்ஸ்...''

டாக்டரம்மாள் கூப்பிட்டாள்.

அவள் உள்ளே ஓடி வந்தாள்.

''ஆயாக்களை வெளியே அனுப்பிச்சுட்டியா...?''

''அனுப்பிச்சிட்டேன்...''

''என்னான்னு சொல்லி வெளியே அனுப்பினே...?''

''டவுனுக்குப் போய் காட்டன் ரோலும், பஞ்சும் வாங்கிட்டு வரச் சொன்னேன். அவங்க வாங்கிட்டு வர்றதுக்குள்ளே ட்யூட்டி நேரம் முடிஞ்சிடும்... வந்ததுமே வீட்டுக்கு கிளம்பிடுவாங்க...''

''குட்...! நீ இன்னொரு காரியம் பண்ணணும்....''

''என்ன டாக்டர்....?''

''நம்ம ஹாஸ்பிடலுக்கு பின்னாடி சேர்ற கழிவுப் பஞ்சையும் குப்பைகளையும் எடுத்துட்டுப்



போறதுக்காக மாட்டு வண்டி கட்டிகிட்டு கிருஷ்ணன் வருவானே... அவனோட வீடு உனக்குத் தெரியுமா...?''

''தெரியாது டாக்டர்...''

''சரி... நான் அடையாளம் சொல்றேன்...ரயில்வே ஸ்டேஷன் ரோட்ல நேரா போனா, கடைசியில கோயில் தெப்பக்குளம் ஒண்ணு வரும் பார்த்திருக்கியா...?''

''பார்த்திருக்கேன் டாக்டர்...''

''அந்தத் தெப்பக்குளத்தையொட்டி இடதுகை பக்கமா சின்ன சந்து ஒண்ணு போகும்... அந்த சந்துக்கு பேரு திருப்புழா சந்து... அந்த சந்திலேயே நேரா போனா கடைசி குடிசைக்கு முந்தின குடிசை கிருஷ்ணனோடது. இந்நேரம் போனா அவன் வீட்லதான் இருப்பான். நான் கூப்பிட்டேன்னு போய் சொல்லு.... உடனே வருவான்...''

''சரி, டாக்டர்...'' சொல்லிக் கொண்டே கிளம்ப முயன்றாள் நர்ஸ். டாக்டரம்மாள் குறுக்கிட்டாள்.

''நில்லு...''

நின்றாள்.

''நர்ஸ் யூனிபார்ம்ல போகாதே... சேலை கட்டிகிட்டு போ...கிருஷ்ணன் காரணம் கேட்பான். ஆஸ்பத்திரிக்கு பின்னாடி நிறைய குப்பை சேர்ந்திடுச்சு... உடனே வண்டி கட்டிட்டு வான்னு சொல்லு...''

அவள் தலயாட்டிக் கொண்டே ட்ரஸ்ஸிங் ரூமுக்கு போய் காலையில் தான் கட்டிக் கொண்டு வந்த சேலைக்குள் நுழைந்து வெளிப்பட்டாள்.

''நான் வர்றேன் டாக்டர்...''

''ஒரு விஷயம்...''

''என்ன டாக்டர்...?''

''கிருஷ்ணன் கூட பேசும்போது பதட்டத்தைக் காட்டிக்காதே... நிதானமா இயல்பா பேசு...''

''எஸ்... டாக்டர்...''

அவள் ஹாஸ்பிடல் போர்டிகோவில் வந்து படிகளில் இறங்கினாள். அவள் கேட்டைத் தாண்டி தெருமுனைக்குக்கூட போயிருக்க மாட்டாள்.

வேகமாய் வந்து நின்ற ஆட்டோவிலிருந்து ராஜன் இறங்கினான். வேர்வை படிந்த முகம். கலைந்த தலை. மிரட்சியால் அலையும் பார்வை. ஜன்னல் வழியாக தெருவைப் பார்த்துக் கொண்டிருந்த டாக்டரம்மாள் துணுக்குற்றுப் போய் விருட்டென்று எழுந்தாள்.

ராஜன் ஆட்டோவுக்கு காசைக் கொடுத்து அனுப்பிவிட்டு வேகவேகமாய் உள்ளே நுழைந்தான். டாக்டரம்மாள் முகத்திற்கு இயல்பைக் கொண்டு வந்து புன்னகைத்தாள். ''வரப்பா...''

''டாக்டர்... இந்தாங்க நீங்க கேட்ட பணம்.''

''பணத்தைக் கொண்டு வந்து என்ன பிரயோஜனம்...? அவதான் போயிட்டாளே...''

''டாக்டர்... நீங்க என்ன சொல்றீங்க...''

''ஆமாப்பா... உன்னோட காதலிக்கு ரோஷம் தாங்கலை... ஏன் இப்படி அவசரப்பட்டு வயத்துல வாங்கிக்கிட்டேன்னு நர்ஸ் கேட்டிருக்கா. படுத்துட்டிருந்தவ விசுக்னு எந்திரிச்சு நின்னுட்டா... இப்படி குத்தி குத்தி பேசினா... நான் இங்கே டி அண்ட் ஸி பண்ணிக்க மாட்டேன்னு சொல்லி கிளம்பிட்டா... நானும் நர்ஸும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தோம்... பிடிவாதமா புறப்பட்டுப் போயிட்டா...''

ராஜன் திடுக்கிடான்.

''அவ... எங்கே போனா டாக்டர்...?''

''யாருக்குத் தெரியும்...?''

''டாக்டர்.... அவதான் உங்ககிட்டே கோப்பட்டு பேசினா... நீங்களும் அதே கோபத்தோடு பேசி அவளை அனுப்பிடறதா....?''

''ஆமாப்பா... அவ என் மக பாரு... அவளை தாங்கி பிடிச்சி உட்கார வெச்சு... சீமந்தம் பண்ணி... சை! அவ என்ன பொண்ணா...? என்னை ஒரு டாக்டருன்னு-கூட மதிக்காமே கண்டபடி பேசிட்டா...''



''அவ எங்கே போறதா சொல்லிட்டு போனா டாக்டர்...?''

''ஊருக்கு போறதா முனகிட்டு போனா.... என்னவோ இயற்கை வைத்தியம் இருக்காமே... அதை பண்ணி வயித்தை சுத்தப்படுத்திக்கப் போறாளாம்...''

ராஜன் தன் முக வியர்வையை இரண்டு கைகளாலும் வழித்துக் கொண்டு, பரிதாபமாய் டாக்டரைப் பார்த்தான்.

அவள் மேஜை டிராயரைத் திறந்து பணத்தை எடுத்து நீட்டினாள். ''இந்தா, நீ கொடுத்த பணம். அந்த ராங்கிக்காரிக்கிட்டே குடுத்தேன். அவ வாங்காமே போயிட்டா...''

டாக்டரம்மாள் கொடுத்த பணத்தை கைகள் நடுங்க வாங்கிக் கொண்டான் ராஜன். அதை வாங்கி சட்டைப் பையில் திணித்துக் கொண்டே கேட்டான்.

''டாக்டரம்மா...தங்கம் இங்கிருந்து போய் எவ்வளவு – நேரமிருக்கும்...?''

''நீ பணம் எடுக்கப் போன கொஞ்ச நேரத்திலேயே அவளும் கிளம்பிப் போயிட்டா... நானும் நர்ஸும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தோம். நீ ஆபரேஷன் பண்ணிக்காமே போனாலும் பரவாயில்லே... உன்னைக் கூட்டிட்டு வந்த ஆள் வந்துரட்டும்னு சொன்னோம்... அவ கேக்கலை...''

''தங்கமா இப்படியெல்லாம் பேசினா...? என்னால நம்பமுடியலையே டாக்டர் அவ யாரையும் எதிர்த்துக்கூட பேச மாட்டாளே...?''

''அப்போ நான் சொல்றது பொய்யா...?''

''நான் அப்படி சொல்லலை டாக்டர்...''

''நீ ஒண்ணும் என்கிட்டே பேசிக்கிட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. மொதல்ல இடத்தை காலி பண்ணு. நீ இன்னும் ஒரு நிமிஷம் நின்னுட்டிருந்தியானா... நான் போலீஸுக்கு போன் பண்ணுவேன்...''

''ஸாரி டாக்டர்... நான் வர்றேன்...''

ராஜன் கலங்கிப்போன விழிகளோடு ஹாஸ்பிடலை விட்டு வெளியே வந்தான். அவன் வெளியே போவதை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த டாக்ரம்மாள் அவன் தலைமறைந்ததும் பெருமூச்சு விட்டாள்.

வாஷ்பேசினுக்கு போய் வியர்த்திருந்த முகத்தை கழுவிக் கொண்டு மறுபடியும் நர்ஸுக்காக காத்திருந்தபோது...

வாசலில் அந்த வெள்ளை நிற மெடிக்கல் கேர் யூனிட் வேன் வந்து நின்றது. டாக்டரம்மாள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே வழுக்கைத் தலைகளோடு நான்கு பேர் இறங்கினார்கள். ஒவ்வொருவரின் கையிலும் ஒவ்வொரு பைல்.

உள்ளே நுழைந்தார்கள். டாக்டரம்மாளைப் பார்த்ததும் ஒருவர் கேட்டார். ''டாக்டர் ஞானசௌந்தரி?''

''எஸ்... நான்தான்...''

''தொந்தரவுக்கு மன்னிக்கணும்... நாங்க ஹெல்த் ஸ்குவாட்டிலிருந்து வர்றோம். பிரைவேட் நர்சிங் ஹோம்ஸ், க்ளினிக்ஸ் சுகாதாரத்தோடு பராமரிக்கப் படுதான்னு பார்க்கிறதுக்காக அனுப்பப்பட்ட குழு. இவர் டாக்டர் மோசஸ்... ஹி ஈஸ் நம்பியார். ஹி ஈஸ் கேசவன். ஐயாம் டாக்டர் பத்மனாபன்.''

டாக்டரம்மாள் அதிர்ந்தாள்.

''யூ மீன் செக்கிங்...?''

''எஸ். இந்த நர்ஸிங்ஹோமில் இருக்கிற ஒவ்வொரு ரூமையும் நாங்க பார்க்கணும். பொருள்களை ஹைஜீனிக்கா வெச்சிருக்கீங்களான்னு பார்க்கணும்.

டாக்டரம்மாளின் கால்கள் துணியாய் துவண்டன.






''இங்கே மொத்தம் எத்தனை ரூம்...?'' மெடிக்கல் கேர் யூனிட் குழுவில் வந்த ஒருவர் கேட்க, டாக்டரம்மாள் பேசத் திணறினாள்.



''நா... நாலு ரூம்...''

''எத்தனை கட்டில்...?''

''ரூ...ரூமுக்கு நாலு விதமா மொத்தம் பதினாறு கட்டில்...''

''பேஷண்ட்ஸ் யாராவது இருக்காங்களா...?''

''யா...யாருமில்லை...''

''ஆச்சர்யமாயிருக்கு... ஒருத்தர் கூட இல்லையா...?''

''இங்கே வர்றவங்க பூராவுமே அவுட் பேஷண்ட்ஸ்தான்... ஒன்லி டி அண்ட் சி கேஸஸ்தான். வாரத்துக்கு ரெண்டு மூஸ கேஸ்தான் வரும்.''

''வேற கேஸ்ஸ் வந்தா அட்டெண்ட் பண்ண மாட்டீங்களா...?''

''பொதுவாக பார்க்கிறதில்லை. எமர்ஜென்ஸியா இருந்தா பார்ப்பேன். சமயங்கள்ல பிரசவ கேஸும் பார்ப்பேன்.''

கேள்விகளைக் கேட்டு பதில்களை வாங்கிக் கொண்டே ஒவ்வொரு அறையாய் புகுந்து வெளிப் பட்டார்கள் நான்கு பேரும். அடிக்கடி பைல்களைத் திறந்து எதையோ குறித்துக் கொண்டார்கள்.

''கடைசியா ஹாஸ்பிடலுக்கு எப்போ ஒயிட் வாஷ் பண்ணினீங்க...?''

''லாஸ்ட் ஆயுதபூஜைக்கு...''

''பின்னே ஏன் சுவரெல்லாம் இவ்வளவு அழுக்கா இருக்கு...?''

''ஹாஸ்பிடலுக்கு வர்ற விசிட்டர்ஸ் வேலை தான்...''

''இதை உடனடியா ஒயிட்வாஷ் பண்ணுங்க...'' ஒருவர் சொல்ல டாக்டரம்மாள் தலையாட்டினாள்.

நான்கு பேரும் அந்த சின்ன வராந்தாவில் நடந்து ஆப்ரேஷன் தியேட்டருக்கு முன்னால் நின்றார்கள்.

டாக்டரம்மாளின் இருதயம் ஏராளமாய் எகிறியது.

துடித்த துடிப்பில் முகம் வியர்த்துக் கொட்ட சேலைத் தலைப்பால் வியர்வையை ஒற்றிக் கொண்டே யிருந்தாள்.

''தியேட்டரோட டைமென்ஷன் என்ன?''

உள்ளே நுழைந்து கொண்டே ஒருவர் கேட்டார்.

டாக்டரம்மாள் சொன்னாள், ''ட்வெண்ட்டி இன் ட்வெல்வ்...''

''ஏ.ஸி.யூனிட் ஒழுங்கா ஒர்க் பண்ணுதா...?''

''ப...ப..பர்பெக்ட்டா ஒர்க் பண்ணும்...''

ஏ.ஸி.யூனிட்டைப் பார்த்துவிட்டு அப்பரேட்டஸ் அலமாரியின் கதவைத் திறந்து உள்ளேயிருந்த சாதனங்களை எடுத்து சரி பார்க்க ஆரம்பித்தார்கள்.

பத்து நிமிஷம் அதில் கரைந்து போனதும் –

ஒருவர் திரும்பி மெல்லிய குரலில் கேட்டார். ''அது பாத்ருமா...?'' கேட்டுக் கொணடே பாத்ரூமை நோக்கி நடக்கவும் ஆரம்பித்தார்.

★★★

டெலிகிராபிக் ஆபீஸில் ராதா கொடுத்திருந்த டெலிகிராமைக் காட்டி அவளுடைய ஈரோடு அட்ரஸை சேகரித்துக் கொண்டு பஸ் பிடித்து நவநீத கிருஷ்ணனும், அவினாஷும் ஈரோடு போய்ச் சேர்ந்தபோது பிற்பகல் நான்கு மணி.

பிரட் ரோட்டின் மையத்தில் இருந்த அந்த ஓட்டு வீட்டுக்கு ஆட்டோவில் போய் இறங்கினார்கள். வீட்டின் முன் கதவில் பூட்டு தொங்கியது.

நவநீதகிருஷ்ணன் அந்த வீட்டுக்குப் பக்கத் திலிருந்த மளிகைக்கடை வாசற்படி ஏறி உள்ளே கல்லாவில் உட்கார்ந்திருந்த ஆளைக் கூப்பிட்டார். அவன் போலீஸ் யூனிபார்மை பார்த்ததும் எழுந்து ஓடோடி வந்தான்.

நவநீதகிருஷ்ணன் கேட்டார்.

''பக்கத்து வீடு ராதா வீடுதானே....?''

''ஆமா... ஸார்....''



''ஏன் வீடு பூட்டியிருக்கு?''

''அந்த பொண்ணு வேலைக்கு போயிருக்கும் ஸார்...''

''வேலைக்குப் போகுதா...?''

''ஆமா ஸார்...''

''என்ன வேலைக்கு...?''

''பஸ் ஸ்டாண்ட் ரோட்ல குபேரா எண்டர் பிரைசஸ்னு ஒரு கம்பெனி இருக்கு ஸார். அந்த கம்பெனியில் டைப்பிஸ்டா வேலை பார்க்குது...''

''ஆபீஸிலிருந்து எத்தனை மணிக்கு திரும்பி வரும்...?''

''ஆறு மணியாயிடும் ஸார்...''

''இன்னிக்கு ராதா வேலைக்குப் போனதை பார்த்தீங்களா...?''

''பார்த்தேன் ஸார்...''

''வேலைக்குப் போகும்போது எத்தனை மணி இருக்கும்...?''

''ஒன்பதரை மணி இருக்கும்...''

''இன்னிக்கு ஆபீஸுக்குப் போகும்போது கூட யாராவது இருந்தாங்களா...?''

''யாருமில்லை ஸார். அந்த பொண்ணு மட்டுந்தான் தனியா போச்சு...''

''அந்தப் பொண்ணு எந்த கம்பெனியில வேலை பார்க்குதுன்னு சொன்னீங்க...''

''குபேரா எண்டர்பிரைசஸ்...''

''பெரிய கம்பெனியா...?''

''ஆமா ஸார்... அந்த பஸ் ஸ்டாண்டு ரோட்டுக்குப் போனாலே நியான் போர்டு ஒன்னு பெரிசா தெரியும்...''

நவநீதகிருஷ்ணனும், அவினாஷும் மறுபடியும் ஆட்டோவுக்கு வந்து ஒரு பத்து நிமிஷம் நெரிசலான ரோடுகளில் பயணம் செய்து அந்த குபேரா

என்டர்பிரைசஸுக்கு முன்னால் இறங்கிக் கொண்டார்கள். ஆட்டோவை வெயிட்டிங்கில் இருக்கச் சொல்லிவிட்டு ஆபீஸின் போர்டிகோ படிகளில் உயர்ந்தார்கள்.

ஆரோக்கியமான கம்பெனி என்பது பார்த்த மாத்திரத்திலேயே தெரிந்தது. நீளமான வராந்தா பூராவும் பளீரென்ற மொசைக் கண்ணாடிக் கதவுகள். ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலின் ரிசப்ஷன் அறையை ஞாபகப்படுத்துவதுபோல் முன் ஹால்.

போலீஸ் யூனிபார்மை பார்த்ததுமே ரிசப்ஷன் கௌண்ட்டர்க்குள் இருந்த பெண் மெதுவாய் எழுந்து நின்றாள்.

''எஸ் ஸார்...''

''மிஸ் ராதாவை நாங்க பார்க்கணும்...''

''ராதா... டைப்பிஸ்ட்...'

''எஸ்...''

''ஒன் மினிட் ஸார். காலையில ராதா லீவு போட்டிருந்தாங்க. ஒருவேளை மத்தியானம் வந்திருக்கலாம். கேட்டுச் சொல்றேன்'' சொன்னவள் அருகிலிருந்த இண்டர்காமின் ரிஸீவரை எடுத்துக் கொண்டு பட்டனைத் தட்டினாள்,

''ஹலோ... நான் நான்ஸி. டைப்பிஸ்ட் செக்ஷன்ல ராதா இருக்காங்களான்னு கொஞ்சம் பார்த்து சொல்றீங்களா...?''

''....''

''இருக்காங்களா! உடனே ராதாவை ரிசப்ஷனுக்கு வரச் சொல்லுங்க.''

ரிஸீவரை வைத்தவள் நவநீத கிருஷ்ணனை ஏறிட்டாள். ''ஸார், அந்த சோபாவில் உட்கார்ங்க ஸார். ஒரு அஞ்சு நிமிஷத்துல ராதா வந்துடுவாங்க...''

நவநீதகிருஷ்ணனும் அவினாஷும் அந்த நீளமான வெல்வெட் சோபாவில் போய் உட்கார்ந்தார்கள். ஐந்து நிமிஷம் முடிவதற்குள்ளாகவே ராதா வந்தாள். பாப் தலை. ஒரு ஆணுக்கு இருக்கவேண்டிய உயரம்.



மாநிறத்துக்கும் கொஞ்சம் தூக்கலான நிறம். காதுகளில் பிளாஸ்டிக் வளையங்கள். கழுத்தில் பாசிச்சரம். சந்தன நிற சல்வார் கம்மீஸுக்குள் சிரமமாய் நுழைந்து பார்க்கிறவங்களை சிரமப்படுத்தினாள். தனக்காக காத்திருந்த போலீஸ் யூனிபார்மை பார்த்ததும் தன்னுடைய சின்ன நெற்றியின் மேல் அவசர அவசரமாய் வியர்த்து கையில் வைத்திருந்த பூப்போட்ட கர்ச்சிப்பால் ஒற்றிக் கொண்டாள்.

''எ...எஸ் இன்ஸ்பெக்டர்...''

''ஸாரி ஃபார் த டிஸ்டர்ப்ன்ஸ் மிஸ் ராதா... உங்ககிட்ட ஒரு சின்ன என்கொய்ரி...''

''என்கொய்ரியா...?''

''எஸ்... அப்படி உட்காருங்க.''

மறுபடியும் நெற்றி வியர்வையை ஒற்றிக் கொண்டு உட்கார்ந்தாள்.

''காலையில நீங்க லீவா...?''

''ஆ...ஆமா...''

''எதுக்காக லீவு போட்டீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?''

''பர்சனலா... கொஞ்சம் பேங்க் ஒர்க் இருந்தது... அதை பார்க்கத்தான் லீவு போட்டேன்...''

''எந்த பேங்க்ல...?''

''இ...இண்டியன் பேங்க்ல...''

''மிஸ் ராதா... நீங்க ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய்யை சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. இந்த தந்தியை நீங்கதானே குடுத்தீங்க...?''

சர்ட் பாக்கெட்டில் வைத்திருந்த அந்த தந்தியை எடுத்து நீட்டினார் நவநீதகிருஷ்ணன். அதை வாங்கிப் பார்த்த ராதா குபுக்கென்று எழுந்து நின்றாள்.

''இன்ஸ்பெக்டர், இது எப்படி உங்க கைக்கு...?''

''கிடைச்சதுன்னு கேட்கிறீங்களா? சபாபதி வீட்டுக்கு போனோம். கிடைச்சுது... சபாபதி உங்களைப் பார்க்க வந்தாரா...?''

ராதா சுற்றும் முற்றும் ஒரு திருட்டுப் பார்வை பார்த்துவிட்டு மெல்லிய குரலில் சொன்னாள்.

''வந்தார்...''

''உங்களுக்கும் அவருக்கும் என்ன உறவு...?''

''பழக்கம்தான்...''

''பழக்கம்ன்னா காதலா...?''

''ஆ...மா...''

''சபாபதி ஏற்கனவே கல்யாணமானவர். அந்த விவரம் உங்களுக்குத் தெரியுமா...?''

''தெரியும்...''

''தெரிஞ்சுமா அவரை காதலிக்கிறீங்க...?''

''ஆமா...''

''சரி, எதுக்காக சபாபதியை அவசரமா வரச் சொல்லி தந்தி குடுத்தீங்க...?''

''அ...அது வந்து என்னோட கல்யாண விஷயமா பேசத்தான். பாலக்காட்டுல இருக்கிற என்னோட அக்கா லெட்டர் போட்டிருந்தாங்க. எனக்கு கொச்சியில மாப்பிள்ளை பார்க்கிறதா அதுல குறிப்பிட்டிருந்தாங்க... அதைப் பத்தி பேசத்தான்... அவரை வரச் சொன்னேன்...''

''பாலக்காட்டுல உங்களுக்கு அக்கா இருக்காங்களா...?''

''ஆமா.... ஷி ஈஸ் எ டாக்டர். பேரு ஞானசௌந்தரி....''






இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன் ராதாவிடம் விசாரணையை முடித்துக் கொண்டு அவினாஷோடு வெயிட்டிங்கில் காத்திருந்த ஆட்டோவுக்கு வந்தார். கேஸில் பிடி எதுவும் கிடைக்காமல் தளர்ந்து போயிருந்தார்.



''அவினாஷ்.... இந்த ராதாவைப் பத்தி உங்க அபிப்பிராயம் என்ன?''

''ஹார்ம்லஸ் ஸார். சபாபதிக்கும் இந்தப் பொண்ணுக்கும் தொடர்பு இருக்கு... சபாபதியோட நடவடிக்கைகள்ல கொஞ்சம் மர்மம் தெரியுது. ஆளை ஸ்டேஷனுக்கு கூட்டிட்டு போய் ரெண்டு தட்டு தட்டி விசாரிச்சாத்தான் உண்மை வெளியே வரும்...''

''ராதாவை விசாரிச்சதுல ஒரு சின்ன லிங்க் கிடைச்சிருக்கு அவினாஷ்... அதை நோட் பண்ணீங்களா...?''

''என்ன லிங்க் ஸார்?''

''பாலக்காட்டிலிருந்து அனுப்பப்பட்ட மீன் கூடையிலதான் அந்தக் கையை கண்டெடுத்தோம்...''

''ஆமா ஸார்...''

''ராதாவோட சொந்த ஊரும் பாலக்காடுதான்...''

''இது ரொம்பவும் பலஹீனமான பாயிண்ட் ஸார். ராதா பாலக்காட்டைச் சேர்ந்தவங்கிற ஒரேயொரு காரணத்துக்காக அவமேலே நாம் சந்தேகப்பட முடியுமா...?''

''நான் சந்தேகப்படச் சொல்லலே அவினாஷ். சபாபதிக்கு புக் பண்ணப்பட்ட மீன் கூடை பாலக்காட்டிலிருந்துதான் வந்திருக்கு... சபாபதியும் அடிக்கடி பாலக்காட்டுக்கு போய்ட்டு வர்ற ஆசாமி. ராதாவோட சொந்த ஊரும் பாலக்காடு. யோசிச்சுப் பார்த்தா இது ஒரு அற்பமான தடயம்தான்... ஆனா... பின்னாடி ஏதாவது ஒரு சந்தர்ப்பத்துல உதவும்...''

''ஸார்... நான் ஒரு யோசனையை சொல்லலாமா...?''

''ப்ளீஸ்...''

''சபாபதிக்கு மீன் கூடைகளை புக் பண்ணின ஆள் பேர் முகமது காசிம். முகமது காசிமோட கொழிஞ்சம்பாறை அட்ரஸ் நம்மகிட்ட இருக்கு... கேஸை அந்தப் பக்கத்திலிருந்து நெருக்கிட்டு வந்தா ஏதாவது உண்மை வெளியே வரலாம் ஸார்...''

''ஊருக்கு போனதும் முதல் காரியம் அதுதான்...'' நவநீதகிருஷ்ணன் சொல்லிக் கொண்டே ஆட்டோவில் ஏறினார்.

ஆட்டோ பஸ் ஸ்டாண்டை நோக்கி நகர்ந்தது.

★★★

''இதுதான் பாத்ரூமா...?'' என்று டாக்டர் குழுவில் ஒருவர் கேட்டதும் டாக்டரம்மாள் சகலமும் ஆடிப்போனாள். முகம் புதிதாக வியர்த்து வழிந்தது. நெஞ்சுக் கூட்டுக்குள் இருதயம் பொறிக்குள் மாட்டிக் கொண்ட எலி மாதிரி தத்தளித்தது.

''ஆமா... அது பாத்ரூம்தான்...''

''ஸ்டெரிலைஸ் பண்றதுக்கு ரூம் தனியா இருக்கா...?''

''இருக்கு...'' டாக்டரம்மாள் சேலைத் தலைப்பால் வியர்வையை ஒற்றிக் கொண்டே சொல்ல, குழுவில் வந்த ஒருவர் பாத்ரூமின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே எட்டிப் பார்த்தார். மெதுவாக உள்ளே நுழையவும் ஆரம்பித்தார்.

''பாத்ரூமோட டைமென்ஷன் என்ன...?''

''பத்துக்கு பனிரெண்டு...''

''பாத்டப்பை ஏன் தலைகீழா திருப்பி போட்டிருக்கீங்க...?''

''அ...அ...அது கொஞ்சம் டேமேஜ். சரி பண்ணனும். அதுக்காகத்தான் தண்ணி படாமே...'' பேசவே மூச்சுத் திணறினாள் டாக்டரம்மாள்.

''பாத்ரூம் லாவட்ரியோட ஹைஜீனிக் கண்டிஷன் இன்னும் நல்லா இருக்கணும் டாக்டர். இது போதாது.''

''இனிமே மெய்ன்டைன் பண்றேன்...''

எல்லோரும் பாத்ரூமை விட்டு வெளியே வந்தார்கள். டாக்டரம்மாள் இயல்பான மூச்சுக்கு வந்தாள். ''அப்பரேட்டஸ் ரிஜிஸ்டரை பார்க்கிறீங்களா ஸார்...?''

''வேண்டாம்.. ஹாஸ்பிடல் செயல்பட்ட நாளிலிருந்து இதுவரைக்கும் டெத்ரோல் எவ்வளவு?''



''எதுவுமே இல்லை...''

''சிக்கலான ஆபரேஷன் கேஸ்களை நீங்களே அட்டெண்ட் பண்றீங்களா?''

''நோ... ஸ்பெஷலிஸ்ட்களை கூட்டிக்கிடுவேன்.''

''அப்படி கூப்பிடற ரெண்டு டாக்டர்ஸ் பேரைச் சொல்லுங்க...''

''டாக்டர் சோமநாதன், டாக்டர் திரிவேதி...''

டாக்டர் குழுவில் இருந்த ஒருவர் தன் கையிலிருந்த பைலை நீட்டினார். ''இதுல ஒரு கையெழுத்தை போடுங்க டாக்டர். ஹாஸ்பிடலோட ஹைஜீனிக் கண்டிஷன் சாடிஸ்பேக்டரின்னு போட்டிருக்கோம். அது ரிக்கார்ட்ஸுக்காக.. வெளிப்படையா சொல்லப் போனால் ஹாஸ்பிடல்ல சுகாதாரம் போதாது... மூணு மாசம் கழிச்சு நாங்க மறுபடியும் செக் பண்ண வருவோம்... அப்போது எந்த ரிமார்க்கும் இல்லாமே பார்த்துக்குங்க...''

டாக்டரம்மாள் தலையாட்டி அவசர அவசரமாய் பேனாவை உருவி லேசான கைநடுக்கத்தோடு கையெழுத்திட்டாள். படபடப்பும், பதட்டமும் தணிந்து மார்புகள் சீரான சுவாசத்திற்கு திரும்பின.

வாசல் வரைக்கும் போய் அவர்களை ஜீப்பில் ஏற்றி அனுப்பிவிட்டு தன் அறைக்கு திரும்பி நாற்காலியில் பொத்தென்று விழுந்து நெற்றியைப் பிடித்துக் கொண்டாள். அவளுடைய மூளை பாகம் எச்சரித்தது. 'தங்கத்தின் பிணம் இங்கே இருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் ஆபத்துதான்.'

நாற்காலியில் உட்காரப் பிடிக்காமல் மறுபடியும் எழுந்து ஜன்னலருகே வந்து வாசலை எட்டிப் பார்த்தாள். மனசு பரபரவென்று யோசித்தது.

'வண்டியோட்டி கிருஷ்ணனை அழைத்து வரப் போன நர்ஸ் ஷீலாவை எங்கே இன்னமும் காணோம்...?''

''ஒருவேளை கிருஷ்ணனின் வீட்டைக் கண்டுபிடிக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறானோ என்னவோ...?''

ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு வாசலையே பார்த்துக் கொண்டிருந்தவள் திடீரென்று இருதயத்தின் மையத்தில் அதிர்ச்சியை வாங்கினாள்.

ராஜன் மறுபடியும் வாசற்படி ஏறி உடம்பு பூராவும் அலையும் பதட்டத்தோடு உள்ளே வந்து கொண்டிருந்தான். டாக்டரம்மாள் எரிச்சலாகி அறையை விட்டு வெளியே வந்து கோபமாய் அவனை எதிர்கொண்டாள்.

''என்ன மறுபடியும் வந்துட்டே...?''

காய்ந்து போன உதடுகளை அவசர அவசரமாய் ஈரப்படுத்திக் கொண்டு பேசினான் ராஜன். ''டாக்டர்... பஸ்ஸ்டாண்ட் பூராவும் அலைஞ்சு பார்த்துட்டேன். தங்கத்தைக் காணோம்.''

''அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்றே? அவ பஸ் ஏறி ஊருக்கு போயிருப்பா...''

''அப்படி அவ ஊருக்குப் போகமாட்டா டாக்டர். என்னைப் பார்க்காம, என்கிட்ட சொல்லாம அவ ஊருக்கு போகமாட்டா...''

''அப்ப... நான் அவளை ஒளிச்சு வெச்சுட்டு... இல்லேன்னு சொல்றேனா? போ, உள்ளார நுழைஞ்சு இந்த ஹாஸ்பிடல் பூராவும் தேடிப்பாரு... இருந்தா உன்னோட தங்கத்தை கூட்டிகிட்டு போ... உன்கூட பெரிய ரோதனையா போச்சு...''

''டாக்டர்! கோபிச்சுக்காதீங்க... இந்த தெரு முனையில இருக்கிற பெட்டிக்கடையில விசாரிச்சேன்...''

''விசாரிச்சியா... என்ன விசாரிச்சே..??''

''செகப்பு சேலை கட்டிக்கிட்டு ஒரு பொண்ணு இந்தப் பக்கமா போச்சான்னு கேட்டுப் பார்த்தேன். அப்படி யாரையுமே அவன் பார்க்கலைன்னு சொன்னான்.''

''அவன் பார்க்காத நேரத்துல அவ போயிருப்பா...''

''டாக்டர், உங்க மேலே நான் எந்த குத்தத்தையம் சொல்லலை... அவ ஹாஸ்பிடல் வாசற்படியை விட்டு எறங்கி, எந்தப் பக்கமா போனான்னு மாத்திரம் சொல்லுங்க...''



''நான் பார்க்கலை! நீ இங்கே நின்னு பேசிட்டிருக்காதே... கிளம்பு,...''

''டா...டாக்டர்...''

''நீ இப்போ போறியா...? போலீசுக்கு போன் பண்ணட்டுமா...?''

ராஜன் தடுமாற்றமாய் பின்வாங்கினான். ''வேண்டாம் டாக்டர்... நான் போயிடறேன்...''

ராஜன் கண்ணீர் ததும்பும் பார்வையோடு டாக்டரம்மாளைப் பார்த்துவிட்டு வாசற்படி விட்டு கீழே இறங்கி நடந்தான்.

அவன் கண்ணில் மறைந்த பத்தாவது நிமிஷம் நர்ஸ் ஷீலாவும், வண்டியோட்டி கிருஷ்ணனும் உள்ளே வந்தார்கள்.

அறைக்கு வெளியே நின்று மார்புக்கு குறுக்காக கைகளைக் கட்டிக் கொண்டு வணக்கம் போட்டான் கிருஷ்ணன். கிருஷ்ணனுக்கு நடுத்தர வயது. கல் மாதிரி இறுகிப்போன கைகளும் கால்களும் கரணை கரணையாய் தெரிந்தன. குடிப்பழக்கம் உண்டு என்று சிவப்பேறிய கண்கள் சொல்ல, பீடிப் புகையை நேசிக்கும் உதடுகள் கறுப்பாய் தெரிந்தன. காக்கி அரை டிராயரும் அழுக்கேறிய வெள்ளை சர்ட்டும் உடம்பில் ஏறியிருந்தது.

''உள்ளே வா... கிருஷ்ணன்...''

குழைந்த குரலில் டாக்டரம்மாள் கூப்பிட, ஆச்சரியப்பட்டான் கிருஷ்ணன். எப்போதுமே வாசலில் நிற்கவைத்து அதட்டலாய்ப் பேசி அனுப்பும் டாக்டரம்மாள் இன்றைக்கென்ன உள்ளே வரச் சொல்கிறாள்.

தயக்க நடை நடந்து உள்ளே போனான்.

''அம்மா...''

''வா கிருஷ்ணன்... எம் முன்னாடி வந்து நில்லு. ஷீலா, வெளியே நின்னு யாராவது வர்றாங்களான்னு பார்த்துக்க...''

"எஸ் டாக்டர்..."

நர்ஸ் நகர்ந்து வாசலுக்குப் போக, டாக்டரம்மாள் கிருஷ்ணனை ஏறிட்டாள். "கிருஷ்ணன்... நம்ம ஆஸ்பத்திரில கொஞ்ச நேரத்துக்கு முந்தி ஒரு சின்ன அசம்பாவிதம் நடந்துடுச்சு..."

"என்னம்மா...?"

"ட்ரீட்மெண்ட்டுக்கு வந்த ஒரு அநாதைப் பொண்ணு திடீர்னு செத்துடுச்சு... அந்தப் பொண்ணு யாரு... எந்த ஊர்ன்னு தெரியலை... அப்படியே தெரிஞ்சு அந்த பாடியை அவங்ககிட்டே ஒப்படைச்சாலும் அவங்க எம்மேலத்தான் சந்தேகப்படுவாங்க. போலீஸ் விசாரணைக்கு வருவாங்க. பேப்பர்ல நியூஸ் வரும். இதனால நம்ம ஹாஸ்பிடல் பேர்தான் கெடும்..."

கிருஷ்ணன் டாக்டரம்மாளின் முகத்தையே சலனமில்லாமல் பார்த்துக் கொண்டிருக்க, அவள் தொடர்ந்தாள்.

"பாடியை யாருக்கும் தெரியாமே... டிஸ்போஸ் பண்ணனும். அதுக்கு உன்னைவிட்டா வேற ஆள் நம்பிக்கையா கிடைக்கமாட்டாங்க கிருஷ்ணன். அதனாலதான் உன்னைக் கூட்டிட்டு வரச் சொன்னேன்!"

கிருஷ்ணனின் முகம் இருண்டு போயிருந்தது.

"அந்த பொண்ணு இப்போ எங்கேம்மா...?"

"வா... காட்றேன்." டாக்டரம்மாள் நாற்காலியைத் தள்ளிக் கொண்டு எழுந்த அதே விநாடி வெளியே நின்றிருந்த நர்ஸ் பதட்டமாய் உள்ளே ஓடிவந்தாள்.






பதட்டமாய் உள்ளே ஓடிவந்த நர்ஸின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள் டாக்டரம்மாள். கிசுகிசுப்பான குரலில் கேட்டாள். "என்ன ஷீலா...?"



"டாக்டர் சோமநாதன் உங்களை பார்க்கிறதுக்காக வந்திட்டிருக்கார் மேடம்..."

டாக்டரம்மாள் முகம் மாறி நெற்றியில் குழப்ப் ரேகைகளைக் காட்டினாள்.

"டாக்டர் மட்டும்மான் வர்றாரா? இல்லே கூட யாரவாது வர்றாங்களா...?"

"டாக்டர் மட்டும்தான் வர்றார்..."

'இந்த மனுஷன் இந்த நேரத்துல எதுக்காக வர்றார்...?' யோசித்துக் கொண்டிருக்கும்போதே – சோமநாதன் உள்ளே நுழைந்தார்.

முன் மண்டையில் முடி கொட்டிப் போய் பெல்ஜியம் கண்ணாடி பளபளப்பில் வழுக்கையைக் காட்டினார்.

தொளதொளவென்ற வெள்ளை பேண்டிலும் சர்ட்டிலும் நுழைந்திருந்தார்.

"வாங்க மிஸ்டர் சோமநாதன்..."

"வர்றேன்... வர்றேன்... வழக்கமா இந்நேரத்துக்கு நீங்க வீட்லதானே இருப்பீங்க...?"

"ஓ...ஓ...ஒரு கேஸ் வந்தது. லேட்டாயிடுச்சு. உட்காருங்க டாக்டர்..."

"உட்கார நேரமில்லை. ஒரு சின்ன ஆப்ளிகேஷன்..."

"என்ன?"

"என்னோட பேஷண்ட் ஒருத்தர்க்கு உடடினயா அப்பெண்டிக்ஸ் ஆபரேஷன் பண்ணனும்... என்னோட க்ளீனிக் தியேட்டர்ல டாக்டர் ராஜகோபாலன் ஒரு கிட்னி ட்ரான்ஸ்பிளாண்ட் ஆபரேஷன்ல ஈடுபட்டிருக்கார். தியேட்டர் எனக்குக் கிடைக்க... சாயந்தரம் ஏழு மணிக்கு மேலே ஆயிடும்...உங்க தியேட்டர் ஃப்ரீதானே?"

டாக்டர் சோமநாதன் அவசரமாய் மறுத்தாள். "ஸாரி டாக்டர்... எனக்கு மத்தியானம் ஒரு டி அண்ட் ஸி கேஸ் இருக்கு... பேஷண்ட் ஒரு அரை மணி நேரத்துல வந்திடுவாங்க..."

டாக்டர் சோமநாதன் அவளை உன்னிப்பாய் பார்த்தார். ''ஏன் இன்னிக்கு ரொம்பவும் நெர்வஸா இருக்கீங்க...?''

''நெர்வஸா....? அப்படியெல்லாம் ஒன்னுமில்லையே...''

''நோ... நோ... உங்க உடம்புல, குரல்ல, ஒருவித பதட்டம் தெரியுது. எனி பிராப்ளம்...?''

''நோ டாக்டர்... ஒரு பிராப்ளமும் இல்லை...''

''தியேட்டர் நாளைக்கு ஃப்ரீயா இருக்குமா?''

''நாளைக்கு ஃப்ரீதான்...''

''நாளைக்குக் காலையில உங்களை மறுபடியும் காண்டாக்ட் பண்றேன்...'' டாக்டர் சோமநாதன் சொல்லிக் கொண்டே நகர்ந்தார். அவர் நகர்ந்து வாசலில் நின்றிருந்த காருக்குப் போனதும் ஆசுவாச பெருமூச்சு விட்டாள் டாக்டரம்மாள். கிருஷ்ணனின் பக்கமாய் திரும்பினாள்.

''என் கூட வா...''

ஆபரேஷன் தியேட்டரை நோக்கி நடந்தாள்.

''கிருஷ்ணன்...''

''அம்மா...''

''இந்த ஹாஸ்பிடல்ல எத்தனை வருஷமா நீ வேலை பார்க்கிற?''

''அஞ்சு வருஷத்துக்கு மேலாச்சுமா...''

''நம்ம ஹாஸ்பிடலுக்கு கெட்ட பேர் வர்றதை நீ விரும்புவியா...?''

''மாட்டேன்ம்மா...''

''அப்படின்னா நான் சொல்றபடி நீ நடந்துக்கணும்... கை நிறைய பணம் தர்றேன். விவகாரம் வெளியிலே வராமே காதும் காதும் வெச்ச மாதிரி காரியத்தை முடிச்சுடணும்...''

''நீங்க எப்படி சொல்றீங்களோ... நானும் அப்படியே பண்ணிடறேம்மா... செத்தது சின்ன வயசு பொண்ணாம்மா...?''



''ஆமா...''

ஆபரேஷன் தியேட்டருக்குள் நுழைந்தார்கள். கிருஷ்ணன் மெல்லிய குரலில் கேட்டான். ''இந்த விஷயத்தை ஷீலா நர்ஸம்மா வெளியே சொல்ல மாட்டாங்களா....?''

''சொல்லமாட்டா...''

பாத்ரூம் கதவைத் தள்ளினாள் டாக்டரம்மாள். உள்ளே நுழைந்து பாத்டப் அருகே வந்து நின்றாள். கிருஷ்ணன் தயக்கமாய் உள்ளே எட்டிப் பார்த்தான்.

''வா கிருஷ்ணன்... உள்ளே வா. வந்து இந்த பாத்டப்பை திருப்பிப் போடு. பாடி இதுக்குள்ளே தான் இருக்கு...''

கிருஷ்ணன் கீழே குனிந்து இரண்டு கைகளாலும் பாத் டப்பை புரட்டிப் போட்டான். தூங்குகிற சைஸில் ஒருக்களித்துப் படுத்திருந்த தங்கத்தின் பிணத்தைப் பார்த்ததும் ஒரு 'உம்' கொட்டி பரிதாபப்பட்டான்.

''ரொம்பச் சின்ன பொண்ணும்மா...! என்ன நோவுக்காக உங்ககிட்டே வந்துச்சுமா?''

''கிருஷ்ணன்! இதெல்லாம் உனக்கு வேண்டாத விஷயம். வந்தது யாருன்னு எனக்குத் தெரியாது. ட்ரீட்மெண்ட் எடுத்துக்கிறதுக்கு முன்னாடியே செத்துட்டா...இந்த பொண்ணு கூட யாரும் வரலை... இவ மட்டுந்தான் வந்தா...''

''சரிம்மா... நான் இப்போ என்ன பண்ணணும்...?''

''உன்னோட குப்பை வண்டியை கொண்டு வந்திருக்கியா?''

''கொண்டு வந்திருக்கேன்மா.''

''எங்கே நிறுத்தியிருக்கே?''

''ஹாஸ்பிடலுக்குப் பின்னாடி...''

''வண்டியில குப்பை இருக்கா...?''

''பாதி வண்டிக்கு இருக்கும்மா...''

''போதும்! இப்ப நான் சொல்றதை நல்லா கவனி கிருஷ்ணன். நர்ஸ் ஷீலா இப்போ ஆஸ்பத்திரி பின்

பக்க கேட்டைத் திறந்துவிடுவா... நீ வண்டியை உள்ளே கொண்டு வர்றே... வண்டியில இருக்கிற குப்பையை வெளியே எடுத்து கொட்டிட்டு இந்த பெண்ணோட பிணத்தை எடுத்து வண்டியில் வெச்சு திரும்பவும் கொட்டின குப்பையை எடுத்து வண்டிக்குள்ளே போட்டு நிரவிவிடறே...''

கிருஷணன் சிரமமாய் எச்சில் விழுங்கிக் கொள்ள, டாக்டரம்மாள் தொடர்ந்தாள்.

''ஆஸ்பத்திரியில் இருக்கிற குப்பை கூளத்தையும் அள்ளி வண்டியில போட்டுக்கிட்டு இங்கிருந்து மூணு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிற எருமேட்டுக்கு கிளம்பறே...''

''அ...அம்மா...''

''என்ன...?''

''இந்த பகல் நேரத்துலேயே கிளம்பணுமா?''

''ஆமா... அப்பத்தான் யார்க்கும் சந்தேகம் வராது... நீ வழக்கமா பகல் நேரத்துலதானே எருமேட்டுக்குப் போய் குப்பையைக் கொட்டிட்டு வருவே...?''

''ஆமா...''

''அதே மாதிரி இன்னிக்கும் கிளம்பு... நீ இப்போ வண்டி கட்டி புறப்பட்டாக்கூட சாய்ந்தரம் நாலு மணி ஆயிடும். பொட்டல்காட்டுல இருக்கிற அந்த எருமேட்டுக்கு ஒரு ஈ காக்கா கூட வராது. நீ வண்டியை உள்ளே ஓட்டிட்டு போய் வசதியான இடம் பார்த்து குழி தோண்டி இந்த பொணத்தை புதைச்சு குப்பையை மேலே கொட்டிடு...''

கிருஷ்ணன் கீழே கிடந்த தங்கத்தின் பிணத்தை பயமாய் பார்த்தான். முகத்திற்கு வியர்வை வந்திருந்தது.

''என்ன கிருஷ்ணன். பதிலையே காணோம்...?''

''எ...எ...எனக்குப் பயம்மாயிருக்கம்மா...''

''பயமா... என்ன பயம்...?''

''வழியில யாராவது வண்டியை நிறுத்தி பார்த்துட்டா?''



''இப்படி எப்பவாவது பார்த்திருக்காங்களா?''

''இல்லை...''

''பின்னே ஏன் பயப்படறே? இதோ பார் கிருஷ்ணன், இந்த வேலை ரொம்பவும் சுலபமான வேலை... தினசரி ஒரு தடவை குப்பை கொட்டிட்டு வந்தா உனக்கு எவ்வளவு பணம் கிடைக்கும்...?''

''நூறு ரூபா...''

''நான் உனக்கு ஐயாயிரம் ரூபா தர்றேன். காரியத்தை கச்சிதமா முடிச்சுட்டு வா...''

கிருஷ்ணன் வாய் தானாக ஒரு ஆட்டோமேடிக் கதவு மாதிரி திறந்தது. தலை தன்னிச்சையாக ஆடியது.

''சரிம்மா...''

★★★

கொழிஞ்சம்பாறை.

மெயின்ரோடு.

ரெயில்வே பார்சல் ரசீதில் இருந்த முகமது காசிமின் அட்ரஸை எடுத்துக் கொண்டு சரியாய் வந்து சேர்ந்திருந்தார்கள் இன்ஸ்பெக்டர் நவநீத கிருஷ்ணனும், அவினாஷும்.

முகமது காசிம் லுங்கி கட்டி தொப்பை போட்டு குள்ளமாய் வீட்டுத் திண்ணையின் மேல் உட்கார்ந்து சுற்றிலும் பரப்பப்பட்டிருந்த மீன் கூடைகளை எண்ணிக் கொண்டிருந்தார்.

போலீஸ் யூனிபார்மை பார்த்ததுமே எண்ணுவதை சட்டென்று நிறுத்தி எழுந்தார். நவநீதகிருஷ்ணன் கேட்டார்.

''நீங்கதானே முகமது காசிம்?''

''ஆமா ஸார்...''

''இந்த ரயில்வே ரசீது உங்களோடதுதானே...?''

தன் முகத்திற்கு முன்னால் நீட்டப்பட்ட ரசீதைப் பார்த்துவிட்டு தலையாட்டினார் முகமது காசிம்.

‘‘ஆமா ஸார்... சபாபதிக்கு நான் மீன்லோடு பு பண்ணின ரசீது இது’’ என்றவர் மெல்லிய குரலி கேட்டார்.

‘‘அந்த ‘கை’ விஷயமா விசாரிக்க வந்தீங்களா?

‘‘உங்களுக்கு எப்படி விஷயம் தெரியும்?’’

‘‘நேத்தைக்கே சபாபதி எனக்கு போன் பண்ணி சொன்னார். எனக்கு அந்த நியூஸ் ரொம்பவும் அதிர்ச்சிய இருந்தது. எந்த நிமிஷமும் உங்களை எதி பார்த்திட்டிருந்தேன் ஸார்...’’

‘‘அந்த ‘கை’ விவகாரத்தைப் பத்தி நீங்க என் சொல்றீங்க?’’

‘‘என்னோட வியாபாரத்தைப் பார்த்து பொறாமை பட்டவங்க யாரோ வேணுமின்னே பண்ணின வே ஸார் இது...’’

‘‘யார் பண்ணியிருப்பாங்கன்னு நினைக்கிறீங்க?

‘‘இந்த கொழிஞ்சம் பாறையில் மீன் வியாபா பண்றவங்க கிட்டத்தட்ட நூறு பேர் இருப்பாங்க ஸார். எல்லாருமே ஒருத்தருக்கொருத்தர் பொறாம பிடிச்சவங்க... எதிரி எப்ப விழுவான். அவன் மே ஏறி நிக்கலாம்ன்னு காத்திட்டிருக்கிறவங்க.’’

‘‘குறிப்பா யாரு...?’’

‘‘அதெப்படி ஸார் சொல்ல முடியும்...? நா யாரையாவது சொல்லப் போய் அது தப்பாயிட்டா. நாளைக்கு நான் இந்த ஊர்ல வியாபாரம் பண் முடியாது ஸார்...’’

அவினாஷ் குறுக்கிட்டு கேட்டார்.

‘‘சரி, கூடையில மீனைப் போட்டு ‘பேக்’ பன் இடம் எது?’’

‘‘அந்த இடம் மார்க்கெட் ரோட்ல இருக்கு ஸார்...

‘‘வாங்க, வந்து அந்த இடத்தைக் காட்டுங்க... நவநீதகிருஷ்ணன் சொல்ல, முகமது காசிம் இருன் முகத்தோடு கிளம்பினார்.



## 12



கொழிஞ்சம் பாறை மார்க்கெட் ரோட்டின் கடைசியில் ஒரு சிறிதான ஆஸ்பெஸ்டாஸ் கொட்டகைக்குக் கீழே முகமது காசிமின் மீன் கிடங்கு செயல்பட்டுக் கொண்டிருந்தது. நான்கைந்து பெண்கள் மீன்களை எடை போட்டு சரி பார்த்து ஓலைப்பாயில் கட்டி கூடைக்குள் போட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தக் கிடங்கைச் சுற்றிலும் நின்றிருந்த காற்று மீன் வாடையால் கெட்டுப் போயிருந்தது.

இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணனையும், சப்-இன்ஸ்பெக்டர் அவினாஷையும் அழைத்துக் கொண்டு கிடங்குக்குள் நுழைந்தார் முகமது காசிம். நவநீதகிருஷ்ணன் மூக்கைப் பொத்திக் கொண்டே சுற்றும் முற்றும் பார்வையைப் போட்டார்.

‘‘வாரத்துக்கு எத்தனை மீன் கூடை அனுப்புவீங்க...?’’

‘‘ரெண்டு வேகன் ஸார்...’’

‘‘மீனை பேக் பண்ற செக்ஷனில் மொத்தம் எத்தனை பேர் வேலை செய்யறாங்க...?’’

‘‘மொத்தம் ஏழு பேர் ஸார்...’’

‘‘எல்லாமே பெண்கள்தானா?’’

‘‘ஆமா ஸார்...’’

‘‘சம்பவம் நடந்த அன்றைக்கு இதே பெண்கள் தான் வேலை பார்த்திட்டிருந்தாங்களா?’’

‘‘ஆமா ஸார்...’’

நவநீதகிருஷ்ணன் அந்தப் பெண்களைப் பார்த்துக் கொண்டே உள்ளே போனார். மீன் நாற்றமும், கருவாட்டு நாற்றமும் மூக்கை கப்பென்று வந்து கவ்வியது. மேல் பாக்கெட்டிலிருந்து கர்ச்சிப்பை

எடுத்து மூக்கைப் பொத்திக் கொண்டே முகமது காசிமைக் கேட்டார்.

''மீன் கூடையெல்லாம் பேக் ஆனதும் பாலக்காடு ரயில்வே ஸ்டேஷனுக்கு கொண்டு போய் வேகன்ல ஏத்துவீங்க?..?''

''ஆமா ஸார்...''

''ஸ்டேஷனுக்கு மீன் கூடைகளை எதுல கொண்டு போவீங்க...?''

''லாரியில...''

''சொந்த லாரியா... வாடகை லாரியா...?''

''வாடகை லாரிதான் ஸார்...''

''அந்த கை இருந்த மீன் கூடைகளை ஏத்திக்கிட்டு போன லாரி எது... அதோட ட்ரான்ஸ்போர்ட் பேரென்ன...?''

''பாத்திமா லாரி ட்ரான்ஸ்போர்ட் ஸார்... நான் வழக்கமா மீன் கூடைகளை லோட் பண்றதுக்கு அந்த ட்ரான்ஸ்போர்ட் லாரியைத்தான் அமர்த்திக்குவேன்...''

''லாரி ஓனர் பேரு...?''

''அவர் பேரு அசன்சுண்... பாலக்காட்டிலே அவர் தான் பெரிய லாரி ட்ரான்ஸ்போர்ட் வச்சிருக்கார்...''

''லாரியில லோடு பண்ணின மீன் கூடையெல்லாம் உடனடியா பாலக்காடு ரயில்வே ஸ்டேஷனுக்கு போயிடுமா...?''

''உடனடியா போகாது ஸார்...''

''பின்னே...?''

''லாரி ஷெட்டுக்கு போயிட்டு... அங்கே வேற ஏதாவது மெட்டீரியல்ஸ் இருந்தா... அதையும் லோட் பண்ணிகிட்டுதான் ஸ்டேஷனுக்குப் போகும் ஸார்...''

நவநீதகிருஷ்ணன் திரும்பினார்.

''அவினாஷ்...''

''ஸார்...''



''அந்த மனிதக் கை, பாக்கிங் செக்ஷனிலிருந்து ஸ்டேஷனுக்கு போகிற வழியில்தான் கூடைக்கு வந்திருக்க் வேண்டும்... லாரி டிரைவரையும் கிளீனரையும் விசாரிச்சா... ஏதாவது உபயோககரமான தகவல் கிடைக்கலாம்...''

முகமது காசிம் குறுக்கிட்டார். ''லாரி டிரைவரும், க்ளீனரும் எனக்கு ரொம்பவும் நம்பிக்கையானவங்க இன்ஸ்பெக்டர்... அவங்க இதுமாதிரியான தப்பையெல்லாம் பண்ணமாட்டாங்க...''

''முகமது காசிம்! இந்த காலத்துல யாரையும் நம்ப முடியாது. லாரி டிரைவரையும் க்ளீனரையும் நான் விசாரிக்கிறதுக்கு காரணம் இருக்கு. கொழிஞ்சம் பாறையிலிருந்து பாலக்காட்டுக்கு போற வழியில லாரியை அவங்க எங்கேயாவது நிறுத்தியிருக்கலாம். அந்த நிறுத்தி வெச்சிருந்த அவகாசத்துல யாராவது அந்த சில்மிசத்தைப் பண்ணியிருக்கலாமே...?''

''பண்ணியிருக்கலாம் ஸார்...''

''அந்த லாரி ட்ரான்ஸ்போர்ட் அட்ரஸ் குடுங்க... நாங்க யார் யாரை விசாரிக்கணுமோ... அவங்களை விசாரிச்சி உண்மைகளை வெளியே கொண்டு வரப் பார்க்கிறோம்...''

''லாரி ஓனர் பேரு அசன்சுண் ஸார்...''

''அதைத்தான் சொல்லிட்டீங்களே... டிரைவர் பேரையும் க்ளீனர் பேரையும் சொல்லுங்க...''

''டிரைவர் பேர் மாணிக்கம். க்ளீனர் பேரு முத்து சாமி...'' சொல்லும்போதே முகமது காசிமின் குரலில் நடுக்கம் தெறிப்பதைக் கவனித்தார் நவநீத கிருஷ்ணன்.

★★★

மாடுகள் பூட்டிய வண்டியை ஹாஸ்பிடலின் பின்பக்கமாய் ஆபரேஷன் தியேட்டரை ஓட்டின மாதிரி கொண்டு வந்து நிறுத்தினான் கிருஷ்ணன்.

கதவைத் திறந்து வைத்துக் கொண்டு காத்திருந்த டாக்டரம்மாளும், நர்சும் கோணிப் பையில் தட்டுமுட்டு

சாமான் மாதிரி கட்டி வைத்திருந்த தங்கத்தின் பிணத்தை இழுத்து வந்து வராந்தாவில் போட்டார்கள்.

''கிருஷ்ணன்... சீக்கிரமா எடுத்து உள்ளே போடு...''

''இதோ...'' கிருஷ்ணன் வேகவேகமாய் வந்து மூட்டையைப் பற்றி இழுத்தான். தங்கம் கனத்துப் போய் கிருஷ்ணனை கொஞ்சம் சிரமப்படுத்தினாள். மூச்சைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் வண்டியில் போட்டான். ஏற்கெனவே காம்பவுண்ட் கேட் ஓரமாய் கொட்டி வைத்திருந்த கழிவுப் பஞ்சுகளையும் மற்ற குப்பைகளையும் அள்ளிக் கொண்டு போய் கோணிப்பையின் மேல் பரப்பினான்.

டாக்டரம்மா வந்து வண்டிக்குள் எட்டிப் பார்த்தாள்.

''கிருஷ்ணன்...''

''என்னங்கம்மா....?''

''யாருக்கும் எந்த சந்தேகமும் வராதபடி நடந்துக்கணும்...''

''நீங்க எதுக்குமே கவலைப்படாதீங்கம்மா... நான் எல்லாத்தையும் கச்சிதமா முடிச்சிட்டு வர்றேன்...'' சொல்லிக் கொண்டே குப்பை கீழே சரிந்து விடாமல் இருப்பதற்காக ஒரு நீளமான தகட்டைப் பொருத்தி கொக்கியை எடுத்து மாட்டினான். முன்பக்கமாய் வந்து நுகத்தடியின் மேல் தாவி ஏறி உட்கார்ந்தான்.

''போய்ட்டு எத்தனை மணிக்கு வருவே கிருஷ்ணன்?''

''எப்படியும் சாயங்காலம் ஆறு மணியாயிடும்மா...''

''நீ காரியத்தை முடிச்சுட்டு நேரா இங்கே வா... நான் உனக்காக காத்திட்டிருக்கேன்...''

''சரிங்கம்மா...''

மாடுகளை தார்க்குச்சியால் குத்தி விரட்டினான் கிருஷ்ணன். வண்டி நகர்ந்தது. வண்டி நகர்ந்து வெளியே போனதும் காம்பவுண்ட் கேட்டைச் சாத்திக் கொண்டு உள்ளே வந்தார்கள் டாக்டரம்மாளும், நர்சும்.



''நர்ஸ்...''

''என்ன டாக்டர்?''

''ஆபரேஷன் தியேட்டர் பூராவையும் ஸ்டெரிலைஸ் பண்ணிடு...''

''எஸ் டாக்டர்...''

''சாயந்தரம் ஆறு மணி வரைக்கும் எந்த பேஷண்ட் வந்தாலும் நான் வெளியே போயிருக்கேன்னு சொல்லிடு... நான் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கணும்...''

நர்ஸ் தலையாட்ட, டாக்டரம்மாள் சோர்ந்த கண்களோடு தன் அறைக்குள் நுழைந்தாள்.

★★★

கிருஷ்ணன் எருமேட்டுக்குப் போய்ச் சேர்ந்த போது சாயந்தரம் நாலரை மணி. சூரியன் மேற்குப் பக்கம் சூடு குறைந்து மரங்களுக்கப் பின்னால் ஒளிந்திருந்தான். மழையில் நனைந்து வெய்யிலில் காய்ந்து மக்கிப் போயிருந்த அந்த எரு மண்டிய பிரதேசம் நிரந்தரமாய் ஒருவித துர்நாற்றத்தை காற்றுக்கு கொடுத்திருந்தது. தலைக்கு மேலே ஆகாயத்தில் வட்டங்கள் போட்டு பழகியபடி கழுகுகள் சுற்றிக் கொண்டிருந்தன.

காம்பவுண்ட் கேட்டுக்கு முன்னால் வண்டியை நிறுத்தினான். நைந்து போயிருந்த காக்கி டிராயரும், காக்கி சர்ட்டும் அணிந்து பெரியதாய் நரை மீசையோடு இருந்த காவலாளி வேலு வாயில் புகையும் பீடியோடு அவனை நெருங்கினான்.

''என்ன கிருஷ்ணா, பொழுது சாயற நேரத்துல வந்திருக்கே...? எப்பவுமே இந்த நேரத்துல நீ வரமாட்டியே...?''

''குப்பை எக்கச்சக்கமா சேர்ந்துடுச்சு! நாளைக்கு வண்டியை முனிசிபல் ஆபீசுக்கு ஓட்டிட்டு போய் லைசன்ஸ் எழுதணும்...''

''அதுதான் வந்துட்டியா...? போ...போ... உள்ளே போ. குப்பையை முன்னாடி கொட்டாதே. கடைசிக்குப் போ...'' வேலு விரட்டினான்.

''சரி..''

''சரின்னு சொல்லிட்டு முன்னாடி கொட்டிட்டு போயிடுவே. ரத்தம் தோய்ந்த பஞ்செல்லாம் காத்துக்கு பறந்து இந்தப்பக்கமா ஓடி வருது...''

கிருஷ்ணன் சிரித்தான். ''இன்னிக்கு முன்னாடி கொட்ட மாட்டேன். அந்த பனைமரக் கடைசிக்குப் போயிடறேன்...''

''போ... போ... காசு இருந்தா கொடுத்திட்டுப் போ... கையில காசில்லாமே மத்தியானத்திலிருந்து டீயே சாப்பிடலை. நீ போய் குப்பையைக் கொட்டிட்டு வர்றதுக்குள்ளே நான் ராலிமுக்கு டீக்கடைக்கு போய் டீ சாப்பிட்டு வர்றேன்...''

முற்ற சமயமாய் இருந்தால், ''கையிலே காலணா இல்லாமே நானே காலையிலிருந்து அல்லாடிட்டிருக் கேன். நீ காசு கேக்க வந்துட்டியா...?'' என்று சொல்லி நழுவியிருப்பான் கிருஷ்ணன்.

ஆனால் அந்த நிமிஷம் இவன் இங்கே இல்லாமல் இருப்பதே நல்லது. ஐந்து ரூபாய் நோட்டொன்றை எடுத்து நீட்டினான் கிருஷ்ணன். ''மசால் வடையும் டீயும் சாப்பிட்டு அவசரப்படாமே நிதானமாவே வா...''

''ரொம்ப டாங்க்ஸ் கிருஷ்ணா...''

வேலு சிரித்துக் கொண்டே நகர்ந்து கேட்டைத் திறந்துவிட்டான். வண்டி உள்ளே போயிற்று.

## 13



ஏருமேட்டின் ஐம்பது ஏக்கர் நிலப்பரப்பும் குப்பைகூளமாய் தெரிய அதற்கு மத்தியில் வண்டி போகும் அளவுக்கு தடம் இருந்தது. கிட்டத்தட்ட நூறு கெஜம் உள்ளே போனாலே மெயின் ரோடும் வாகன இரைச்சலும் மறைந்து போகும். சுற்றிலும் பனைமரங்களின் அணிவகுப்பு.



கிருஷ்ணன் வண்டியை ஓட்டிக் கொண்டு பனைமரக் கடைசிக்குப் போய் நிறுத்திக் கொண்டான். கீழே குதித்து வண்டியின் பின்பக்கம் வந்தான். கொக்கியைக் கழற்றி தகரத் தகட்டை எடுத்துவிட்டு வண்டிக்குள் ஏறி குப்பைகூளங்களை மண்வெட்டியால் கீழே தள்ளி தங்கம் இருந்த கோணிப்பையை மேலே கொண்டு வந்தான்.

அந்த ஒரு நிமிஷ வேலைக்கே மூச்சிரைத்தான். நிமிர்ந்து நின்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு மண்வெட்டியோடு கீழே குதித்து பக்கத்து குப்பை மேட்டில் ஏறி பள்ளம் பறிக்க வாகாக இடம் பார்த்துக் கொத்தினான்.

''சக்...சக்...''

ஒவ்வொரு மண்வெட்டிக் கொத்துக்கும் மக்கிப் போன காகிதம், பழைய துணி, உடைந்த பாட்டில்கள், கிழிந்த ரெக்ஸின் பைகள், வார் அறுந்த ஹவாய் செருப்புகள் வெளிப்பட ஆரம்பித்தன.

பத்து நிமிஷ கொத்தலுக்குப் பிறகு –

அந்த குப்பைமேட்டின் நடுவே ஆழமான குழியொன்று பிறந்திருக்க, மேட்டினின்றும் கீழே இறங்கி வண்டிக்கு வந்தான் கிருஷ்ணன்.

சுற்றும் முற்றும் ஒரு முறை பார்த்துக் கொண்டு தங்கத்தின் பிணம் இருந்த கோணிப்பையை கீழே உருட்டி தள்ளினான்.

தங்கம் 'தொம்'என்று விழுந்து உருண்டாள்.

கோணிப்பையின் ஒரு முனையைப் பற்றி தரதரவென்று மேட்டை நோக்கி இழுத்துக் கொண்டு போனான். உடம்பு பூராவும் வியர்த்துக் கொட்ட, வாயிலும், மூக்கிலும் புஸ் புஸ் என்று மூச்சு விட்டுக் கொண்டு கோணி மூட்டையை மேட்டுக்கு இழுத்துக் கொண்டு போய் குழியின் அருகே நிறுத்தினான்.

முகத்தில் வழிந்த வியர்வையை சட்டையால் துடைத்துக் கொண்டு எதற்கோ திரும்பிய கிருஷ்ணன்.

விழிகள் நிலைகுத்த அப்படியே நின்றான்.

பக்கவாட்டில் இருந்த குப்பைமேட்டின் மறைவிலிருந்து காவலாளி வேலு ஒரு புன்னகையோடு வெளிப்பட்டுக் கொண்டிருந்தான்.

''வே...வே...வேலு...''

''என்ன கிருஷ்ணா....மூட்டையில் என்னத்தைக் கட்டிக் கொண்டு வந்திருக்கே...?''

''அ...அ...அது குப்பை...''

''குப்பையை எதுக்காக குழி தோண்டி புதைக்கணும்...?'' புன்னகையோடு கேட்டுக் கொண்டே மூட்டையின் முடிச்சை அவிழ்க்க முயன்றான் வேலு.

கிருஷ்ணன் பாய்ந்து அவனுடைய கைகளைப் பற்றிக் கொண்டான்.

''வேலு! அதை அவுக்காதே...''

''சரி... நான் அவுக்கலை. நீயே உண்மையைச் சொல்லிடு. மூட்டையில என்னத்தை கட்டிக் கொண்டு வந்திருக்கே...? நீ சாயந்தர நேரத்துல என்னிக்குமே எருமேட்டுக்கு வந்ததில்லை. இன்னிக்கு வந்ததுமே எனக்கு ஆச்சர்யம். வந்தவன் நான் காசு கேட்டதுமே எடுத்துக் கொடுத்தே... அது எனக்கு ரெண்டாவது ஆச்சரியம். குப்பையை என்னிக்குமே முன்னாடி இருக்கிற குப்பை மேட்டில கொட்டிட்டு அவசர அவசரமா ஓடுவே... இன்னிக்கு பனை மரக் கடைசிக்கு வண்டி ஓட்டிட்டு போனது மூன்றாவது ஆச்சரியம்... அதான் டீ குடிக்கக் கூட போகாமே, உம் பின்னாடியே மறைஞ்சு வந்தேன். நான் நினைச்ச மாதிரியே நீ ஏதோ தப்பான காரியம் பண்ண வந்திருக்கே... மூட்டையில என்ன?''

''பி...பி...பிணம்'' என்றான் கிருஷ்ணன்.

வேலு முகம் மாறினான்.

''பி...ண...மா?''

''ஆ...ஆமா...''



''அதை இங்கே கொண்டு வந்து புதைக்க வந்திருக்கிற கட்டத்தில நீ யாரையோ கொலை பண்ணிருக்கே... அப்படித்தானே...''

''இல்ல... வேலு. இது கொலை விவகாரமில்லை.... டாக்டர் ஞானசௌந்தரி கிளினிக்ல ட்ரீட்மெண்ட் எடுக்கிறபோது செத்துப்போன ஒரு பொண்ணு... டாக்டரம்மா போலீஸுக்குப் பயந்து பிணத்தை எருமேட்டுல புதைக்கச் சொன்னாங்க. அதான் எடுத்துட்டு வந்தேன்...''

''எங்கே மூட்டையை அவுரு பார்க்கலாம்...''

கிருஷ்ணன் மூட்டையின் வாயில் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்தான். கோணிப்பையை கொஞ்சம் போல் பிரித்தான்.

உள்ளே தங்கத்தின் துவண்ட தலை தெரிந்தது.

''பொண்ணு ஷோக்காயிருக்காளே.... டாக்டரம்மா ஏதாவது தப்பா ஆபரேஷன் பண்ணி செத்துட்டாளா...?''

''ஆமா...''

''பொண்ணோட வீட்டுக்கு தகவல் கொடுத்து பாடியை எடுத்துகிட்டு போகச் சொல்ல வேண்டியது தானே...?''

''பொண்ணு அநாதையாம்...''

''அநாதையின்னா ரொம்பவும் சௌகரியமா போச்சு... ஜி.ஹெச்.சுக்கு தகவல் கொடுத்தா அவங்க வந்து அள்ளிட்டு போயிடுவாங்களே... டாக்டரம்மா இந்த விஷயத்தை போலீஸுக்கு கொண்டு போகாமே இருக்காங்கன்னா, தப்பு என்னமோ பண்ணியிருக்காங்கன்னு அர்த்தம்...''

''வே...லு...''

வேலு தன் வெற்றிலைப் பாக்கு கறை படிந்த பற்களைக் காட்டி சிரித்தான். ''கிருஷ்ணா! டாக்டரம்மாகிட்டே எவ்வளவு பேரம் பேசியிருக்கே...?''

''எதுக்கு?''

''இதை யார்க்கும் தெரியாமே இங்கே கொண்டாந்து புதைக்கிறதுக்கு...''

''ஐயாயிரம்...''

''பிசாத்து'' என்றான் வேலு. ''பிச்சைக்காரத் தனமான ஒரு சின்ன அமௌண்ட்டுக்குப் போய் ஒத்துகிட்டு வந்திருக்கியே கிருஷ்ணா. குறைந்தபட்சம் அம்பதாயிரமாவது கேட்க வேண்டாமா...?''

''அம்பதாயிரமா...?''

''பின்னே... நீ பண்ணிட்டிருக்கிற காரியம் மட்டும் போலீஸுக்குத் தெரிஞ்சா சுத்தமா ஏழு வருஷம் உள்ளே தீட்டிடுவாங்க...''

''இ....இ....இப்ப என்ன செய்யலாம் வேலு...''

''பாடியை எருமேட்டுக்கு கொண்டாந்த கொண்டாந்துட்டே. இனிமே திருப்பி எடுத்துட்டு போகவேண்டாம். நீ தோண்டின குப்பைக் குழியிலேயே போட்டு புதைச்சுடு. புதைச்சுட்டு நாம ரெண்டு பேரும் சேர்ந்து டாக்டரம்மாகிட்டே போறோம்...''

''நீ எதுக்காக டாக்டரம்மாகிட்டே வர்றே...?''

''பேரம் பேசறதுக்கு...''

''பேரமா?''

''ஆமா... பேரம்தான்.. ஒரு பொண்ணோட பொணத்தை புதைக்கிறதுக்கு என்னோட எருமேட்டில் எடம் கொடுத்திருக்கேனே... அது எவ்வளவு பெரிய விஷயம்... கொடுத்த இடத்துக்கு அட்வான்ஸ் வாங்க வேண்டாமா? வாடகை பேச வேண்டாமா?''

''வே...லு...''

''மொதல்ல பொணத்தை அடக்கம் பண்ணு. முனிசிபாலிடி லாரி வர்ற நேரம். லாரி டிரைவர் கண்ணப்பனுக்கு இந்த விஷயம் தெரிஞ்சுட்டா அவனும் இதுல பார்ட்னரா சேர்ந்துடுவான்...'' வேலு சிரித்துக் கொண்டே சொல்ல, கிருஷ்ணன் வே வேகமாய் நகர்ந்து தங்கம் இருந்த கோணிப்பையை இழுத்து எருக்குழியில் 'தொப்'பென்று போட்டான்.



பக்கத்திலிருந்த மண்வெட்டியை எடுத்து குப்பையை கொத்திக் கொத்தி தள்ளினான். குழி சமநிலைக்கு வந்ததும் வியர்வை முகமாய் நிமிர்ந்தான்.

''கச்சிதமா முடிச்சிட்டே கிருஷ்ணா. கிளம்பலாமா...?''

''இப்பவேவா...?''

''ஆமா... டாக்டரம்மா க்ளீன்கிலதானே....?''

''ஆமா...''

''அப்ப கிளம்பு... எனக்கும் அஞ்சு மணியோட ட்டியூட்டி முடியுது. டவுனுக்கு உன்னோட வண்டியிலேயே வந்துடறேன்.''

''நேரம் 5.30.

வண்டியை ஹாஸ்பிடலின் வாசலில் நிறுத்திவிட்டு உள்ளே வந்து கொண்டிருந்த கிருஷ்ணனையும் அவனோடு புன்னகை ததும்பும் முகமாய் வந்து கொண்டிருக்கும் இன்னொருவனையும் நெற்றி சுருங்கப் பார்த்தாள் டாக்டரம்மாள்.

'யார் அந்த புது ஆள்?' யோசித்துக் கொண்டிருக்கும்போதே...

''வணக்கம் டாக்டரம்மா...'' வேலு கும்பிடு போட்டான்.

''கிருஷ்ணன், யாரிந்த ஆளு?''

''நானே சொல்றேன் டாக்டரம்மா... எம் பேரு வேலு. எருமேட்டுக்கு நான்தான் காவல். ஒரு அழகான பொண்ணோட பொணத்தை புதைக்கிறதுக்காக அந்த எரு மேட்டுல ஆறடி நிலம் கொடுத்திருக்கேன். அதுக்கு வாடகை, அட்வான்ஸ் பேச வேண்டாமா...?''

டாக்டரம்மாள் முகம் வெளுத்து நாற்காலியினின்றும் அதிர்ச்சியாய் எழுந்தாள், கிருஷ்ணனை ...யமாய் பார்த்தாள்.

''கிருஷ்ணன்... என்ன இது...?''

''வேலுக்கும் விஷயம் தெரிஞ்சு போச்சும்மா...''

வேலு நாற்காலியை இழுத்துப் போட்டு கொண்டு டாக்டரம்மாவின் முன்னால் உட்கார்ந்தா பீடி ஒன்றை வாயில் பொருத்திக் கொண்டு சட்டையி மேல் பாக்கெட்டிலும், அரை டிராயரின் கீ பாக்கெட்டிலும் தீப்பெட்டி தேடினான். கிடைத்தது எடுத்து தீக்குச்சியை உரசி பீடியின் தலைக்கு நெருப் வைத்து ஒரு வாய் புகையை உறிஞ்சி மூக்கிலு வாயிலும் வழியவிட்டான். மெல்லிய குரலில் கேட்டா

''என்ன டாக்டரம்மா...எவ்வளவு அட்வான் பேசிக்கலாம்...? என்னா வாடகை வெச்சுக்கலாம்...?

டாக்டரம்மாள் முகம் சிவந்தாள். தொண்டை நரம் புடைக்கக் கத்தினாள். ''எந்திரிடா ராஸ்கல்...!''

## 14



டாக்டரம்மாள் அதிர்ந்து போய் கிருஷ்ணனை பார்த்தாள். ''கிருஷ்ணன்... யார் இந்த ஆள்... கொஞ் கூட மரியாதை இல்லாமல்...''

வேலு பீடி புகையும் வாயோடு சிரித்தா ''டாக்டரம்மா... கிருஷ்ணன் ஒரு ஏமாளி. அவ சுலபமா ஏமாத்திடலாம். ஆனா என்னை ஏமாத் முடியாது. வெறும் ஐயாயிரம் ரூபாய் ரேட் பேசி வா அடைச்சுடலாம்ன்னு பார்த்தீங்களா...?''

டாக்டரம்மா வியர்த்துப் போய் எழுந்தாள்.

''நீ...நீ.... என்ன சொல்றே...?''

''கிருஷ்ணனும் நானும் சேர்ந்து அ பொண்ணோட பொணத்தை எருமேட் புதைச்சிட்டோம்ன்னு சொல்ல வர்றேன் டாக்டர ஒரு காரியத்தை பண்ணும்போது அதுக்கு முறை ரேட் பேசிக்கணும். கிருஷ்ணனுக்கு ரேட் பே தெரியலை. அதான் அவனோட சார்பா நான் வந்தேன்

டாக்டரம்மாள் நின்று போன விழிகளே கிருஷ்ணனைப் பார்க்க அவன் மெல்லிய குர



சொன்னான். ''வேலு சொல்றது நியாயம்தாம்மா... தொகையை கொஞ்சம் சேர்த்து குடுங்க...''

''எ...வ்...வ...ள...வு... வேணும்?''

''வேலு, எவ்வளவு கேட்கலாம்...?''

''அம்பதாயிரம் கேளு...''

டாக்டரம்மாள் அதிர்ந்தாள். ''அம்பதாயிரமா?''

''இதுவே ரொம்ப கம்மியம்மா...''

''இவ்வளவு பணம் குடுக்க முடியாது...''

''குடுக்க முடியாதா? யோசிச்சுப் பார்த்து பதில் சொல்லுங்கம்மா... விஷயம் போலீஸுக்குப் போனா என்னாகும் தெரியுமா? நீங்க டாக்டர் தொழிலை பார்க்க முடியாது... க்ளீனிக்கை இழுத்து சாத்திடுவாங்க. கோர்ட்ல கேஸ் நடக்கும். ஒரு பொண்ணுக்கு அஜாக்ரதையா சிகிச்சை அளிச்சு உயிரை போக்கின குத்தத்துக்காக அஞ்சு வருஷ ஜெயில் தண்டனை யிலிருந்து பத்து வருஷ ஜெயில் தண்டனை வரைக்கும் கிடைக்கும்.''

டாக்டரம்மாள் வியர்த்துப்போய் சொத சொதத்த தன் முகத்தை சேலைத்தலைப்பால் அழுத்தமாய் துடைத்துக் கொண்டாள்.

''இதோ பாரப்பா, என்கிட்டே நீ கேக்கிற அளவுக்கு பணம் கிடையாது...''

''எவ்வளவுதான் வெச்சிருக்கீங்க...?''

''பத்தாயிரம் ரூபாதான் இருக்கும்...''

''சரி, முதல் தவணையா அதை குடுங்க. அடுத்த மாதம் பணம் சேர்த்தும் திரும்பவும் வந்து வாங்கிக்கறோம்.''

டாக்டரம்மா அயர்ந்து போய் கொஞ்சம் கொஞ்சமாய் தளர்ந்து நாற்காலிக்கு தன் உடம்பைக் கொடுத்தாள். தலையை இரண்டு கைகளாலும் பற்றிக் கொண்டாள். வேலு பீடியை அணைத்து காதில் சொருகிக் கொண்டு சிரித்தான்.

''என்ன டாக்டரம்மா... கப்பல் கவுந்தமாதிரி தலையில கையை வெச்சுக்கிட்டீங்க...நீங்க எதுக்குமே பயந்துக்காதீங்க. நீங்க எங்களை முறைச்சுக்காத வரைக்கும் நாங்க உங்களுக்கு பக்கபலமா இருப்போம். பணத்தை எப்போ தர்றீங்க...?''

''நா... நாளைக்கு காலையில...''

''எத்தினி மணிக்கு வரட்டும்...?''

''ப...பத்து மணிக்கு...''

''வீட்டுக்கு வரட்டுமா...?''

''வேண்டாம்...இங்கேயே வாங்க...''

''சரி, இப்போ கையில எத்தினி ரூபா வெச்சிருக்கீங்க...?''

''ஐநூறு ரூபா...''

''அதை குடுங்க. நானும் கிருஷ்ணனும் ஹோட்டலுக்குப் போய் வயிறு நிறைய சாப்பிட்டு சினிமாவுக்குப் போகணும்...''

டாக்டரம்மாள் கை நடுங்க டம்பப்பையைப் பிரித்து ஐநூறு ரூபாய் நோட்டொன்றை எடுத்துக் கொடுத்தாள்.

★★★

இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணனும், சப்-இன்ஸ்பெக்டர் அவினாஷும், டி.எஸ்.பி. ஆசீர்வாதத்துக்கு எதிரில் விறைப்பாய் நின்றிருந்தார்கள்.

ஆசீர்வாதம் தன் புஷ்டியான மீசையை வருடிக்கொண்டே கேட்டார். ''பாலக்காட்டுல விசாரணையை முடிச்சுகிட்டு எப்போ வந்தீங்க நவநீதகிருஷ்ணன்?''

''ராத்திரியே வந்துட்டோம் ஸார்...''

''ஏதாவது உபயோககரமான தகவல்?''

''விசாரிச்சவரைக்கும் ஏதும் கிடைக்கலை ஸார். மீன் கூடைகளை புக் பண்ணின முகமது காசிமும், புக் செய்யப்பட்ட பார்ட்டி சபாபதியும் அந்த கேஸுக்கு ஒட்டவேயில்லை. அவங்களுக்கே தெரியாமத்தான்



அந்த வெட்டப்பட்ட 'கை' கூடைக்கு வந்திருக்கு. ரெண்டு பேர்க்கும் பொதுவான எதிரி யாராவது இருந்து இந்த காரியத்தை பண்ணியிருக்கலாம்...''

''அதை யார்ன்னு ட்ரேஸ் பண்ணினீங்களா?''

''முயற்சி பண்ணிட்டிருக்கோம் ஸார்...''

''வெட்டப்பட்ட கை ஒரு ஆணுக்கு சொந்தமானதா, இல்லே ஒரு பெண்ணுக்கு சொந்தமானதான்னு டாக்டர்களினாலே சொல்ல முடியலை, இல்லையா...''

''ஆமா ஸார்...''

''சம்பவம் நடந்த இடம் பாலக்காடு. அங்கே சமீபத்தில் நடந்த கொலைகளைப் பத்தி கேரள போலீஸார்கிட்டே கன்சல்ட் பண்ணீங்களா...?''

''பண்ணினோம் ஸார். ஆனா கை வெட்டப்பட்ட நிலைமையில் எந்த பாடியையும் சீஸ் பண்ணினதா ரிக்கார்ட்ஸ் கிடையாது. பாலக்காடு சப்–இன்ஸ்பெக்டர் குஞ்சுண்ணி நாயர் ஒரு சந்தேகத்தை சொன்னார் ஸார்.''

''என்ன சந்தேகம்?''

''இந்த வெட்டப்பட்ட கை – கொலை செய்யப்பட்ட ஒரு ஆண் அல்லது பெண்ணோடதா இருக்கலாம். உடம்பில மற்ற உறுப்புகளையும் துண்டு துண்டா வெட்டி எங்கேயாவது புதைச்சிருக்கலாம். இன்னும் வாரம் பத்துநாள்ல, ஆணையோ பெண்ணையோ காணோம்னு யாராவ்து புகார் பண்ண வருவாங்க... அதை உடனடியாக உங்களுக்கு இன்பார்ம் பண்றேன். நீங்க புறப்பட்டு வந்து விசாரணையை கன்டினியூ பண்ணுங்க... என்றார்.''

''அவர் சொல்றதும் நல்ல யோசனைதான். எந்தவிதமான பிடிப்பும் இல்லாத கேஸ் இது. யாரையாவது காணோம்ன்னு ரிப்போர்ட் வந்தாத்தான் நாம ஸ்டெப்ஸ் எடுக்க முடியும்! எதுக்கும் சபாபதி மேலேயும், முகமது காசிம் மேலேயும் ஒரு கண் வைச்சுட்டே இருங்க...''

''எஸ்... ஸார்...''

நவநீதகிருஷ்ணனும், அவினாஷும் விறைப்பா
சல்யூட்களை விநியோகித்துவிட்டு அறையிலிருந்
வெளியே வந்தார்கள்.

★★★

பாலக்காடு.

இரவு பத்து மணி.

தென்னந்தோப்புகளுக்கு மத்தியில் இருந்த அந்
ஓட்டு வீட்டின் வராந்தாவில் கோபமாய் நடைபோட்டுக்
கொண்டிருந்தார் பத்ராச்சலம். தங்கத்தின் அப்பா.

ஐம்பது வயதை தொட்டிருந்த பத்ராச்சலத்தறி
வைரம் பாய்ந்த உடம்பு. கைகளும் கால்களும் கரனை
கரணையாய் திம்மென்று இருந்தன. நீங்கள் பார்க்கி
நிமிஷம், கண்கள் சிவந்து போய், தலை கலைந்
ஒரு கோபாவேசத்தில் இருந்தார். வேஷ்டியை மடித்து
கட்டுவதும், பின் அவிழ்ப்பதுமாய் . நடந்
கொண்டிருந்தவருக்கு எதிரே வந்து நின்றாள் மங்களம்
தங்கத்தின் அம்மா. குரல் பயத்தில் தத்தி தத்தி வந்த

''ஏன்னங்க... இன்னும் தங்கத்தை காணோம்...

''பத்தேகாலுக்கு கடைசி பஸ் வரும். அது
வர்றாளான்னு பார்க்கலாம்...''

''பாவிப்பொண்ணு.... பத்திரிகை குடுக்க
போறவ இப்படியா லேட் பண்ணுவா. சூரிய
சாயறதுக்குள்ளே வந்து சேர வேண்டாமா...?''

''பொண்ணை அந்த லட்சணத்துல நீ வளர்த்
வச்சிருக்கே...உடம்புல கொஞ்சமாவது பய
வேண்டாம்...''

''நான் பத்திரிகையே குடுக்க போ
வேண்டாம்ன்னுதான் சொன்னேன். அந்த கடன்கா
கேட்கலை. பிடிவாதமா புறப்பட்டுப் போனா! அ
வரட்டும். மூலையில் உட்கார வெச்சி, கரண்டி காம்பால
சூடு போடறேன்.''

வீட்டின் உள்ளறையிலிருந்து தங்கத்தி
அக்காகாரி மீரா கையில் வைத்திருந்த வார
பத்திரிகையோடு வெளிப்பட்டாள்.



''அட ஏம்மா... நீயும் அப்பாவும் இப்படி கிடந்து மாயறீங்க... தங்கம் என்ன சின்னப் பொண்ணா...? அவ ப்ரண்ட்ஸ்களுக்கு பத்திரிகை குடுக்கப் போன இடத்துல, ரொம்ப நேரம் உட்கார்ந்து பேசிட்டிருந் திருப்பாங்க. லேட்டாயிருக்கும். எப்படியும் கடைசி பஸ்ஸில வந்துடுவா...''

''மொதல்ல நீ உள்ளே போடி... பெரிசா அவளுக்கு வக்காலத்து வாங்கிட்டு வந்துட்டா. கடந்த நாலு மாசமாவே அவ போக்கு சரியில்லை. முன்னே யெல்லாம் மத்தியானம் சாப்பிட்டதும் கொஞ்ச நேரம் படுத்து தூங்குவா... தூக்கம் வரலைனா எம்பிராய்டரி பின்னுவா... ஆனா இப்ப என்ன பண்றா தெரியுமா...?''

''என்ன பண்றா...?''

''புஸ்தகம் படிக்கிறேன்னுட்டு தென்னந் தோப்புக்கு போயிடறா... சுத்தமா ரெண்டு மணிநேரம் கழிச்சு வர்றா...''

பத்ராச்சலம் துண்டை உதறி தோளில் போட்டுக் கொண்டு வாசற்படி இறங்கினார். ''கடைசி பஸ் வர்ற நேரமாச்சு. ரோட்டிலேயே போய் நின்ற அவளைக் கூட்டிட்டு வர்றேன்...''

''ரோட்லேயே திட்ட ஆரம்பிச்சுடாதீங்க. வீட்டுக்கு வந்ததும் மொத்தமா வெச்சுக்கலாம்.''

பத்ராச்சலம் தோப்பின் வரப்பில் நடந்து, ரோட்டுக்கு வந்தார். அந்த ஹைவேஸ் ரோடு நிசப்தமாய் இருக்க, ஒரு கிலோ மீட்டர் கல்லின் மேல் உட்கார்ந்து கொண்டார்.

ஒரு பீடியை பற்றவைத்துக் கொண்டு எதற்காகவோ திரும்பியவர் கொஞ்சம் தொலை விலிருந்து கருவேல மரத்துக்குக் கீழே யாரோ நின்றிருப்பதைப் பார்த்து எழுந்தார். குரல் கொடுத்தார். ''அங்கே நின்னுட்டிருக்கிறது யாரு...''

அந்த உருவம் மரத்தின் அடியினின்றும் வெளியே வந்தது. பத்ராச்சலம் உன்னிப்பாய் பார்த்துவிட்டு –

''அட...ராஜனா...'' என்றார் ஆச்சர்யமாய்.

# 15

மரத்தின் கீழிருந்து இருட்டில் வெளிப்பட்ட ராஜனை நோக்கிப் போனார் பத்ராச்சலம். குரலில் ஆச்சர்யத்தை தேய்த்துக் கொண்டு கேட்டார்.

''என்ன ராஜன்... இந்நேரத்துக்கு இங்கே நின்னுட்டிருக்கே...?''

ராஜன் வியர்த்துக் கொண்டு எச்சில் விழுங்கினான்.

''அ...அது...வந்து ஒலவக்கோட்டிலிருந்து வர்ற... கடைசி பஸ்ஸுக்காக காத்திட்டிருக்கேன்...''

''பஸ்சில யார் வர்றாங்க...?''

''எ...என்னோட ப்ரெண்ட் ஒருத்தன் கொழிஞ்சம் பாறையில இருந்து வர்றான். அவனைப் பார்த்து கூட்டிப் போகத்தான் வந்தேன்...நீங்க?''

''காலையில கல்யாணப் பத்திரிகை கொடுக்கிறதுக்காக தங்கம் ஒலவக்கோடு புறப்பட்டுப் போனா... போனவ இன்னும் வரலை... ஒருவேளை கடைசி பஸ்ஸுல வர்றாளோன்னு பார்க்கத்தான் வந்தேன்...''

ராஜனின் அடிவயிற்றில் திக்கென்று பயம் அப்பிக் கொண்டது. 'தங்கம் இன்னமும் வீட்டுக்கு வரவில்லை. ஆஸ்பத்திரியிலிருந்து எங்கேதான் போயிருப்பாள்...?'

''என்ன தம்பி மூஞ்சியெல்லாம் ஒரு மாதிரி இருக்கு...? உடம்பு கிடம்பு சரியில்லையா...?''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லிங்க...''

''அப்பா நல்லாயிருக்காரா?''

''ம்...''

''அவரை அதிகமா பார்க்க முடியறது இல்லையே...?''

''அடிக்கடி கோயமுத்தூர் போயிடறார்.''



பேசிக் கொண்டிருக்கும்போதே தொலைவில் பஸ் வரும் சப்தம் கேட்டது. பத்ராச்சலம் கையிலிருந்த பீடியை எறிந்துவிட்டு பஸ்ஸை எதிர்கொள்ள தயாரானார். ராஜனின் இருதயமும் வேகமாய் அடித்துக் கொள்ள ஆரம்பித்தது.

பஸ்ஸின் ஹெட்லைட் வெளிச்சம் வளைவில் அடித்து திரும்பியது. கூடவே ஹார்ன் சத்தம். 'ப்ராற்க்க்'

பத்ராச்சலமும் ராஜனும் ரோட்டோரமாய் ஒதுங்கினார்கள்.

பஸ் வந்து நின்றது.

ஆட்கள் நெரிசலாய் இறங்க ஆரம்பித்தார்கள். இறங்கியவர்களை உன்னிப்பாய் பார்த்துக் கொண்டு வந்த பத்ராச்சலமும், ராஜனும் கொஞ்சம் கொஞ்சமாய் தளர்ந்தார்கள். கடைசியாக அந்தக் கிழவி இறங்கியதும் கண்டக்டர் விசில் கொடுக்க பஸ் நகர்ந்தது.

பத்ராச்சலம் முகம் இருண்டு போய் மோவாயைத் தடவிக் கொண்டார். ''இந்த பஸ்ஸிலும் தங்கம் வரலையே...?''

ராஜனின் இருதயம் ஏராளமான ரத்தத்தை இறைத்துக் கொண்டு துரிதகதியில் துடித்தது. 'ஆஸ்பிடலிலிருந்து வெளியே வந்த தங்கம் எங்கே போயிருக்க முடியும்? ஒருவேளை அவமானம் தாங்காமல் குளம் குட்டையில் விழுந்து...?''

''என்ன தம்பி... நீ எதிர்பார்த்த ப்ரெண்டும் பஸ்ஸுல வரலை போலிருக்கே...?''

''ஆமாங்க... காரணம் என்னான்னு தெரியலை... ஒருவேளை நாளைக்கு காத்தால வந்தாலும் வரலாம்...''

பத்ராச்சலம் முனகிக்கொண்டே திரும்பி நடந்தார்.

''இந்தப் பொண்ணு ஏன் வரலை? யாராவது ப்ரெண்ட்ஸ் வீட்ல தங்கிட்டாளா?''

''என்னங்க...?'' ராஜன் குரல் கொடுத்தான்.

பத்ராச்சலம் நின்றார். ''என்ன தம்பி...?''

''தங்கம் ஒலவக்கோடா போயிருக்கு...?''

''ஆமா...''

''நான் வேணுமானா போய் பார்த்துட்டு வரட்டுங்களா?''

''அவளை எங்கேன்னு போய் தேட முடியும் தம்பி? கல்யாணப் பத்திரிகை தர்றதுக்காக கிளம்பிப் போனா. அவளுக்கு ஒலவக்கோட்டுல நிறைய ப்ரெண்ட்ஸ் இருக்காங்க. யார் வீட்டிலாவது தங்கிட்டாளோ என்னவோ?''

''நீங்க அட்ரஸை குடுத்திங்கன்னா நான் போய் பார்த்துட்டு வந்துடறேன். ஒருவேளை பஸ்ஸை கோட்டை விட்டுட்டு பஸ் ஸ்டாண்டுல நின்னுட்டிருக்காளோ என்னவோ?''

''பத்ராச்சலம் யோசித்தார்.

'அப்படியும் இருக்குமோ?'

''வீட்டுக்கு வா தம்பி... அட்ரஸ் தர்றேன்... சிரமம் பார்க்காம இந்த அட்ரஸ்ல விசாரிச்சுட்டு வந்துட்டா, மனதுக்கு நிம்மதியாயிடும். ஆமா, ஒலவக்கோட்டுக்கு இனிமே பஸ் கிடையாதே. எப்படி போக முடியும்?''

''பைக்தான் இருக்கே...''

''வசதியா போச்சு. வீட்டுக்கு வா தம்பி. தங்கத்தோட ப்ரெண்ட்ஸ் அட்ரஸெல்லாம் மீராவுக்குத்தான் தெரியும்'' ராஜனை அழைத்துக் கொண்டு தென்னந்தோப்புக்குள் நுழைந்து நடக்க ஆரம்பித்தார் பத்ராச்சலம். ராஜன் மௌனமாய் பின்தொடர்ந்தான். தங்கம் எங்கே போயிருப்பாள் என்கிற கேள்வி மனசில் விடாப்பிடியாய் ஒட்டிக் கொண்டே வந்தது.

''தம்பி...''

''என்னங்க...?''

''இன்னும் ரெண்டு வாரத்துல மீராவோட கல்யாணம் வருது... கல்யாணத்தை குருவாயூர்ல



வெச்சிருக்கேன். நீயும், அப்பாவும் அவசியம் வந்துடணும்...''

''வர்...றோம்...''

''நீ ஏதாவது வேலைக்கு எழுதிப் போட்டிருக்கியா? இல்லே அப்பாவோட வியாபாரத்தையே கவனிக்க போறியா?''

''வேலைக்கு போக வேண்டாம்ன்னு அப்பா சொல்லிட்டார்.''

''அதான் நல்லது. ஒருத்தர்கிட்டே வேலைக்குப் போய் மாசமானா கையை நீட்டறதைக் காட்டிலும் வியாபாரத்தை கவனிச்சா க்ணிசமா நாலு காசு பார்க்கலாமே...''

வீட்டு வாசலிலேயே மீராவும், மங்களமும் தவிப்பாய் காத்துக் கொண்டிருந்தார்கள். பத்ராச்சலத்தின் தலையைப் பார்த்ததும் மங்களம் வாசற்படியிறங்கி ஓடி வந்தாள்.

''என்னங்க... கடைசி பஸ்ஸிலேயும் அந்த் கடன்காரி வரலையா? எனக்கு வயித்தை யெல்லாம் பிசைந்து விடுதுங்க...''

பத்ராச்சலம் எரிந்து விழுந்தார், ''கொஞ்ச நேரம் புலம்பாம இரு... இந்த தம்பி ஒலவக்கோட்டுக்குப் போகுதாம். தங்கத்தோட ப்ரெண்ட்ஸ் அட்ரஸை குடுத்து அனுப்புவோம்...''

மங்களம் கையெடுத்து ராஜனை கும்பிட்டாள். ''தம்பி! உங்களுக்கு ரொம்பவும் புண்ணியமா போகும். போய் பார்த்துட்டு வாங்க தம்பி. மீரா அந்த அட்ரஸையெல்லாம் எழுதிக் குடு...''

மீரா உள்ளே போனாள்.

மங்களம் புலம்பலைத் தொடர்ந்தாள். ''பாவிப் பொண்ணு! இப்படி ஆள் அனுப்பி தேடற மாதிரி பண்ணிட்டாள். இருட்டினதுமே மினுக்கி புறப்பட்டு வரவேண்டியதுதானே.. இந்நேரம் வரைக்கும் அங்கே என்ன பண்ணிட்டிருக்கா...?''

பத்ராச்சலம் மங்களத்தை முறைத்தார். ''நீ வேற அழுது புலம்பி எல்லாரையும் காபரா படுத்தாதே... அவ எப்படியும் வந்துடுவா... அவ என்ன உகாண்டாவா போயிருக்கா? பக்கத்திலிருக்கிற ஒலவக்கோட்டுக்குத் தானே போயிருக்கா...''

''ராத்திரி பதினோரு மணிக்கு ஒலவக் கோட்டிலிருந்து பாலக்காட்டுக்கு வர ஒரு பாஸஞ்சர் ரயில் இருக்கு. அதுல தங்கம் வந்தாலும் வரலாம்.'' சொல்லிக் கொண்டே மீரா ஒரு சின்ன டயரி எடுத்துக் கொண்டு வந்தாள்.

ராஜனிடம் நீட்டினாள்.

''இதுலதான் தங்கத்தோட ப்ரெண்ட்ஸ் அட்ரஸ் இருக்கு.''

ராஜன் வாங்கிக் கொண்டு கிளம்பினான்.

★★★

பாலக்காடு சப்–இன்ஸ்பெக்டர் குஞ்சுண்ணி நாயர் லாக்கப்பில் இருந்த விபச்சார அழகிகளை விசாரணை செய்துவிட்டு தன் மேஜைக்குத் திரும்பியபோது மேஜையின் மேல் உட்கார்ந்திருந்த டெலிபோன் தன் தொண்டையைத் திறந்தது. நேரம் காலை ஏழு மணி.

ரிஸீவரை எடுத்தார்.

''யாராணு...?'' அவர் மலையாளத்தில் சம்சாரிக்க, மறுமுனையில் தமிழ்க்குரல் கேட்டது.

''அது போலீஸ் ஸ்டேஷனா...?''

''போலீஸ் ஸ்டேஷனேத்தான... என்ன வேணும்...?''

''ஸார்... நான் ஒரு காலேஜ் ஸ்டூடண்ட். என் பேர் முரளிதரன். கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி கல்பாத்தி நதி பக்கம் படிக்கிறதுக்காக புத்தகத்தை எடுத்துக்கிட்டு வந்தேன். ஆற்றை விட்டு கொஞ்சம் தள்ளி ஒரு மரத்துக்குப் பக்கத்துல ஒரு நாய் தன்னோட முன்னங்காலாலே குழி பறிச்சிட்டிருந்தது. அதை வேடிக்கை பார்த்துகிட்டே நின்னுட்டிருந்தேன். திடீர்ன்னு அந்த நாய் குழிக்குள்ளிருந்து எதையோ இழுக்க ஆரம்பிச்சது... அது என்னான்னு உத்துப் பார்த்தேன்.''



அவன் பேச்சை நிறுத்திவிட்டு மூச்சு வாங்கும் சத்தம் கேட்டது. குஞ்சுண்ணி நாயர் பரபரத்தார்.

''என்னது?''

''அ...அ...அது... ஒரு மனுஷக் கால் ஸார்... தொடையிலிருந்து பாதம் வரைக்கும் வெட்டி எடுக்கப்பட்ட கால் ஸார்...''

நாயர் அதிர்ந்தார். ''மை குட்னஸ்! நீ இப்ப எங்கிருந்து பேசறே...?''

''கல்பாத்தி நதிக்கரையிலிருந்து...''

''நான் இப்ப வந்துடறேன். நீ அங்கேயே இரு...''

''நீங்க வாங்க ஸார்... நான் வெயிட் பண்றேன்...

அவன் ரிஸீவரை வைத்துவிட, குஞ்சுண்ணி நாயர் எழுந்தா.

இரண்டு கான்ஸ்டபிள்களை ஜீப்பில் ஏறச் சொல்லிவிட்டு ஜீப்பில் டிரைவிங் சீட்டுக்கு வந்து ஸ்டியரிங்கைப் பிடித்தார்.

பத்து நிமிஷ ஜீப் பயணம்.

ஸ்தலத்துக்கு போனபோது ஆற்றுக்கு குளிக்க வந்த ஆண்களும், பெண்களும் கும்பல் கும்பலாய் நின்றிருக்க –

கொஞ்சம் தள்ளி –

ஒரு மரத்துக்கு கீழே –

நொத நொதவென்று அழுகிப் போன வெள்ளரிப் பழமாய்...

பாதி தொடை வரைக்கும் வெட்டப்பட்ட காலொன்று குஞ்சுண்ணி நாயரின் பார்வையில் இடித்தது.

# 16



சிப்-இன்ஸ்பெக்டர் குஞ்சுண்ணி நாயர் வெட்டப்பட்ட அந்தக் காலைப் பார்த்ததும் மனசுக்குள் சின்னதாய் மளுக்கென்று அதிர்ந்தார். வேகவேகமாய் அந்த குழியை நெருங்கி எட்டிப் பார்த்தார்.

அழுகிப் போன வெள்ளரிப்பழ சைசில் நொத நொதவென்று சதைகள் பிய்ந்துபோய் கன்னங் கரேலென்று தெரிந்த அந்த கால் பொறுக்க முடியாத ஒரு துர்நாற்றத்தை காற்றுக்க் கொடுக்க, காற்று வீசிய பக்கமெல்லாம் அந்த நாற்றம் அடித்தது.

குஞ்சுண்ணி நாயர் கர்ச்சீப்பால் மூக்கைப் பொத்திக் கொண்டு வேடிக்கை பார்த்தபடி நின்றிருந்த கும்பலைத் திரும்பிப் பார்த்தார். கொஞ்சம் சத்தமான குரலில் கேட்டார்.

''எனக்கு டெலிபோன் பண்ணி விஷயத்தை சொன்ன முரளி எங்கே?''

அவர் அப்படி கேட்டதும் கும்பலின் முன்னால் நின்றிருந்த வேஷ்டி மடித்துக் கட்டிய முரளி அவரை நோக்கி வந்தான்.

''நான்தான் ஸார்...''

''இவ்வளவு காலையில இந்தப் பக்கம் எதுக்காக வந்தீங்க...?''

அவன் புன்னகைத்தான்.

''இந்தப் பக்கம் இருக்கிறவங்களுக்கெல்லாம்... இந்த ஆத்து மேடுதான் திறந்தவெளி டாய்லெட் ஸார். நான் காலையில வழக்கமா வர்ற இடம்தான். நான் இந்த மேட்டுக்கு வரும்போது ஒரு நாய் முன்னங்கால் மணலைக் கிளறி எதையோ இழுக்க முயற்சி பண்ணிட்டிருந்தது. அது எதைத்தான் இழுக்குதென்று நானும் வேடிக்கை பார்க்க நின்னுட்டேன். நிமிஷ நேரம் கூட இல்லை. சொதசொதன்னு இந்தக் கால் வெளியே



வந்தது. திடுக்கிட்டுப் போன நான் அக்கம் பக்கத்துல இருக்கிற ஆட்களை சத்தம் போட்டு கூப்பிட்டேன். டெலிபோன் மூலமா உங்களுக்கு தகவலும் கொடுத்தேன்.''

குஞ்சுண்ணி நாயர் கான்ஸ்டபிளிடம் திரும்பினார்.

''த்ரீ நாட் டூ...''

''எஸ் ஸார்...''

''கையில் இருக்கிற லத்தியாலே அந்தக் காலை ...ரமா ஒரு பக்கம் இழுத்துப் போட்டுட்டு அக்கம் ...க்கத்துல இருக்கிற யார்கிட்டேயாவது கடப்பாறையை ...ாங்கிட்டு வந்து இந்த இடத்தை நல்லா தோண்டிப்ப ...ின்னொரு கால் கிடைச்சாலும் கிடைக்கும்.''

கான்ஸ்டபிள் கும்பலை நோக்கிப் போனார். ஐந்தே ...மிஷங்களில் ஒரு கடப்பாறையோடு வந்தார். ...டப்பாறையினால் 'காலை' இழுத்துப் போட்டுவிட்டு ...ந்த இடத்தை தோண்ட ஆரம்பித்தார். 'சக்சக்' என்று ...ரை குத்தப்பட்டு மணல் வேகவேகமாய் வெளியே ...ந்தது. நிமிஷங்கள் நகர நகர குழி நான்கடி ...ழத்திற்கு வாயைப் பிளந்து கொண்டு தெரிய, ...ஞ்சுண்ணி நாயர் உள்ளே எட்டிப் பார்த்தார்.

உள்ளே ஒண்ணுமேயில்லை.

மனசில் குழப்பம் ஓடியது.

'கொலையுண்ட உடலின் ஒரு கால் மட்டும் இங்கே ...தைக்கப்பட்டிருக்கிறது. உடம்பின் மறற பாகங்கள் ...ங்கே...?'

★★★

**ரா**த்திரி பதினொரு மணி பத்து நிமிடம்.

பத்ராச்சலம் கயிற்றுக் கட்டிலில் மல்லாந்து ...டுத்தபடி அட்டைக்கரி வானத்தில் மினுக்கிக் ...காண்டிருந்த நட்சத்திரக் கும்பலையே வெறித்துப் ...ார்த்துக் கொண்டிருந்தார். விட்ட பெருமூச்சில் மார்பு ...வகவேகமாய் ஏறி தாழ்ந்து கொண்டிருந்தது. ...ாசற்படியில் மீராவும், மங்களமும் கன்னத்துக்கு ...ட்டுக்கொடுத்து கவலையாய் உட்கார்ந்திருந்தார்கள்.

மங்களம் மட்டும் அவ்வப்போது எரிச்சல் தாங் முடியாமல் கத்திக் கொண்டிருந்தாள்.

''அவ வரட்டும் இன்னிக்கு... பொண்ணே வேண்டாம்னு ரெண்டா வெட்டிப் போட்டுடறேன்... பாவிப் பொண்ணு என்னிக்குமே இப்படி நடந்துக் மாட்டாளே...! என்னங்க... அவ வந்த பஸ்சுக் வழியிலே ஏதாவது ஆக்ஸிடெண்டாகி...''

பத்ராச்சலம் திரும்பிப் பார்த்து அவன முறைத்தார். ''ஏண்டி... வாயை மூடிக்கிட்டு கொஞ் நேரம் சும்மாயிருக்க மாட்டியா.. நானே எதை எதையே நினைச்சுட்டு கலவரப்பட்டுட்டிருக்கேன்... உன்னோ பங்குக்கு நீயும் ஏதாவது உளறி என்னை காபர படுத்தாதே... ஒலவக்கோட்டுக்கு போயிருக்கிற ராஜ வர்ற வரைக்கும் 'கம்'ன்னு வாயை பொத்திக்கிட் இரு... எதையாவது பேசி என்னோட எரிச்சலை கிளப்பாதே...''

மங்களம் வாயை மூடிக் கொண்டாள்.

நிமிஷங்கள் மௌனமாய் கரைய ஆரம்பித்தத நேரம் பதினோரு மணி முப்பது நிமிஷத்ன தொட்டியிருந்தபோது... தோப்புக்குள்ளிருந்து அந் குரல் கேட்டது?

''பத்ராச்சலம்...''

கட்டிலில் மல்லாந்திருந்த பத்ராச்சலம் திரும்பி பார்த்தார்.

தோப்பின் இருட்டில் யாரோ மசமசவென்று வந் கொண்டிருப்பது தெரிந்தது. எழுந்து உட்கார்ந் கேட்டார். ''யாரது?''

''நான்தான் பத்ராச்சலம்... கோபாலசாமி.''

''கோபாலசாமியா... வா...வா...'' பத்ராச்சலம் த சீட்டாட்ட நண்பரை சுரத்தில்லாமல் வரவேற்றார்.

நெஞ்சுவரை ஏற்றிக் கட்டின வேட்டியோடும் வழுக்கை மண்டையோடும் தெரிந்த கோபாலசா வாயில் பெரிதாய் சுருட்டு ஒன்றை பற்ற வைத்து கொண்டு 'பப்...பப்...' என்று புகை விட்டு



கொண்டிருந்தார். தொப்பையை தடவிக் கொண்டே பத்ராச்சலத்தின் அருகே வந்து உட்கார்ந்தார்.

''என்ன... இன்னும் யாரும் தூங்கலை போலிருக்கே...?''

''எப்படி தூக்கம் வரும்...? கல்யாணப் பத்திரிகை குடுக்கிறதுக்காக காலையில ஒலவக்கோட்டுக்கு புறப்பட்டுப் போன தங்கம் இன்னும் வீடு திரும்பலை. கடைசி பஸ்சும் போயாச்சு.''

''என்னது... தங்கம் இன்னும் வரலையா...? மணி பன்னெண்டு ஆகப் போகுது... இன்னும் வராமே இருக்க நியாயமில்லையே...''

''என்னாச்சுன்னு தெரியலை. அதான் பார்த்துட்டு வர ராஜனை அனுப்பியிருக்கேன்'' என்றவர் பூரா விவரங்களையும் சொன்னார்.

''ராஜனா...? எந்த ராஜன்...?'' கோபாலசாமி திகைத்த மாதிரி கேட்டார்.

அடையாளம் சொன்னார் பத்ராச்சலம். உடனே கோபாலசாமி ஆச்சரியமானார். ''பத்ராச்சலம்... அந்தப் பையன் சரியில்லை...'' என்றார் பட்டென்று.

''எப்படி சொல்ற...?''

''காலையில உம் பொண்ணும், அந்த பையனுந்தான் ஒண்ணா சேர்ந்த மாதிரி ஒலவக்கோடு பஸ்சுல ஏறினாங்க.''

பத்ராச்சலம் திடுக்கிட்டு நிமிர்ந்தார். ''என்ன சொல்றே கோபாலசாமி...? அந்தப் பையனும் தங்கமும் ஒண்ணா ஒலவக்கோடு பஸ்ல ஏறினாங்களா...?''

''ஆமா... நான் கோயா டீக்கடையில உட்கார்ந்து பேப்பர் பார்த்துட்டிருந்தேன். ரெண்டு பேரும் சேர்ந்த மாதிரி ஓடி வந்து பஸ்ஸில ஏறினாங்க... அந்தச் சமயத்துல அது எனக்கு தப்பா படலை. இப்போ நீ அந்த ராஜனைப் பத்தி சொன்னதும் எம்மனசுக்கு நெருடலாபடுது... ஆமா... இந்த ராத்திரி நேரத்துல அந்த ராஜனை எங்கே வெச்சு பாத்தே...?''

''மெயின் ரோடு பஸ் ஸ்டாண்ட்ல...''

''அங்கே எதுக்காக நின்னுட்டிருந்தான்?''

''ஓலவக்கோடு கடைசி பஸ்ஸில யாரோ ப்ரெண்
வர்றதா சொன்னான்...''

''கடைசி பஸ்சில அந்த ப்ரெண்ட் வந்தானா...?

''வரலை...''

கோபாலசாமி புன்னகைத்தார்.

''பத்ராச்சாலம்! நீ ஒரு விஷயத்தை யோசித்
பார்த்தியா. ஓலவக்கோட்டிலிருந்து 'வர்ற கடை
பஸ்ஸில உம் பொண்ணு வர்றாளான்னு பார்க்க
மெயின் ரோடு பஸ் ஸ்டாண்டுக்கு போயிருக்கே.
அந்த சமயத்துல அவனும் யாரையோ பார்க்க அங்
வந்திருக்கான். ஆனா காலையில தங்கமும், அவனு
ஒண்ணா சேர்ந்து ஓலவக்கோடு பஸ்சுல பேரன
உங்ககிட்ட சொல்லலை பார்த்தியா...? அவனோ
மனசுல கல்மிஷம் ஒண்ணும் இல்லா
இருந்திருந்தா... உன்கிட்டே அந்த விஷயத்
சொல்லியிருப்பானே...''

''அட ஆமாம்...'' என்று யோசனையாய் தாடை
தடவிய பத்ராச்சலம் மனைவி மங்களத்தைப் பார்க்
அவள் பொரிந்தாள். ''தங்கத்தை நான் கூட்டிட்
வர்றேன்னு அவன் இந்த ராத்திரி நேரத்துல இவ்வ
அக்கறையா கிளம்பிப் போகும்போதே என
சந்தேகம்தான். அவன் சரியான கூட்டுக் களவாணிங்
தங்கம் தண்ணி எடுக்கப் போறப்ப ரெண்டு மூ
தடவை அவனை கிணத்து மேடை
பார்த்திருக்கேன்.''

பத்ராச்சலம் கட்டிலைவிட்டு எழுந்து வாசல்
யோசனையாய் நடந்தார். 'காலையில ரெண்டு பே
ஒண்ணா ஓலவக்கோடு போயிருக்காங்க. ஆனா இ
மட்டும் திரும்பி பாலக்காட்டுக்கு வந்திருக்கா
தங்கம் வரலை. ஆனா ராத்திரி கடைசி பஸ்சுல தங்
வர்றாளா இல்லையான்னு பார்க்கிறதுக்காக மெ
ரோடு பஸ் ஸ்டாண்டுக்கு வந்திருக்கான். தங்
வரலைன்னு தெரிஞ்சதும் உடனே பார்த்து
வர்றேன்னு கிளம்பிட்டான்.... ஓலவக்கோட்



என்னமோ நடந்திருக்கு.. இல்லேன்னா பய மூஞ்சி அப்படி இருக்காது.''

கோபாலசாமி அணைந்து போன சுருட்டை தூக்கி எறிந்தபடி எழுந்தார். ''அந்த பய வந்ததும் பக்குவமா விசாரி... நான் வீட்டுக்குக் கிளம்பறேன். உனக்கு இன்னிக்கு இருக்கிற மூட்ல நீ சீட்டாட வரமாட்டே.''

கோபாலசாமி கிளம்பினார்.

★★★

இல்பாத்தி ஆற்றோரம்.

வெய்யில் சுள்ளென்று கிளம்பின அதே நேரம் – போலீஸ் மோப்ப நாய் 'ராணி' ட்ரெய்னரோடு வந்து சேர்ந்திருந்தது. கும்பலின் அடர்த்தி கூடியிருந்தது. தோண்டி எடுக்கப்பட்ட காலை ராணியின் மோப்பத்திற்கு விட்டார்கள்.

ராணி அந்த 'காலை' முகர்ந்து பார்த்துவிட்டு காதுகளை விடைத்துக் கொண்டு நிமிர்ந்தது. சுற்றிலும் ஒரு ஜாக்கிரதையான பார்வையை வீசிவிட்டு மெதுவாக ஆற்று மணலில் ஓட ஆரம்பித்தது.

ட்ரெய்னரும், சப்–இன்ஸ்பெக்டர் குஞ்சுண்ணி நாயரும் பின்தொடர்ந்து ஓடினார்கள். ராணி ஐம்பது மீட்டர் தூரம் ஓடினதும் –

அந்த கருவேல மரத்துக்குக் கீழே போய் நின்றது. ட்ரெய்னரைப் பார்த்து ஒற்றைக் குரலில் 'லொள்' என்று குரைத்துவிட்டு முன்னங்கால்களால் மண்ணைக் கிளற ஆரம்பித்தது.

குஞ்சுண்ணி நாயர் கான்ஸ்டபிளுக்கு கண்ணைக் காட்ட, அவர் கடப்பாறையோடு அந்த இடத்தை நெருங்கினார்.

மண்ணைக் கொத்த ஆரம்பித்தார்.

சக்...சக்...

மணல் மேலே வந்து கொண்டிருக்கும்போதே நாசிக்குப் பிடிக்காத ஒரு 'கொத்வ நாற்றம்' குஞ்சுண்ணி நாயரின் முகத்தை சுளிக்க வைத்தது.

## 17



மன் வேகவேகமாய் கொத்தப்பட்டு குழியொன்று பிறக்க, உள்ளே அழுகின கால் தொடையோடு சேர்த்து வெட்டப்பட்டு மண்ணோடு மண்ணாய் பிசைந்து போய் தெரிந்தது. மோப்ப நாய் ராணி தீவிரமாய் குரைக்க, கான்ஸ்டபிள் மூக்கைப் பொத்திக் கொண்டு கடப்பாறையால் அந்தக் காலை எடுத்து வெளியே போட்டார்.

சப்–இன்ஸ்பெக்டர் குஞ்சுண்ணி நாயர் சலித்துக் கொண்டார். ''காலங்காத்தாலே இது என்னய்யா கர்மம்...? கொலை பண்ற ஆசாமி ஒட்டு மொத்தமா ஒரே இடத்துல உடம்பை புதைக்கக் கூடாதா? என்னமோ தவணை முறையில கொலை செஞ்சவன் மாதிரி... உடம்போட ஒவ்வொரு பார்ட்டையும் தனித்தனியா கழட்டி – திசைக்கொண்ணா அடக்கம் பண்ணியிருக்கான்.''

கான்ஸ்டபிள் சொன்னார். ''சார்... அங்கே புதைச்சிருந்தது வலது கால். இங்கே புதைச்சிருக்கிறது இடது கால்...''

''ரெண்டு கையையும் எங்கெங்கே புதைச்சு வெச்சிருக்காங்களோ...?'' என்று எரிச்சலாய் சொன்ன குஞ்சுண்ணி நாயரின் மூளையில் சட்டென்று ஒரு 'ப்ளாஷ்' மின்னல் மாதிரி அடித்தது.

'ரயில் வேகனில் – மீன் கூடையில் கிடைத்த அந்தக் கை இந்த உடம்புக்கு சொந்தமானதாக இருக்குமோ...?'

'ஏன் இருக்கக்கூடாது...?'

கொஞ்சம் தொலைவில் கும்பலை விரட்டிக் கொண்டு இருந்த் அந்த கான்ஸ்டபிளை கையசைத்துக் கூப்பிட்டார். கான்ஸ்டபிள் ஓடிவந்து விறைப்பாய் நின்றார்.

''சார்...''



''கான்ஸ்டபிள்...நீ உடனே செல்போன்ல பேசி இன்ஸ்பெக்டர் நவநீத கிருஷ்ணனையும், சப்–இன்ஸ்பெக்டர் அவினாஷையும் ஸ்பாட்டுக்கு உடனே வரச்சொல்லு...''

''எஸ் சார்...''

★★★

ராஜன் ஒலவக்கோட்டிலிருந்து திரும்பி வரும்போது சரியாய் இரண்டு மணி. நிறைய வேர்த்துக் களைத்திருந்தான்.

கண்கள் நெருப்புத் துண்டங்களாய் சிவந்து போயிருக்க, தலைக்கேசம் திப்பித் திப்பியாய் கலைந்திருந்தது.

தோப்பின் இருட்டுக்குள் நுழைந்து – தளர்வாய் நடந்து – பத்ராச்சலம் வீட்டை நெருங்கினான். வீடு மெல்லிய இருட்டில் உட்கார்ந்தது.

''சார்...''

குரல் கொடுத்தான்.

கயிற்றுக் கட்டிலில் – மல்லாந்து படுத்திருந்த பத்ராச்சலம் ராஜனின் குரல் கேட்டு எழுந்து உட்கார்ந்தார். இருட்டில் நின்றிருந்த அவனைப் பார்த்துக் குரல் கொடுத்தார்.

''வா தம்பி...''

ராஜன் மெல்ல நடந்து வந்தான்.

''என்ன தம்பி...போன காரியம் என்னாச்சு...?''

''நீங்க கொடுத்த எல்லா அட்ரஸ்லேயும் விசாரிச்சு பார்த்துட்டேன் சார். தங்கம் அங்கே வரவே யில்லையாம்....'' ராஜனின் பேச்சுக் குரல் கேட்டு – வாசல் கதவைத் திறந்து கொண்டு மங்களமும், மீராவும் எட்டிப் பார்த்தார்கள்.

பத்ராச்சலம் கத்தினார். ''மங்களம்... நீயும் மீராவும் வாசல் கதவை தாழ்ப்பாள் போட்டுகிட்டு படுங்க... நான் கொஞ்சம் வெளியே போய்ட்டு வந்துடறேன்'' சொல்லிக் கொண்டே கட்டிலினின்றும் எழுந்து – ராஜனின் மேல் கை போட்டார்.

''வா தம்பி... கொஞ்சம் நடந்துட்டு வரலாம்...''

''சார்.. இந்நேரத்துக்கு...''

''உன் கூட கொஞ்சம் பேசணும்...''

ராஜன் வாய் உலர்ந்தான். ''என்கூட பேசணுமா? எதை... எதைப்பற்றி சார்...?''

''சொல்றேன் வா...''

அவனுடைய தோள் மீது கையைப் போட்டுக் கொண்டு தோப்பின் மெல்லிய இருட்டில் தெரிந்த வரப்பின் மேல் நடக்க ஆரம்பித்தார் பத்ராச்சலம். ராஜனின் இருதயம் தனி ஆவர்த்தனம் வாசிக்க ஆரம்பித்தது.

'என்ன விஷயம் பேசப் போகிறார்? – எனக்கும் தங்கத்துக்கும் இருந்த தொடர்பு தெரிந்து விட்டதா...?'

''என்ன தம்பி... பைக் எங்கே...?''

''வீட்ல விட்டுட்டு வந்துட்டேன்.''

''அதுவும் நல்லதுக்குத்தான்...'' சொல்லிக் கொண்டே பீடி ஒன்றை பற்ற வைத்துக் கொண்டார் பத்ராச்சாலம். தோப்பின் மையத்திற்கு வந்ததும் நின்றார்.

சுற்றிலும் இருட்டு.

ராஜனுக்கு பத்ராச்சலத்தின் வாயிலிருந்த பீடியின் முனை மட்டும் சிவப்பாய் தெரிந்தது. முகம் ஒரு கறுப்பு அவுட்லைனாய் நட்சத்திர வெளிச்சத்தில் பயம் காட்டியது. கூப்பிட்டார் மெல்லிய குரலில்.

''தம்பி...''

''சார்...''

''நீ யாரையாவது காதலிச்சிருக்கியா...?''

ராஜன் திடுக்கிட்டுப் போய் – ''இ....இல்ல'' என்றான்.

''இந்த பொய் பேசறதுதான் எனக்குப் பிடிக்காது. உன்னோட பர்சனாலிட்டிக்கு எந்தப் பொண்ணாவது உன்னை காதலிச்சிருக்கணுமே...?''

''ஆ....ஆமா... சார்....''



''யாரந்த பொண்ணு...?''

''உ...உங்க டாட்டர் த...தங்கம்...''

''எத்தனை நாளா ரெண்டு பேர்க்கும் இந்த தெய்வீகக் காதல் இருக்குன்னு நான் தெரிஞ்சுக்க லாமா...?''

''ஆ...ஆறு மாசமா...''

''சரி... இப்போ தங்கம் எங்கே...?''

''எ...எனக்கு தெரியாது சார்...''

''அதெப்படி தெரியாமே போகும்? இன்னிக்கு காலையில நீயும் அவளும் சேர்ந்துதானே ஓலவக்கோடு போனீங்க...?''

''சா...சார்... இதெல்லாம் உங்களுக்கு எ...எப்படி...?''

''தெரியும்ன்னு கேக்கறியா...? எப்படியோ தெரியும். அந்த விவரமெல்லாம் உனக்கு வேண்டாம் தம்பி. கேட்ட கேள்விக்கு 'பளிச் புளிச்'ன்னு பதில் சொல்லு... போதும்.''

ராஜன் இருட்டில் தலைகுனிந்தான். பத்ராச்சலம் அவனுடைய தோள்பட்டையை இறுகப் பற்றினார். ''ம்... சொல்லு... நீயும் தங்கமும் ஒண்ணா சேர்ந்து ஓலவக்கோடு போனீங்களா இல்லையா...?''

''போ...போனோம்...''

''நீ மட்டும் பாலக்காட்டுக்கு திரும்பி வந்துட்டியே...அவ எங்கே...?''

''அ...அவளை காணோம் சார்...''

''காணோமா... என்ன சொல்றே?''

''ஆமா சார். தங்கமும் நானும் ஞானசௌந்தரிங்கற ஒரு டாக்டரம்மாவை பார்க்கிறதுக்காகத்தான் ஓலவக்கோடு போனோம்...''

''டாக்டரம்மாவை பார்க்கிறதுக்காக... எதுக்கு?''

''அ...அ....அது வந்து... வந்து... தங்கமும் நானும் கொஞ்சம் எல்லை மீறி பழகிட்டோம்... அதனால்.... அதனால்...''

அந்த இருட்டிலும் பத்ராச்சலத்தின் முகம் மாறுவது தெரிந்தது.

''ஓ! உங்க தெய்வீகக் காதலுக்கு வாரிசு வேற வளர ஆரம்பிச்சிருச்சா...குட்... பெரிய மக மீராவுக்கு இன்னும் பதினஞ்சு நாள்ல கல்யாணம்... சின்ன மக தங்கத்துக்கு இப்பவே சீமந்தமா? பேஷ்! ம்...அப்புறம் சொல்லுங்க மாப்ளே... ரெண்டு பேரும் அந்த டாக்டரம்மாகிட்டே போனிங்க...''

ராஜன் தொடர்ந்தான். ''கருவைக் கலைக்கச் சொல்லி கேட்டுகிட்டோம்... அந்த டாக்டரம்மாவும் ஒத்துக்கிட்டாங்க. ஃபீஸ் 10,000 கேட்டாங்க. நான் பணத்தை எடுக்கிறதுக்காக திரும்பவும் பாலக் காட்டுக்கு வந்தேன். பணத்தை எடுத்துக்கிட்டு போறதுக்குள்ளே... டாக்டரம்மா பேசின கேவலமான பேச்சை கேட்கப் பிடிக்காம... தங்கம் ஆஸ்பத்திரியை விட்டு வெளியே போயிட்டா...அந்த நிமிஷத்திலிருந்து நானும் தங்கத்தை தேடிக்கிட்டு இருக்கேன்...''

ராஜன் சொல்லி முடித்த அதே விநாடி –

''ர்ர்ர்ர்ரப்ப்....''

பத்ராசலத்தின் கை சவுக்காய் சுழன்று ராஜனின் கன்னத்தில் இடியாய் இறங்கியது. ''ராஸ்கல்! இந்த நடிப்பெல்லாம் என்கிட்ட வேண்டாம். தங்கத்தை நீதான் என்னமோ பண்ணியிருக்கே... அவளை என்ன பண்ணினே சொல்லு...?''

''சா...சார்... நான் சொல்றது நிஜம் சார்... நீங்க வேணுமின்னா அந்த டாக்டரம்மாகிட்டவே கேட்டுப் பாருங்க சார்...''

''இந்த வெட்கக்கேட்டை அந்த டாக்டரம்மாகிட்டே வேற வந்து நான் கேட்கணுமா...? ஏண்டா அந்த டாக்டரம்மா உனக்கு சாட்சியா...?''

''சா...சார்...நான்...நான்...சொ...சொல்றது...''

''நீ எதையுமே சொல்ல வேண்டிய அவசியமில்லை... எனக்கு வேண்டியது எம் பொண்ணு... அவ எங்கிருக்கா...?''



''எ...எ...எனக்கும் தெரி...தெரியாது ஸார்...''

''நான் இப்படியெல்லாம் கேட்டா, உண்மையைச் சொல்ல மாட்டேன்னு எனக்குத் தெரியும். அதான் முன்னேற்பாடா வந்திருக்கேன்...''

பத்ராச்சலம் சொல்லிக் கொண்டே –

இடுப்பின் மடியிலிருந்து எதையோ பளபளப்பாய் உருவினார். அந்த இருட்டிலும் பளபளத்த அது – ஒரு வீச்சரிவாள்.

''சா...சார்...''

குரல் குழறிக் கொண்டே அந்த இருட்டில் மெல்ல பின்வாங்கினான் ராஜன். பத்ராச்சலம் சீறினார்.

''நகராதே! ஒரு அடி நகர்ந்தாலும் சரி... ரெண்டா வகுந்துடுவேன்... எங்கே என் பொண்ணு தங்கம்...?''

''எ....எனக்கு தெரி...தெரியாது சார்...''

''குபுக்'கென்று வீச்சரிவாளை ராஜனின் கழுத்தை நோக்கி வீசினார் பத்ராச்சலம்.

## 18



அந்த இருட்டிலும் பளபளத்த அரிவாளை சட்டென்று கண்களில் வாங்கி கீழே குனிந்து கொண்டான் ராஜன். கையைக் கூப்பிக் கொண்டு கெஞ்சினான்.

''ஸார், எனக்கு நிஜமாவே தங்கம் எங்கேன்னு தெரியாது. நான் அவளை அந்த டாக்டரம்மாகிட்டே கூட்டிட்டு போனது உண்மை....ஆனா பணத்தை எடுத்துட்டு வர்றதுக்குள்ளே டாக்டரம்மாகிட்டே தங்கம் சண்டை போட்டுக்கிட்டு....''

பத்ராச்சலம் அவன் சொல்வதை காதில் போட்டுக் கொள்ளாமல், ''நீதாண்டா எம் பொண்ணை என்னமோ பண்ணிட்டே... அவளை சாகடிச்சு எங்கேயாவது புதைச்சிட்டியா என்ன...?'' கத்திக் கொண்டே அரிவாளோடு மறுபடியும் அவன் மேல் பாய்ந்தார்.

''ஸா...ஸா...ஸார்... நான் சொ...சொ...சொல்றதைக் கொஞ்சம் கே...கே...கேட்டு...''

''கேக்க மாட்டேண்டா... உன்னை துண்டு துண்டா வெட்டினாத்தான் என் மனசுக்கு நிம்மதி...'' அரிவாளை தலைக்கு மேலே உயர்த்தினார்.

இனிமேல் அவரிடம் பேசிக்கொண்டிருக்க முடியாது. உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டு மானால் இங்கே நிக்கக் கூடாது.

ஓட ஆரம்பித்தான்.

''டே...ய்... நில்லுடா...''

பத்ராச்சலம் தன் கையிலிருந்த அரிவாளை குறிபார்த்து ராஜனின் மேல் வீசினார். ராஜன் குனிந்து கொள்ள, அது அருகேயிருந்த தென்னை மரத்தின் அடியில் குத்திட்டு நின்று தொங்கியது. ராஜன் இந்த அவகாசத்தை பயன்படுத்திக் கொண்டு இருபதடி தூரம் முன்னால் ஓடியிருந்தான்.

பத்ராச்சலம் அவன் ஓடுவதைப் பார்த்ததும் ஆத்திரத்தின் உச்சிக்கே போனார். ''நீ எங்கதான் ஓடுவே... பார்த்துடறேண்டா... நீ எந்த சீமைக்கு போனாலும் என் கையிலதாண்டா உனக்கு சாவு...'' தென்னை மரத்தின் அடித்தண்டில் குத்திட்டு நின்ற அரிவாளை உருவிக் கொண்டு ராஜனை துரத்த ஆரம்பித்தார்.

ராஜன் அந்த இருட்டில் திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டே மூச்சிரைக்க ஓடினான். மரண பயத்தில் தென்னை மரங்களின் மேல் முட்டிக் கொண்டு இரண்டு முறை கீழே விழுந்து தடுமாற்றமாய் எழுந்தபடி ஓடினான்.

உடம்பின் சகல பாகங்களிலும் வெள்ளமாய் வியர்வை. இருதயம் பயத்தில் வெடித்து விடுகிற சைஸில் பம்மியது.

ராஜன் அந்த பதட்டத்திலும் யோசித்துக் கொண்டே ஓடினான். 'எந்த பக்கமாய் ஓடலாம்? மெயின் ரோட்டுக்கு போனாலும் இந்நேரத்திற்கு யாரும் இருக்க



மாட்டார்கள். கல்பாத்தி ஆற்றுப் பக்கம் ஓடி ரயில்வே ஸ்டேஷனுக்கு போய்விட்டால்...?'

'அதுதான் சரி...!'

ஆற்றை நோக்கி தன் ஓட்டத்தின் திசையைத் திருப்பினான் ராஜன். எதிர்ப்பட்ட இரண்டொரு குற்றுச் செடிகளையும் சின்னச் சின்ன பாறைகளையும் தாண்டிக் கொண்டே திரும்பிப் பார்த்தான்.

பத்ராச்சலம் இன்னும் அதே ஆவேசத்தோடு –

அரிவாளை உயர்த்தியபடி ஒரு சின்ன புயல் மாதிரி வந்து கொண்டிருந்தார்.

''த்தட்''

ராஜனின் காலை அந்த சிறு கல் தட்டிவிட, ராஜன் குபீரென்று உருண்டு விழுந்தான். கைகளிலும் கால்களிலும் தோல் உரிந்து தீ பட்ட மாதிரி எரிய அந்த வலியை ஜீரணித்துக் கொண்டு எழ முயன்றான்.

பத்ராச்சலம் பிசாசு வேகத்தில் ஓடிவந்து அவன் தலைமுடியைக் கொத்தாய் பற்றி உயர்த்தினார். இருட்டில் அவருடைய கருப்பான முகம் வேர்த்து வழிந்து கொண்டு உக்கிரமாய் தெரிய, அரிவாளை வீசினார்.

ராஜன் பதட்டமாய் –

அந்த அரிவாள் வீச்சை தன் வலது கையால் தடுக்க–

''ச்சக்!''

வெட்டு விழுந்து ரத்தம் பீச்சியது. ராஜனின் வலதுகை முழங்கை வரைக்கும் வெட்டப்பட்டு இருட்டில் எங்கோ போய் 'ச்சொத்' என்று விழுந்தது. துள்ளியது.

''அம்மா...ஆ...ஆ...ஆ...!''

ராஜன் பயக் கூச்சலிட்டு உருண்டான். தப்பிக்க வேண்டுமே என்கிற மரண பயத்தில் வெட்டப்பட்ட கையையும் பொருட்படுத்தாமல் ஓட ஆரம்பித்தான்.

''மறுபடியும் ஓடறியா... உன்னை விட

மாட்டேண்டா... துண்டு துண்டா வெட்டியெறிஞ்சாத்தான் எனக்கு நிம்மதி...நீ எவ்வளவு தூரம்தான் ஓடுவே... ஓடுடா பார்க்கலாம்...''

பத்ராச்சலம் ஆவேசமாய் துரத்த ஆரம்பித்தார்.

ராஜனின் வெட்டப்பட்ட கையிலிருந்து ரத்தம் சொட்டிக் கொண்டே போக, ராஜன் விரைவிலேயே சோர்ந்து போக ஆரம்பித்தான்.

மூச்சு வேகமாய் வாங்க கண்களுக்குள் இருட்டு 'கப்கப்'பென்று வந்து உட்கார இருண்டு நிமிடம் ஓடுவதற்குள் தடுமாறி கீழே விழுந்தான் ராஜன்.

வேகமாய் ஓடிவந்த பத்ராச்சலம் நினைவிழந்து மயக்கத்துக்குப் போய்க் கொண்டிருந்த ராஜனின் கழுத்தில் நச்சென்று அரிவாளை இறக்கினார்.

தலை துள்ளி விழ ராஜனின் உடல் மணலில் நிசப்தமாய் துடிக்க ஆரம்பித்தது. இருட்டில் துடிக்கிற அந்த உடலையும் தலையையும் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த பத்ராச்சலம் ரத்தம் சொட்டும் அரிவாளோடு மெல்ல திரும்பினார்.

தோப்பில் இருக்கும் தன் வீட்டை பத்து நிமிஷ நடையில் தொட்டு கிணற்று நீரைச் சேந்தி அரிவாளைக் கழுவிக் கொண்டிருந்தபோது வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு அவர் மனைவி தூக்கக் கலக்கத்தோடு வெளியே வந்தாள்.

''இந்நேரத்துக்கு கிணத்துல என்ன பண்ணிட்டிருக்கீங்க...?'' கேட்டபடியே அவரை நெருங்கியவள் அவர் கையிலிருந்த அரிவாளையும் அதிலிருந்த ரத்தக் கறையையும் பார்த்ததும் முகம் மாறினாள்.

''எ...எ...என்னங்க இது ரத்தம்...?''

''உன்னோட மகளை பாழ் பண்ணின ஒரு பாவியோட ரத்தம்...''

''நீ...நீங்க என்ன சொ...சொல்றீங்க...?''

''அந்த ராஜனை நான் தீர்த்துட்டேண்டி. அந்த ராஸ்கலை... ஓட...ஓட விரட்டி கொன்னேன்.''



''எ...எ..என்னது கொ...கொ... கொன்னுட்டிங்களா?''

''ஆமாண்டி...கல்பாத்தி ஆத்தோரமா போய்ப் பாரு... ரெண்டு துண்டா வெட்டி போட்டிருக்கேன்...''

''அய்யய்யோ.....'' இரண்டு கைகளாலும் தலைத்தலையாய் அடித்துக் கொண்டு அப்படியே குத்துக்காலிட்டு உட்கார்ந்து கொண்டாள் மங்களம். ''என்ன காரியம் பண்ணிட்டு வந்து நிக்கறீங்க...? மீரா கல்யாணத்துக்கு இன்னும் பத்து நாள் கூட இல்லையே...''

அரிவாளை ரத்தக்கறை போக தேய்த்து தேய்த்து கழுவிக் கொண்டிருந்த பத்ராச்சலம் திடுக்கிட்டுப் போய் நிமிர்ந்தார்.

'இன்னும் பத்து நாளில் மீரா கல்யாணம்.'

'இதை எப்படி நான் மறந்தேன்...?'

'கொலை செய்தது நான்தான் என்று போலீஸ் கண்டுபிடித்து லாக்அப்பிற்கு என்னைக் கூட்டிக் கொண்டு போய்விட்டால் மீராவின் கல்யாணம் எப்படி நடக்கும்?'

பத்ராச்சலம் மனசில இருந்த வெறியும் ஆத்திரமும் கொஞ்சம் கொஞ்சமாய் கரைய அவர் உடம்பில் நடுக்கம் பரவ ஆரம்பித்தது.

''அ...அ...அவசரப்பட்டுட்டேன் மங்களம்... ஆத்திரத்துல நிதானமில்லாமே அந்தப் பையனை.. இப்ப... என்ன பண்ணலாம் மங்களம்...?''

''அந்தப் பையனை எங்கே வெட்டிப் போட்டிருக்கீங்க...?''

''கல்பாத்தி ஆத்தோரமா...''

''நீங்க வெட்டினதை யாராவது பார்த்தாங்களா...?''

''ஊஹூம்... பார்க்கலை...''

''சரி, அந்த மண்வெட்டியை எடுத்துக்குங்க...''

''எதுக்கு மங்களம்...?''

''பொணத்தை ஏதாவது ஒரு பக்கமா குழி தோண்டி புதைச்சுட்டு வந்துடலாம். பையனைக் காணோம்ன்னு அவங்க வீட்ல தேடிட்டிருக்கும்போதே நம்ம பெண்ணோட கல்யாணம் முடிஞ்சிடும். பொணத்தை அப்படி போட்டுட்டு வந்தா நாளைக்கு போலீசுக்கு தகவல் போகும். விசாரணை வரும். அந்தப் பையனுக்கு யார் யார் பழக்கமாயிருந்தாங்கங்கறதை போலீஸ் விசாரிக்கும். தங்கத்துக்கும் அவனுக்கும் தொடர்பு இருக்கிற விஷயம் உங்க ப்ரெண்ட் கோபாலசாமிக்கு நல்லாவே தெரியும். அவர் யார்கிட்டயாவது உளறி வைச்சிருந்தார்னா... போலீஸ் சுலபமா நம்ம வீட்டுக்கு வந்துடுவாங்க...''

''நீ...நீ...இப்ப என்ன சொல்றே...?''

''உடம்பை அடக்கம் பண்ணிட்டு வந்துடலாம் வாங்க...'' மங்களம் சொன்னதும் கிணற்று மேடைக்கு பக்கத்திலிருந்த தகர ஷெட்டுக்குள் நுழைந்து மண்வெட்டியை எடுத்துக் கொண்டார்.

''வா போகலாம்...''

இருட்டில் நடந்தார்கள்.

சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு வேக வேகமான நடையில் கல்பாத்தி ஆற்றோரத்தை தொட்டார்கள்.

இருட்டில் ராஜனின் உடம்பு தலை வேறாக முண்டம் வேறாக திசைக்கொன்றாய் கிடக்க, மங்களத்தின் வயிறு பயத்தில் பிசைந்தது.

''முன்யோசனை இல்லாமே இப்படியொரு காரியத்தை பண்ணீட்டிங்களே...? இவன் மட்டுமா தப்பு பண்ணினான்...? நம்ம பொண்ணும் சேர்ந்துதானே தப்பு பண்ணியிருக்கா... இந்த விஷயம் உங்க புத்திக்கு ஏன் உறைக்கலை...?''

பத்ராச்சலம் ஒன்றும் பேசாமல் மெல்ல நடந்து போய் ராஜனின் தலையை அவன் முடியைப் பற்றித் தூக்கிக் கொண்டார். மனம் கனத்து கண்களில் நீர் திரண்டது.



## 19

ராஜனின் வெட்டப்பட்ட தலையை கையில் எடுத்துக் கொண்ட பத்ராச்சலம் அதிர்ச்சியடைந்து போயிருந்த மங்களத்திடம் திரும்பினார்.

''மங்களம்.. ராஜனின் உடம்பை ஒரே இடத்துல புதைக்கக் கூடாது. பாடியை துண்டு துண்டா வெட்டி நாலு இடத்துல புதைச்சுட்டா... நாளைக்கு உடம்பை தோண்டி எடுத்தாலும் யாருக்கும் அடையாளம் தெரியாது...''

''நீங்க எப்படி புதைச்சாலும் சரி... சீக்கிரமா புதைச்சிட்டு கிளம்புங்க... யாராவது பார்த்துட்டா..: எல்லாமே நாசமாயிடும்...''

''சரி...நீ இங்கேயே இரு...'' சொன்ன பத்ராச்சலதும் தலையோடு ஆற்றின் கிழக்குப் பக்கமாய் போய் ஒரு கருவேல மரத்துக்குக் கீழே மண்வெட்டியால் ஆழமாய் குழி தோண்டி உள்ளே தலையைப் போட்டு புதைத்துவிட்டு வந்தார்.

மங்களம் திக்பிரமை பிடித்துப் போய் மணலில் குத்துக்காலிட்டு அந்த இருட்டில் உட்கார்ந்திருக்க, பத்ராச்சலம் ராஜனின் தலையில்லாத உடம்பை நெருங்கி அவனுடைய இரண்டு கால்களையும் தனித்தனியாய் வெட்டி எடுத்தார். அவைகளையும் எடுத்துக் கொண்டு போய் ஆற்றங்கரையின் இரண்டு திசைகளிலும் புதைத்துவிட்டு வந்தார். எஞ்சின உடம்பை பக்கத்திலிருந்த நாணல் புதர்களுக்குப் போய் குழி தோண்டி அடக்கம் செய்துவிட்டு மங்களத்தை நெருங்கினார்.

''வா... போலாம்...''

''எல்லாத்தையும் முடிச்சுட்டீங்களா?''

''ம்...''

''ராஜனோட உடம்புல வலதுகையை காணோமே... அது எங்கே...?''

பத்ராச்சலம் விலுக்கென்று நிமிர்ந்தார்.

''அ...அ...அது...?'' யோசித்தவர், மெல்லிய குரலில் சொன்னார். ''வழியில ராஜன் ஒரு தடவை கீழே விழுந்தபோது வெட்டினேன். அவன் தடுத்தான். வலதுகை துண்டாகி அங்கேதான் விழுந்திருக்கணும்...''

''எங்கே...?''

''வா.. போய் பார்க்கலாம்...''

போனார்கள்.

மூச்சிரைப்புகளோடு கூடிய சில நிமிஷ மவுன நடை. அந்த இடத்திற்கு வந்ததும் பத்ராச்சலம் நின்றார். மங்களம் கேட்டாள்.

''இந்த இடமா...?''

''ஆமா...''

''அந்தக் கையை தேடிப் பாருங்க...''

கண்களுக்கு பழக்கமாகி விட்ட அந்த மெல்லிய வெளிச்சத்தில் கீழே குனிந்து உற்றுப் பார்த்துக் கொண்டே நகர்ந்தார் பத்ராச்சலம். மங்களமும் தன் பங்குக்கு அங்கும் இங்குமாய் தேடினாள்.

''நல்லா ஞாபகப்படுத்தி பாருங்க... வெட்டினது இந்த இடம்தானா...?''

''ஆமா...''

பத்ராச்சலம் தலையாட்டிக் கொண்டிருக்கும்போதே அந்த கோரைப் புற்களுக்குப் பின்னாலிருந்து அந்த 'சர சர' சத்தம் கேட்டது.

மங்களமும் பத்ராச்சலமும் பயந்து போய் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டு மெல்ல பின்வாங்கினார்கள்.

புதர் வேகமாய் அசைந்தது.

''என்னாங்க... புதர்க்குப் பின்னாடி யாரோ இருக்காங்க போலிருக்கு... குரல் குடுத்து பாருங்க...''

பத்ராச்சலம் குரல் கொடுத்தார்.

''யாரது....?''



பதிலுக்கு மறுபடியும் அந்த ''சர சர'' சத்தம்.

''யா...ரது...?'' குரல் கொடுத்துக் கொண்டே புதரை நெருங்கினார் பத்ராச்சலம். அடுத்த விநாடி–

புதரிலிருந்து அந்த கறுப்பு நாய் குபீரென்று வெளியே பாய்ந்தது. அதன் வாயில் ராஜனின் வெட்டப்பட்ட கை. அதிர்ச்சியடைந்து பின் வாங்கினார்கள் இரண்டு பேரும்.

''ம...மங்களம்...''

''என்னங்க...?''

''ராஜனோட கை நாயோட வாயில இருக்கு...''

''கல் எடுத்து அடிங்க... அது விட்டுடும்...''

பத்ராச்சலம் கல்லைத் தேடிக் கொண்டிருக்கும் போதே நாய் வாயில் கவ்வின கையோடு ரயில்வே ஸ்டேஷன் இருந்த பக்கம் ஓடியது.

''மங்களம்... நீ வீட்டுக்கு போ... நான் அந்த நாய்க்குப் பின்னாடி போறேன்...''

''பார்த்துங்க...அது மேலே விழுந்து பிடுங்கப் போவுது...''

''நான் பார்த்துக்கிடறேன்...''

மண்வெட்டியையும் அரிவாளையும் அவளிடம் கொடுத்துவிட்டு நாய் ஓடிய பக்கம் பார்வையைப் போட்டுக் கொண்டே ஓடினார் பத்ராச்சலம்.

ஐம்பது மீட்டர் தூரம் ஓடியதும் அந்த ரயில்வே ட்ராக்கின் ஓரமாய் நாய் உட்கார்ந்து கீழே கையைப் போட்டு முகர்ந்து பார்த்துக் கொண்டிருந்தது.

பத்ராச்சலம் ஜாக்கிரதையாக ட்ராக் ஓரமாய் கிடந்த நான்கைந்து கருங்கற்களைப் பொறுக்கிக் கொண்டு நாயை நெருங்கினார். வசதியான தூரத்தில் நின்று கொண்டு ஒரு கல்லை விருட்டென்று வீசினார்.

அது குறி தவறவே,

நாய் சட்டென்று திரும்பிப் பார்த்து உஷாராகி கையை கவ்விக் கொண்டு தலைதெறிக்க ஓட ஆரம்பித்தது. பத்ராச்சலம் மறுபடியும் நாயை துரத்த

ஆரம்பித்தார். தொலைவில் ரயில்வே ஸ்டேஷன் ட்யூப்லைட் வெளிச்சத்தோடு பிரகாசமாய் தெரிந்தது.

நாய் ஸ்டேஷனை நோக்கி நாலுகால் பாய்ச்சலில் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே ஓடியது.

பத்து நிமிஷ ஓட்டம்.

ஸ்டேஷனின் அவுட்டர் நெருங்கியது.

கூட்ஸ் வேகன்கள் வரிசையாய் தெரிந்தன.

அதுவரைக்கும் நேராய் ஓடிக் கொண்டிருந்த நாய் சட்டென்று திசைமாறி பக்கவாட்டில் பாய்ந்து, திறந்திருந்த ஒரு கூட்ஸ் வேகனில் ஏறியது. பத்ராச்சலமும் அதே வேகனில் தொற்றி ஏறினார்.

★★★

அரை மணி நேரத்துக்குப் பின்தான் வீடு திரும்பினார் பத்ராச்சலம். மனைவி மங்களம் வாசலிலேயே காத்திருந்தாள்.

"என்னாச்சுங்க...?"

"அந்த நாய் நேரா கூட்ஸ் வேகனுக்குள்ளே நுழைஞ்சிடுச்சி..."

"அ...அப்புறம்...?"

"நானும் வேகனுக்குள்ளே நுழைஞ்சேன். வேகன் பூராவும் மீன்கூடை. நாய் கையை அங்கேயே விட்டுட்டு கீழே குதிச்சு ஓடிடுச்சு... நான் அந்தக் கையை எடுத்துகிட்டு வாசலை விட்டு கீழே இறங்கறதுக்குள்ளே எதிர் பிளாட்பாரத்துல நின்னுட்டிருந்த ஒரு போர்ட்டர் பார்த்துட்டு சத்தம் போட்டான். நான் திருடன்னு நினைச்சு... மத்த போர்ட்டர்களையும் கத்தி கூப்பிட ஆரம்பிச்சான். எனக்கு என்ன பண்றதுன்னு தெரியலை... சுத்தும் முத்தும் பார்த்தேன். ராஜனோட கையை ஒரு மீன் கூடையை பிரிச்சி உள்ளே சொருகி வெச்சிட்டு... நான் வேகனுக்கு மறுபக்கமா குதிச்சு... இருட்டுல பதுங்கி பதுங்கி ஓடி வந்துட்டேன்..."

"உங்களை அந்த போர்ட்டர் அடையாளம் பார்த்துடலையே...?"

"இல்ல..."



"சரி... மொதல்ல கிணத்துக்கு போய் குளிச்சிட்டு வாங்க... நாளைக்கு காலையில முதல் காரியமா ஒலவக்கோட்டுக்கு போய் தங்கத்தை அட்மிட் பண்ணின நர்சிங்ஹோமுக்கு போய் ராஜன் சொன்னதெல்லாம் உண்மையான்னு கேட்டுட்டு வாங்க..."

"மீரா முழிச்சிட்டாளா...?"

"நான் வீட்டுக்கு வரும்போதே முழிச்சிட்டுதான் இருந்தா... எல்லா விபரத்தையும் அவகிட்டேயும் சொல்லிட்டேன். அழுதுட்டு படுத்திருக்கா..."

அவசரத்தில் செய்துவிட்ட ராஜனின் கொலைக்காக மனம் கனக்க வருத்தப்பட்டுக் கொண்டே கிணற்றடியை நோக்கிப் போனார் பத்ராச்சலம்.

★★★

இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணனும், சப்-இன்ஸ்பெக்டர் அவினாஷும் பாலக்காடு வந்து சேர்ந்திருந்தார்கள். பாலக்காடு ஹாஸ்பிடலின் மார்ச்சுவரியில் இன்ஸ்பெக்டர் குஞ்சுண்ணி நாயர் தகர டேபிளின் மேல் கிடந்த ராஜனின் துண்டு துண்டான உடம்பைக் காட்டினார்.

"ஆள் யார்ங்கிறதை கண்டு பிடிச்சிட்டீங்களா மிஸ்டர் நாயர்...?"

நவநீதகிருஷ்ணன் கேட்க, நாயர் தலையாட்டினார்.

"நாட் யெட்... முகத்தை ஆயுதத்தாலே கொத்தி அடையாளம் தெரியாதபடிக்கு மர்டர் பண்ணியிருக்காங்க..."

"போஸ்ட்மார்ட்டம் பண்ணின டாக்டர் என்ன சொல்றார்...?"

"இருபத்தைந்து வயதுக்கு உட்பட்ட ஒரு வாலிபனோட உடம்பு இது... சம்பவம் நடந்து கிட்டத்தட்ட நாலைஞ்சு நாள்தான் ஆகியிருக்கணும்ன்னு சொல்றார். பாலக்காடு வேகன் மூலமா கோயமுத்தூர்க்கு வந்த மீன் கூடையில கிடைச்ச கையும் அந்த பாடிக்கு சொந்தமானதுதான்னு சொல்றார்..."

‘‘அப்போ... மர்டர் இதே ஊர்லதான் நடந்திருக்கு...’’

‘‘ஆமா...’’

‘‘எந்த யூத்தாவது காணாமல் போனதா கம்ப்ளெண்ட் வந்திருக்கா...?’’

‘‘இதுவரைக்கும் வரலை....’’

‘‘காலேஜ் ஹாஸ்டல்ல தங்கியிருக்கிற எந்த ஸ்டூடண்டாவது காணாமல் போனதா தகவல் வந்ததா...?’’

‘‘நோ...’’

‘‘ஓலவக்கோடு போலீஸ் ஸ்டேஷன்ல விசாரிச்சு பார்த்தீங்களா...?’’

‘‘விசாரிச்சோம். அந்த மாதிரியான கம்ப்ளைண்ட்ஸ் எதுவுமே வரலைன்னு சொல்லிட்டாங்க....’’

‘‘பின்னே யார் இந்த இளைஞன்?’’ நவநீதகிருஷ்ணன் தாடையைத் தடவிக்

கொண்டே மார்ச்சுவரியினின்றும் வெளியே வர–

வாசலில் ஒரு கான்ஸ்டபிள் பதற்றமாய் எதிர்ப்பட்டார்.

## 20

கான்ஸ்டபிளின் ‘ஸார்’ என்ற குரலைக் கேட்டதும் இன்ஸ்பெக்டர் குஞ்சுண்ணி நாயர் திரும்பினார்.

‘‘என்ன ஸார்?’’

‘‘நாகசாமி உங்களைப் பார்க்கிறதுக்காக வந்து வெளியே காத்திருட்டிருக்கார் ஸார்...’’

‘‘எந்த நாகசாமி?’’

‘‘கோயமுத்தூர் மெயின் ரோட்ல இரும்புக்கடை வெச்சிருக்காரே அவர்தான் ஸார்...’’

‘‘எதுக்காக வந்திருக்கார்?’’



‘‘அவரோட பையன் ராஜனை நாலு நாளா காணோமாம். ஸ்டேஷனுக்கு ரிப்போர்ட் பண்றதுக்காக போயிருக்கார். சப்–இன்ஸ்பெக்டர் இங்கே அனுப்பியிருக்கார்...’’

‘‘பையனை காணோமா...? அவரை மொதல்ல வரச் சொல்லய்யா...’’

நிமிஷ நேரத்திற்குப் பின் நாகசாமி இருண்ட முகத்தோடு வந்தார். கொஞ்சம் குள்ளமான உருவம். தொப்பை போட்ட உடம்பு.

‘‘வாங்க நாகசாமி... பையனைக் காணோம்ன்னு ரிப்போர்ட் குடுக்க வந்தீங்களா...’’

‘‘ஆமா... ஸார்...’’

‘‘உங்க பையனை எப்பயிருந்து காணோம்...?’’

‘‘நாலு நாளா...’’

‘‘நாலு நாளா காணோம்ன்னுட்டு இப்ப வந்து சொல்றீங்க...?’’

‘‘அவன் கண்ணனூர்ல இருக்கிற மாமா வீட்டுக்கு போறதா நாலு நாளைக்கு முன்னாடி என்கிட்ட சொல்லியிருந்தான். அப்படி ஏதாவது போயிருக்க லாமோன்னு நினைச்சுட்டேன் ஸார்...’’

‘‘சரி இப்ப மாத்திரம் எப்படி வந்து கம்ப்ளைண்ட் பண்றீங்க...?’’

‘‘ராஜன் கண்ணனூர்ல இல்லைன்னு அவனோட மாமா போன் பண்ணியிருந்தார் ஸார். அதான் கம்ப்ளைண்ட் குடுக்கிறதுக்காக போலீஸ் ஸ்டேஷன் போனேன். மார்ச்சுவரியில இருக்கிற பாடியை பார்த்துட்டு வரச் சொல்லி சப்–இன்ஸ்பெக்டர்தான் சொன்னார்...’’ சொல்லும்போதே நாகசாமியின் குரல் தழுதழுத்தது.

‘‘வாங்க... வந்து பாருங்க...’’

இன்ஸ்பெக்டர் குஞ்சுண்ணி நாயர் அவரை உள்ளே கூட்டிக் கொண்டு போனார். தகர மேஜையின் மேல் நான்கு துண்டுகளாய் கிடந்த உடம்பைக் காட்டினார். இருண்டு போன முகத்தோடு உடம்பின்

துண்டுகளையே பார்த்துக் கொண்டிருந்த நாகசாமி கொஞ்சம் கொஞ்சமாய் தளர்ந்தார். கண்களில் நீர் பளபளப்பாய் மின்னியது.

''என்ன... அடையாளம் தெரியுதுங்களா...?''

''தெரியுது... ஸார்... என் பையன்.... ராஜன்தான்'' சொன்னவர் துக்கம் தாளாமல் மேல் துண்டால் வாயைப் பொத்திக் கொண்டார்.

★★★

இன்னத்திற்கு முட்டுக் கொடுத்து வாசற்படியில் கவலையாய் உட்கார்ந்திருக்கும் பத்ராச்சலத்தை நெருங்கினாள் மங்களம்.

''என்னங்க... அப்படியே உட்கார்ந்திட்டிருந்தா எப்படிங்க...? ராஜன் கூட ஒலவக்கோட்டிற்கு போன தங்கம் என்ன ஆனாள்ன்னு தெரியலையே... அந்த டாக்டர் ஞானசௌந்தரி நர்சிங் ஹோமுக்காவது போய் விசாரிச்சுட்டு வரலாமே....?''

''எனக்கு உடம்பு பூராவும் வெடவெடன்னு வருது மங்களம்... செத்தது ராஜன்தான்னு போலீஸுக்கும் ஊர்க்கும் தீர்மானமா தெரிஞ்சுடுச்சு.... நான் வெளியே போனா என்னையும் அறியாம நான் உண்மையைச் சொல்லிடுவேன்..''

''அப்ப நீங்க வீட்ல இருங்க... நான் போய்ட்டு வர்றேன்...'' மங்களம் புறப்பட ஆயத்தமாக புத்ராச்சலம் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்தார்.

''நானே போய்ட்டு வந்துடேறன்...''

★★★

அடுத்த முப்பதாவது நிமிஷம்...

டாக்டர் ஞானசௌந்தரியின் ஹாஸ்பிடலில் இருந்தார்.

வாஷ்பேஸினில் கையைக் கழுவி டவலால் துடைத்துக் கொண்டு நாற்காலிக்குத் திரும்பிய டாக்டரம்மாள் பத்ராச்சலத்தைப் பார்த்ததும் ''யாரு...'' என்று கேட்டாள்.

''நான் பாலக்காட்டிலிருந்து வர்றேன்...''



''சொல்லுங்க...''

''எம் பொண்ணு தங்கம் நாலைஞ்சு நாளைக்கு முன்னாடியே உங்ககிட்டே கருக்கலைப்புக்காக வந்திருக்கா... அதைப்பத்தி உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்...''

டாக்டரம்மாள் ஜாக்கிரதையானாள். தங்கம் என்கிற பெயரைக் கேட்டதும் முகம் குபீரென்று ஒரு கோட்டிங் வியர்வையை வெளியிட, டவலால் முகத்தை ஒற்றிக் கொண்டாள். பயத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கேட்டாள்.

''தங்கமா...?''

''ஆமா டாக்டர்... அவளும், ராஜன் என்கிற ஒரு பையனும் வந்திருக்காங்க... அந்த பையனே என்கிட்டே சொன்னான்...''

ராஜன் விஷயத்தை சொல்லியிருக்கிறான் என்று தெரிந்து, இனிமேல் தங்கத்தை தெரியாது என்று சொல்ல முடியாது என்பதை புரிந்து கொண்ட டாக்டரம்மாள் தலையாட்டினாள்.

''ஆமா... வந்திருந்தாங்க. நான் கேட்ட பீஸ் தரலை. அதனால அந்தப் பொண்ணுக்கு நான் கருக்கலைப்பு செய்யலை...''

''எம் பொண்ணு இப்போ எங்கே டாக்டர்...?''

''என்னைக் கேட்டா? கூட வந்த ஆள் அவளை விட்டுட்டு பணம் கொண்டுட்டு வர்றேன்னு போனான். அவன் வெளியே போன நேரத்துல உங்க பொண்ணுக்கு நான் புத்திமதி சொன்னேன். இப்படி கழுத்தல தாலி விழறதுக்கு முன்னாடியே வயித்தை ரொப்பிக்கிட்டியே... உங்க அம்மா அப்பாவுக்கு தெரிஞ்சா எவ்வளவு கேவலம்ன்னு நான் கேட்டேன். உடனே உங்க பொண்ணுக்கு கோபம் வந்திடுச்சு... இந்த ஊர்ல நீ ஒருத்திதான் டாக்டரா...? நான் வேற டாக்டர்கிட்டே போய் சுத்தம் பண்ணிக்கிறேன்னு சொல்லிட்டு கிளம்பிட்டா... உன்னைக் கூட்டிட்டு வந்த ஆள் வந்துரட்டும்ன்னு எவ்வளவோ தூரம் சொல்லிப்

பார்த்தேன்... அவ கேட்கலை... 'விர்'ன்னு வெளியே போயிட்டா...''

''அவ இந்த நாலு நாளா வீட்டுக்கு வரலை டாக்டர்...''

''அதுக்கு நான் என்ன பண்ணட்டும்...? போலீஸ்ல போய் கம்ப்ளைண்ட் கொடுங்க...''

''டாக்டர், அவ இந்த ஹாஸ்பிடலை விட்டு வெளியே போகும்போது உங்ககிட்டே எங்கே போறேன்னு சொல்லிட்டு போகலையா...?''

''எம்மேலே கோபிச்சுகிட்டு போறவ... அதை யெல்லாம் சொல்லிட்டிருப்பாளா என்ன?''

''டாக்டர் அந்தப் பையன் ராஜன் மறுபடியும் இங்கே உங்கிட்டே வந்தானா...?''

''வந்தான். அவனும் உங்களை மாதிரிதான் தங்கம் வீட்டுக்கு வரலைன்னு கேட்டுகிட்டு வந்தான்...''

பத்ராச்சலம் தளர்ந்து போய் எழுந்தார். கைளைக் கூப்பினார். ''நான் வர்றேன் டாக்டர்...''

''பொண்ணு நாலு நாளா வீட்டுக்கு வரலைன்னு சொல்றீங்க... போலீஸ்ல போய் கம்ப்ளைண்ட் பண்ணுவீங்களா, அதை விட்டுட்டு என்கிட்டே வந்து விசாரணை பண்ணிக்கிட்டிருந்தா... என்னங்க அர்த்தம்...?''

டாக்டரம்மாள் பொரிந்து கொண்டிருக்கும் போதே பத்ராச்சலம் ஹாஸ்பிடலின் காம்பௌண்ட் கேட்டைத் தாண்டிக் கொண்டிருந்தார்.

★★★

இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன், சப்-இன்ஸ்பெக்டர் அவினாஷ் இரண்டு பேரும் நாகசாமியின் வீட்டுக்குள் அந்த நிமிஷம் இருந்தார்கள்.

நாகசாமி சுவரோரமாய் நின்றபடி அழுது கொண்டிருக்க, அவினாஷ் மேஜை டிராயர்களைத் திறந்து பார்த்துக் கொண்டிருந்தார். நவநீதகிருஷ்ணன் நாகசாமியை நெருங்கினார்.



''ராஜனுக்கு விரோதிகள் யாருமே இருக்க முடியாதுன்னு சொல்றீங்க... விரோதம் இல்லாம இவ்வளவு கொடூரமா கொலை நடந்திருக்க வாய்ப்பே இல்லையே...?''

''இன்ஸ்பெக்டர்... என் மகன் ராஜன் ஒரு கோழை. அவனுக்கு தைரியமே போதாது. எந்த வம்பு சண்டைக்கும் போகமாட்டான். அவனுக்கு நிச்சயமா விரோதிகள் யாரும் இருக்க மாட்டாங்க...''

நவநீதகிருஷ்ணன் அடுத்த கேள்விக்காக வாயைத் திறந்தபோது அவினாஷ் வேகவேகமாய் அவரை நெருங்கினார்.

''ஸார்...''

திரும்பினார். ''என்ன அவினாஷ்...?''

''இந்த டயரியைப் பார்த்தீங்கள்...''

நவநீதகிருஷ்ணன் வாங்கிப் பார்த்தார். டயரியின் முதல் பக்கத்தில் அந்த கவிதை எழுதப்பட்டிருந்தது.

என் மடியையே
மலர்ப் பஞ்சாய்....
மாற்றி நீ
படுத்திருக்கையில்
நாம் பேசிய
காதல் மொழிகள்
நமது காதல்
சாம்ராஜ்யத்தின்
தேசிய கீதமாக
அறிவித்தோமே...!
நீ என் மனதில்
தங்கப் போகிறாய்
என்பதைத் தெரிந்து கொண்டுதானோ...
உன் பெற்றோர்
உனக்கு இந்த அழகான
பெயரிட்டார்கள்!

## 21

இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன் டயரியின் அடுத்த பக்கத்தைப் புரட்டினார். அங்கேயும் ஒரு நான்கு வரிக் கவிதை தெரிந்தது.

நேற்று நீ பூ கேட்டாய்
நீயே ஒரு நடமாடும்
மலர் கண்காட்சி
உனக்கு எதற்கு பூ...?

பக்கங்களை மறுபடியும் புரட்டினார். பெரும்பாலான பக்கங்களில் கவிதை வரிகள்தான். எழுத்துக்கள் முத்து முத்தாய் சரம் கோர்த்த மாதிரி தெரிந்தது. டயரி முழுவதையும் படித்து முடித்துவிட்டு நாகசாமியின் பக்கம் திரும்பினார். மெல்லிய குரலில் கேட்டார்.

''அந்தக் கவிதையில் இருக்கிற பொண்ணு யாரு...?''

''எனக்கு தெரியலை இன்ஸ்பெக்டர்...''

''உங்க பையனுக்கும் அந்தப் பொண்ணுக்கும் தொடர்பு இருந்திருக்கும் போலிருக்கு. அந்த காதல் விவகாரம் கூட கொலையில் முடிந்திருக்கலாம்...''

''அவன் அப்படியெல்லாம் தப்பான வழிக்கு போயிருக்க மாட்டான் இன்ஸ்பெக்டர்...''

''விசாரிச்சி பார்க்கணும். உங்க மகன்கிட்டே நெருங்கிப் பழகற ப்ரெண்ட்ஸ் யாருன்னு சொல்ல முடியுமா?''

''அவனுக்கு ப்ரெண்ட்ஸே கிடையாது இன்ஸ்பெக்டர்... என்னோட பிஸினெஸைப் பார்த்துக்கிட்ட நேரம் போக தென்னந்தோப்புலதான உட்கார்ந்திட்டிருப்பான்...''

''ஊரைச் சுற்றிலும் நிறைய தென்னந்தோப்பு இருக்கு... எந்த தோப்புக்கு போவான் உங்க மகன்...?''



''கிழக்காலே இருக்கிற நாயர் தோப்புக்குத்தான்...''

''அந்த தோப்புக்கு எப்படி போகணும்...?''

நாகசாமி வழி சொன்னார்.

★★★

மங்களம் புலம்பிக் கொண்டிருந்தாள்.

''பாவிப் பொண்ணு... டாக்டரம்மாகிட்டே கோபிச்சுகிட்டு எங்கே போனாளோ தெரியலையே...? மீரா கல்யாணம் இன்னும் அஞ்சு நாள்ல வரப்போகுது. கல்யாண நேரத்துல இவ இல்லேன்னா சொந்த ஜனம் பூராவும் எங்கேன்னு நச்சரிச்சிடுவாங்களே...''

பத்ராச்சலம் தன் மனைவியிடம் திரும்பினார். ''இதோ பார் மங்களம்... அந்த ஓடுகாலியைப் பத்தி இனி புலம்பி ஒரு பிரயோஜனமும் இல்லை. அவ எக்கேடா கெட்டுத் தொலையட்டும்...''

''அவளைப் பத்தி கேக்கிறவங்களுக்கு என்ன பதில் சொல்லப் போறீங்க...?''

''வடக்கே டெல்லிக்கு பக்கத்துல ஒரு நல்ல வேலைக்கு ஆர்டர் வந்தது. உடனடியா புறப்பட வேண்டிய சூழ்நிலை. யார்கிட்டேயும் சொல்லிக்க நேரமில்லை. அக்காவோட கல்யாணத்தைக்கூட பார்க்க முடியாத நிலைமையில கிளம்பிப் போயிட்டான்னு சொல்லு. ட்ரெய்னிங் பீரியட் ரெண்டு வருஷம் முடிஞ்சுதான் அவ வருவான்னு சொல்லு...''

''மனசு ஒப்பி அப்படி எப்படிங்க சொல்ல முடியும்?''

''பின்னே என்ன சொல்லப் போறே...? எம்மக ஒருத்தனுக்கு மடியை விரிச்சு வயித்துல வாங்கிகிட்டு அதை கலைக்க முடியாம ஊரைவிட்டு ஓடிப் போயிட்டான்னு சொல்லப் போறியா...?''

மங்களம் ஒன்றும் பேசாமல் மௌனிக்க பத்ராச்சலம் தொடர்ந்தார். ''எல்லாமே உன்னால வந்ததுதாண்டி... பொண்ணை அடக்க ஒடுக்கமா வளர்த்திருந்தா... இந்த நிலைமை நமக்கு வந்திருக்குமா...?''

''அப்பா...'' வாசலின் முற்றத்தில் நின்றிருந்த மீரா குரல் கொடுக்க திரும்பினார் பத்ராச்சலம்.

''என்னம்மா...?''

''நம்ம வீட்டைப் பார்த்துகிட்டே நாயர் தோப்புக்கு மத்தியில போலீஸ் வர்றாங்க....''

''போலீஸா...?'' பத்ராச்சலம் திடுக்கிட்டுப் போய் தோப்பின் மையத்தைப் பார்த்தார். இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணனும், சப்–இன்ஸ்பெக்டர் அவினாஷும் பார்வைக்குப் பட்டார்கள்.

மங்களம் பதறினாள்.

''என்னங்க... போலீஸ் நம்ம வீட்டுக்கு வர்றாங்க...''

''நீ கத்தாதே...! மீராவும் நீயும் உள்ளே போயிருங்க... நான் அவங்ககிட்டே பேசிக்கிறேன்...'' பத்ராச்சலம் சொன்னதும் இருவரும் வீட்டுக்குள் மறைந்தார்கள்.

பத்ராச்சலம் அவர்களையே பார்த்தபடி காத்திருந்தார். நவநீதகிருஷ்ணனும், அவினாஷும் தொப்பிகளை கழற்றியபடி அருகே நெருங்கியதும் ஒரு கும்பிடு போட்டார்.

நவநீதகிருஷ்ணன் கேட்டார்.

''அதுதானே நாயர் தோப்பு...?''

''ஆமா... ஸார்...''

''நீங்க யாரு...?''

''எம்பேர் பத்ராச்சலம் ஸார்...''

''எத்தனை வருஷமா இங்கே குடியிருக்கீங்க...?''

''பதினைஞ்சு வருஷமா...''

''உங்களுக்கு என்ன வேலை...''

''நாயர் தோப்பை குத்தகைக்கு எடுத்து, கவனிச்சுட்டிருக்கேன். ஏன் ஸார் என்ன விஷயம்...? நாயர் ஏதாவது புகார் பண்ணினாரா...?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. இந்த ஊரைச் சேர்ந்த ராஜன்ங்கிற ஒரு பையனை யாரோ கொலை



பண்ணிட்டாங்க. அந்த விபரம் உங்களுக்கு தெரிஞ்சிருக்கலாம்...''

''தெரியும் ஸார்...''

''அந்தப் பையனை உங்களுக்குப் பழக்க மிருக்கா...?''

''பழக்கமில்லை, பார்த்திருக்கேன்...''

''இந்த தோப்புக்கு அந்த ராஜன் வருவாரா...?''

''எப்பவாவது வருவான். கையில புத்தகத்தை வெச்சுகிட்டு பார்த்திட்டிருப்பான்...''

''பேசியிருக்கீங்களா...?''

''இ...இல்லை... பார்த்தா சிரிப்பான். நானும் சிரிச்சுகிட்டு போயிடுவேன். ரொம்ப நல்ல பையன்...'' சொல்லிக்கொண்டே மேல் துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டார் பத்ராச்சலம்.

''பத்ராச்சலம், நாங்க இப்போ கேக்கக்கூடிய ஒரு கேள்விக்கு யோசிச்சு நிதானமா பதில் சொல்லுங்க...''

''கேளுங்க ஸார்...''

''இந்த இடத்துக்கு ராஜன் எப்பவாவது எந்த சமயத்திலாவது ஒரு பொண்ணோட வந்துண்டா...?''

''பொண்ணா...?''

''எஸ்... சின்ன வயசு பொண்ணு. ஐ மீன் அவன் காதலிச்ச பொண்ணு...''

பத்ராச்சலம் உஷாரானார். யோசிப்பது போல பாவ்லா செய்துவிட்டு சொன்னார். ''ஒரு பொண்ணோடு அந்த பையனை நான் பார்த்ததில்லை ஸார்...''

நவநீதகிருஷ்ணன் பார்வை பத்ராச்சலத்தின் வீட்டுப் பக்கம் தாவியது.

''உங்க வீட்ல யார் யார் இருக்காங்க...?''

''நான்... என்னோட மனைவி மங்களம், மகள் மீரா...''

''அவங்க உள்ளே இருந்தா கூப்பிடுங்க...''

''எதுக்கு இன்ஸ்பெக்டர்...?''

''கூப்பிடுங்க. அவங்ககிட்டேயும் கேட்டுப் பார்க்கலாம். நீங்க ஆம்பிளை, வெளியே சுத்தற ஆள். லேடீஸ் வீட்லதானே இருப்பாங்க. அவங்ககிட்டே கேட்டுப் பார்க்கலாம்...''

பத்ராச்சலம் உள்ளுக்குள் வெலவெலத்துப் போனாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் திரும்பிப் பார்த்து குரல் கொடுத்தார்.

''மங்களம்... மீரா...''

குரல் கேட்டு அவர்கள் வெளியே வந்து கொண்டிருக்கும்போதே நவநீதகிருஷ்ணன் கேட்டார்.

''உங்களுக்கு ஒரே மகள்தானா...?''

''இல்ல ஸார்... இன்னொரு பொண்ணும் இருக்கா...''

''காணோமே...?''

''அவ வடநாட்டுப் பக்கம் வேலையில இருக்கா...'' கையை பிசைந்து கொண்டு வேர்த்த முகமாய் வந்து நின்ற மங்களத்தையும், ஒரு அவஸ்தையை முகத்தில் தேக்கிக் கொண்டு வந்த மீராவையும் நவநீத கிருஷ்ணன் ஏறிட்டார். பத்ராச்சலத்திடம் கேட்ட அதே கேள்வியை இருவரிடமும் கேட்டார்.

மங்களம் தவிப்பாய் கணவரைப் பார்த்தாள்.

''அவரை ஏம்மா பார்க்கறீங்க... நாங்க கேட்ட கேள்விக்கு பதில் சொல்லுங்க... அந்த ராஜன் எந்தப் பொண்ணையாவது இங்கே கூட்டிட்டு வந்திருக் காரா...?''

''இ... இ... இல்லீங்க... நான் பார்த்ததில்லீங்க...''

''ஏம்மா நீ பார்த்திருக்கியா?'' மீராவைப் பார்த்து கேட்டார் அவினாஷ். மீரா அவசர அவசரமாய் எச்சிலை விழுங்கிவிட்டு தலையாட்டினாள்.

''நானும் பார்க்கலை...''

''அந்த ராஜன் இந்த தோப்புக்கு வந்தா ரொம்ப நேரம் இருப்பாரா?''



''மத்தியானம் ரெண்டு மணிக்கு வருவான். நாலு மணிக்கெல்லாம் போயிடுவான்...'' மங்களம் சொல்லிக் கொண்டிருந்த அதே விநாடி –

அவளுடைய பார்வை தோப்புக்குள் போக –

தன் கணவரின் நண்பர் கோபலாசாமி வீட்டை நோக்கி வருவதைப் பார்த்து இருதயத்தின் மையத்தில் அதிர்ந்தாள்.

கோபாலசாமி வாயில் புகையும் சுருட்டோடு நிதானமான நடையில் வந்து கொண்டிருந்தார்.

## 22

தோப்பில் வந்து கொண்டிருந்த கோபால சாமியைப் பார்த்ததும் பத்ராச்சலத்தின் உடம்புக்குள் ஒருவித நடுக்கம் பரவியது. 'இவர் எதற்காக இந்த நேரத்தில் இங்கே வருகிறார்? வருகிறவர் எதையும் உளறி வைக்காமல் இருக்க வேண்டுமே...?'

பத்ராச்சலத்தின் பார்வை தோப்புக்கு மத்தியில் தாவியதும் இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன் பார்வையும் அங்கே தாவியது.

''அங்கே வர்றது யாரு...?'

''என்னோட ப்ரெண்ட்...''

''பேரு...?''

''கோபாலசாமி... கள்ளு குடிக்கிறதுக்காக தென்னந்தோப்புக்கு வருவார். சில சமயங்களில் கடன் கேக்கவும் வருவாரு...''

கேபாலசாமி இப்போது அவர்களுக்கு அருகாமையில் வந்திருந்தார். போலீஸ் யூனிபார்மை பார்த்ததும் கண்கள் மிரண்டு பம்மினார். பத்ராச்சலத்தை நெருங்கிக் கொண்டே கேட்டார்.

''என்ன பத்ராச்சலம்... போலீஸுக்கு கம்ப்ளைண்ட் கொடுத்துட்டியா...?'' கோபாலசாமி கேட்ட கேள்வியில்

இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன் குபுக்கென்று அவர் பக்கம் திரும்பினார்.

''போலீஸ் கம்ப்ளைண்டா... என்ன சொல்றீங்க...?''

''அ...அ...அது வந்து ஸார்... அவரோட பொண்ணு தங்கம் காணாமே போன விசயமா விசாரணை பண்ணத்தானே வந்திருக்கீங்க...?''

''பொண்ணு காணாமே போனாளா...? பத்ராச்சலம்! உங்க ப்ரெண்ட் என்ன சொல்றார்...?''

''அ...அது வந்து ஸார்... என்னோட ரெண்டாவது பொண்ணு தங்கம் கல்யாணப் பத்திரிகை தர்றதுக்காக வெளியூர் போனவ சொல்லாமே கொள்ளாமே அப்படியே கொச்சியில் இருக்கிற என்னோட அக்கா வீட்டுக்கு போயிட்டா... நாங்க இங்கே காணோம் காணோம்ன்னு அவளைத் தேடிக்கிட்டிருக்கோம்... அதைச் சொல்றார்...''

''ஐ ஸீ... உங்க நண்பருக்கு அந்த ராஜனைப் பத்தி ஏதாவது தெரியுமா?''

''கே...கேட்டுப் பாருங்க ஸார்...''

''கோபாலசாமி....''

''ஸார்...''

''அந்த ராஜன் கொலை சம்பந்தமா உங்களுக்கு ஏதாவது விஷயம் தெரியுமா...?''

''தெரியாது ஸார்...''

''ராஜன்கிட்டே பேசியிருக்கீங்களா...?''

''ஊஹூம்...''

''பக்கத்துல இருக்கிற தோப்பு யாரோடது...?''

''சண்முகம் நாயர்க்கு சொந்தமானது... இந்நேரத்துக்கு போனீங்கன்னா நாயர் தோப்புலதான் இருப்பார். அவர்கிட்டே வேணும்ன்னா விசாரிச்சு பாருங்களேன்...'' கோபாலசாமி சொல்ல, நவநீத கிருஷ்ணனும், அவினாஷும் பக்கத்து தோப்பை நோக்கி நகர்ந்தார்கள். அவர்களின் தலைகள் மறையும் வரை காத்திருந்த கோபாலசாமி பத்ராச்சலத்தின் பக்கம் திரும்பினார்.



''நமக்கு விஷயம் தெரிஞ்சிருக்கோ... தெரியலையோ... போலீஸ்காரங்ககிட்டே மட்டும் வாயைக் குடுத்து மாட்டிக்கக் கூடாது... ராஜன்கிட்டே பேசியிருக்கீங்களான்னு இன்ஸ்பெக்டர் கேட்டார். நான் 'ஆமா'ன்னு தலையாட்டியிருந்தா என்ன பேசினீங்கன்னு கேப்பார். கடைசியா எப்போ பார்த்தீங்கன்னு கேப்பார். நமக்கு எதுக்கு இந்த வேண்டாத வேலை? இறக்கின கள்ளா இருந்தா ஒரு சொம்பு குடு... குடிச்சிட்டு கிளம்பறேன்...''

பத்ராசலம் ஒரு நிம்மதிப் பெருமூச்சை விட்டுக் கொண்டு வீட்டுக்குள் போக, கோபாலசாமி மங்களத்திடம் கேட்டுக் கொண்டிருந்தார்.

''அப்போ.. ரெண்டாவது பொண்ணு தங்கம் கொச்சியிலதான் இருக்காளா...?''

''ஆமா...''

''தகவல் சொன்னது யாரு...''

''அவரோட அக்காதான். போன் போட்டிருந் தாங்க...''

''தங்கத்துக்கு என்ன கோபமாம்...?''

''கல்யாணத்துக்கு பட்டுப்புடவை எடுக்கலை யாம்...''

''இதுக்கெல்லாம் கோபப்படுவாங்களா... பைத்தியக்காரப் பொண்ணு... அது ஆசைப்பட்டபடி பட்டுப்புடவை எடுத்து குடுத்துடறதுதானே...?''

பத்ராசலம் கள்ளுச் சொம்போடு உள்ளேயிருந்து வந்தார்.

''கோபாலசாமி...''

''ம்...''

''உன்கிட்ட மட்டும் ஒரு உண்மையைச் சொல்றேன்... கேட்டுக்க...''

''உண்மையா... என்ன உண்மை...?''

''தங்கத்துக்கு டெல்லிக்குப் பக்கத்துல ஒரு நல்ல வேலை கிடைச்சிருக்கு... அந்த வேலையில ஜாய்ண்ட் பண்ணத்தான் அவ போயிருக்கா...''

''இதை வெளியில சொன்னா என்ன...?''

''இப்போதைக்கு வேண்டாம். மெதுவா, சொல்லிக்கலாம். இந்தா, மொதல்ல இந்த கள்ளைக் குடி...''

கோபால்சாமியின் கையில் கள் நிறைந்த அலுமினிய சொம்பை திணித்தார் பத்ராச்சலம்.

★★★

டாக்டரம்மாள் ஞானசௌந்தரி தன் எதிரே வந்து நின்ற கிருஷ்ணனையும் வேலுவையும் நிமிர்ந்து பார்த்தாள்.

''என்ன கிருஷ்ணன்...?''

''அம்மா.. நான் எவ்வளவு சொன்னாலும் வேலு கேட்க மாட்டேங்கிறான்...''

''என்ன கேட்க மாட்டேங்கிறான்....?''

''உங்ககிட்டே மறுபடியும் கேக்கக் கூடாதுன்னு நான் சொல்றேன்... ஆனா அவன் கேக்க மாட்டேங்கிறான்...'' கிருஷ்ணன் வேண்டுமென்றே அப்பாவித்தனமாய் முகத்தை வைத்துக் கொண்டு பேச, டாக்டரம்மாள் எரிச்சலோடு நிமிர்ந்தாள்.

''கிருஷ்ணன், நீயும் உன்னோட ப்ரெண்டும் இப்படி அடிக்கடி பணம் கேக்கறது சரியில்லை... ஏற்கெனவே நிறைய குடுத்திட்டேன்...''

''இப்ப ஒருவாட்டி மட்டும் குடுத்துடுங்க... பணமே அவன் கேக்காதபடி நான் பார்த்துக்கிறேன்...''

''எ....எவ்வளவு வேணும்?''

கிருஷ்ணன் வேலுவின் பக்கம் திரும்பினான். ''என்ன வேலு, எவ்வளவு கேக்கலாம்....?''

''சில்லரைத்தனமா கேட்டுடாதே... கொஞ்சம் லம்ப்பாவே கேளு... அடிக்கடி அம்மாவை தொந்தரவு பண்ணிட்டிருக்க வேண்டாம்.''

''அய்யாயிரம் கேட்கட்டுமா...?''

''பிசாத்து! பத்தாயிரமா கேளு. ஆளுக்கு அய்யாயிரம் கூட இல்லேன்னா எப்படி?''



''இதோ பார் வேலு... இந்த பத்தாயிரத்தோட நிப்பாட்டிக்கணும். அப்புறமும் பணம் வேணும்ன்னு வந்து தொந்தரவு பண்ணக் கூடாது.''

''தொந்தரவு பண்ணமாட்டேன் கிருஷ்ணா...''

கிருஷ்ணன் டாக்டரம்மாவிடம் திரும்பினான். ''அம்மா, ஒரு பத்தாயிரம் ரூபா குடுத்துடுங்க போதும்.. இனிமே அவன் கேட்க மாட்டான்...''

''என்ன கிருஷ்ணன், விளையாடறியா?''

''ஏம்மா...?''

''பத்தாயிரமெல்லாம் என்னால கொடுக்க முடியாது...''

''சரி, எவ்வளவுதான் கொடுப்பீங்க?''

''ஆயிரம் ரூபா...''

''இத பார்றா...'' ப்ர்ர்ர்ரென்னு வாய்விட்டு சிரித்தார்கள் கிருஷ்ணனும், வேலுவும். ''ஆயிரம் ரூபாயை வாங்கிட்டு போய் நாங்க என்னம்மா பண்ண முடியும்? நாங்க கேட்டபடி பத்தாயிரம் ரூபாயைக் குடுத்துடுங்க. இனிமே இந்தப் பக்கமே வர மாட்டோம்...''

''என்னால குடுக்க முடியாது...''

வேலு தன் தாடையைத் தடவிக் கொண்டு முன்னால் வந்தான். ''டாக்டரம்மா... நீங்க நிலைமையை புரிஞ்சுகிட்டுதான் பேசறீங்களா...? குப்பை மேட்டுல தூங்கற அந்த பொண்ணை சுத்தமா மறந்துட்டீங்களா...? போலீசுக்கு விஷயம் போனா என்னாகும் தெரியுமா...?''

''போலீசுக்குத்தானே போவீங்க... போனீங்க...''

''உணர்ச்சி வசப்பட்டு ஏதும் பேசிடாதீங்கம்மா... போலீஸ்ல சொன்னா அவங்க பதக்கத்தோட வரமாட்டாங்க. கையில காப்பை எடுத்துட்டு வருவாங்க....''

டாக்டரம்மா நாற்காலியை பின்னுக்குத் தள்ளிக் கொண்டு எழுந்தாள். ''இதோ பார் கிருஷ்ணன். நான் அந்தப் பொண்ணை கத்தியாலே குத்தியோ,

துப்பாக்கியாலே சுட்டோ கொலை செய்யலை. ஓவர் ப்ளீடிங் ஏற்பட்டு அவளாவே செத்துப் போனா.... செத்துப் போனதை நான் வெளியே சொல்லாமே விட்டது தப்புத்தான்... ஆனா பாடியை நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து டிஸ்போஸ் பண்ணியிருக்கீங்க. கேஸ் கோர்ட்டுக்குப் போனா, எனக்கு கிடைக்கிற தண்டனையைக் காட்டிலும் உங்க ரெண்டு பேர்க்கும்தான் அதிக தண்டனை கிடைக்கும்...''

வேலுவும் கிருஷ்ணனும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்ள். கிருஷ்ணன் குரலில் குழைவை வரவழைத்துக் கொண்டான்.

''சரி... ஒரு அஞ்சாயிரம் ரூபா குடுங்கம்மா...''

''மாட்டேன்... ஆயிரம் ரூபா தர்றேன். அதை வாங்கிகிட்டு இந்தப் பக்கமே நீங்க வரக்கூடாது... சம்மதமா...?''

''ரெண்டாயிரம் ரூபா குடுங்கம்மா...''

''ஆயிரம் ரூபாதான். இஷ்டமிருந்தா வாங்கிக்க. இல்லேன்னா. உன்னோட இஷ்டப்படி போலீஸ்ல போய் சொல்லிக்க... நான் ஒரு நல்ல வக்கீலை வெச்சு கோர்ட்ல அந்த கேஸைப் பார்த்துக்கிறேன்...'' டாக்டரம்மாள் கோபமாய் சொல்ல –

''சரி குடுங்கம்மா...''

இருவரும் இறங்கி வந்தார்கள்.

## 23



கிருஷ்ணனும் வேலுவும் டாக்டரம்மாள் கொடுத்த ஆயிரம் ரூபாயை வாங்கிக் கொண்டு ஆஸ்பத்திரி யினின்றும் வெளியே வந்தார்கள். வேலு ''உச்'' கொட்டினான்.

''கிருஷ்ணா...''

''ம்...''



''டாக்டரம்மா... இனிமே நம்ம மிரட்டலுக்கு பயப்பட மாட்டா போலிருக்கு... என்ன செய்யலாம்?''

''இன்னிக்கு விட்டுரலாம் வேலு. கையில ஆயிரம் ரூபா கொடுத்திருக்கா. செலவு பண்ணுவோம். பணம் தீர்ந்ததும் அம்மாகிட்டே போய் நிப்போம்...''

''போலீசுக்கு போனா பரவாயில்லைன்னு சொல்றாளே...?''

''அதெல்லாம் சும்மா.. நாம பயப்படற மாதிரி நடிச்சே காரியத்தை சாதிச்சிடுவோம்...''

''சரி, இப்போ எங்கே போலாம்?''

''கோயமுத்தூர் போய் ரெண்டு நாள் ஜாலியா இருந்துட்டு வரலாம். என்னோட மச்சினன் வீடு அங்கேதான் இருக்கு. தங்கிக்கிடுவோம்...''

பேசிக்கொண்டே பொடி நடையில் நடந்து பஸ் ஸ்டாண்டுக்கு வந்தார்கள். கோயமுத்தூர் போகும் பஸ்ஸில் ஏராள கும்பல் தெரிய ஜனங்கள் இடம் பிடிக்க முண்டிக் கொண்டிருந்தார்கள்.

''என்ன கிருஷ்ணா... இந்த பஸ்ஸிலேயே போயிடலாமா...? இல்லை அடுத்த பஸ் வர்றவரைக்கும் காத்திட்டிருக்கலாமா?''

''எத்தனை பஸ் வந்தாலும் கூட்டம் இப்படித்தான் இருக்கும் வேலு.... இதிலேயே முண்டியடிச்சு ஏறு.''

சொல்லிக் கொண்டே கும்பலோடு கும்பலாய் கலந்தான் கிருஷ்ணன். வெகுசுலபமாய் ஜனங்களைப் பிளந்து கொண்டு புட்போர்ட்டில் காலை வைத்து உள்ளே போனார்கள். உள்ளே போகப் போகவே பின்பக்கமிருந்து அந்தக் குரல் கேட்டது.

''அய்யோ, எம் பணத்தைக் காணோமே?''

★★★

இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணனும், அவினாஷும் பக்கத்து தோப்பில் இருந்த சண்முகம் நாயரைப் பார்க்கப் போனபோத அவர் தோப்புக்கு நடுவே இருந்த குடிசைக்கு வெளியே முதுகுத் துண்டை போர்த்திக் கொண்டு நின்றிருந்தார். காக்கி யூனிபார்ம்களை பார்த்ததும் நெற்றி சுருக்கினார்.

நவநீதகிருஷ்ணன் கேட்டார்.

''இங்கே சண்முகம் நாயர் யாரு?''

''நான்தான்...''

''உங்ககிட்டே ஒரு சின்ன விசாரணை...''

''மொதல்ல உட்காருங்க...'' குடிசைக்குப் பக்கத்தில் செங்குத்தாய் நிறுத்தியிருந்த கயிற்றுக் கட்டிலை எடுத்துப் போட்டார்.

இருவரும் உடகார்ந்தார்கள். சண்முகம் நாயர் கேட்டார்.

''என்ன விசாரணை?''

''ராஜனை உங்களுக்குத் தெரியுமா?'

''எந்த ராஜன்...?''

''மர்டரான ராஜன்... நாகசாமியோட சன்...''

''தெரியும்...''

''எப்படி தெரியும்?''

''அடிக்கடி எங்க தோப்புக்கு வருவான். கையில புஸ்தகத்தை வெச்சிட்டு படிச்சிட்டிருப்பான்...''

''அவன் மட்டுந்தான் தனியா வருவானா...?''

''ஆமா''

''அவன்கூட எந்தப் பொண்ணாவது பேசி நீங்க பார்த்திருக்கீங்களா?''

''பக்கத்து தோப்பு பத்ராச்சலத்தோட ரெண்டாவது மக தங்கம் அவன்கூட பேசினதை நான் பார்த்திருக் கேன்...''

''தங்கமா?''

''ஆமா இன்ஸ்பெக்டர்...''

''ரெண்டு பேரும் நெருங்கி பழகினாங்களா...?''

''எனக்குத் தெரியாது இன்ஸ்பெக்டர். அவங்க இரண்டு பேரும் பேசிக்கிட்டதை நாலைஞ்சு தடவை பார்த்திருக்கேன்...''

''பத்ராச்சலத்துக்கு எத்தனை பொண்ணு?''



''ரெண்டு பொண்ணு சார். அதுல பெரிய பொண்ணுக்கு இன்னும் நாலைஞ்சு நாள்லே கல்யாணமாகப் போகுது...''

''ரெண்டாவது பொண்ணு வடநாட்டுப் பக்கமா ஏதோ வேலைக்குப் போயிருக்கிறதா பத்ராச்சலம் சொன்னாரே...?''

''அதுபத்தி எனக்கு ஒண்ணும் தெரியாது ஸார்...''

''ராஜன் கூட நெருங்கிப் பழகின சிநேகிதர்கள் யாராவது உங்களுக்கு தெரியுமா...?''

''தெரியாது...''

''ராஜன் உங்ககூட பேசியிருக்கானா...?''

''ஊஹூம்... பார்த்தா மரியாதைக்கு சிரிச்சிகிட்டு போயிடுவான். அவ்வளவுதான். அவனோட அப்பா நாகசாமியை எனக்கு நல்லாத் தெரியும்...''

''பத்ராச்சலம் எப்படிப்பட்டவர்...?''

''கொஞ்சம் முன்கோபி. மற்றபடி நல்லவர்....''

''நீங்க குடுத்த தகவல்களுக்கு நன்றி...'' நவநீதகிருஷ்ணனும் அவினாஷும் எழுந்தார்கள்.

★★★

''எம் பணத்தைக் காணோம்....'' என்று குரல் கொடுத்தவர், பிளேடால் அறுபட்டு தொங்கிய தன் சட்டைப் பையைப் பார்த்து கத்திக் கொண்டிருக்க, கும்பலின் கவனம் பூராவும் அவர் பக்கம் திரும்பியது.

''எவ்வளவு பணம் வெச்சிருந்தே...?''

''ஆயிரம் ரூபா...''

''உம் பக்கத்துல யாரய்யா நின்னுட்டிருந் தாங்க...?''

''இவங்க ரெண்டு பேருந்தான்...'' தனக்குப் பின்னால் நின்றிருந்த கிருஷ்ணனையும் வேலுவையும் அந்த ஆசாமி காட்ட, கும்பலின் மொத்தப் பார்வையும் அவர்கள் மேல் பாய்ந்தது.

கிருஷ்ணனின் ஷேவ் செய்யப்படாத முகமும் வேலுவின் பரட்டைத் தலையும் கும்பலுக்கு சந்தேகத்தை ஊட்ட, நெருங்கியது.

''ஏய்யா... பணத்தை நீயா எடுத்தே...?''

''இ....இ...இல்லையே...''

''எடுத்தியான்னு கேட்டா, அவன் ஆமாம்ன்னு சொல்லுவானா... உடம்பைத் தடவிப் பாருங்கய்யா... எங்கேயாவது பதுக்கி வெச்சிருப்பான்...''

ஒருவர் கத்த,

மீசை வைத்திருந்த இன்னொரு முரட்டு ஆசாமி வேலுவை நெருங்கி அவனுடைய புஜத்தை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு சட்டைப் பைக்குள் கையை விட்டார். இடுப்பைத் தடவினார். கெட்டியாய் ஒரு முடிச்சு தட்டுப்பட்டது.

''என்ன இது?''

''...இ...இது என் பணம்....'' திமிற முயன்ற வேலுவை பளீரென்று அறைந்தான் மீசை ஆசாமி.

''உம் பணமா? எடு பார்க்கலாம்...''

வேஷ்டியின் மடிப்பிலிருந்து அந்த நூறு ரூபாய் தாள்கள் வெளிப்பட, பணத்தை பறிகொடுத்த ஆசாமி கத்தினான்.

''இது என் பணம்தான்... என் பணம்தான்...''

''ஏன்யா, பணத்தை பிக்பாக்கெட் அடிச்சிட்டு ஒன்னும் தெரியாத மாதிரி பின்னாடி நின்னுட்டிருக்கியா?'' மீசைக்கார ஆசாமி வேலுவின் கையிலிருந்த பணத்தை பிடுங்கி பணத்தை பறிகொடுத்தவனிடம் கொடுத்தான்.

கூட்டம் இரண்டு பேரையும் மொய்த்துக் கொண்டது.

''இவங்களையெல்லாம் அடிச்சு கொல்லணும்.'' ஒருவன் கத்திக்கொண்டே வேலுவின் இடுப்பை நோக்கி உதைக்க, இன்னொருவன் கிருஷ்ணனின் முகம் பிய்ந்து போகிற மாதிரி ஒரு அறை விட்டான். சர்ட்டும் வேஷ்டியும் நார் நாராய் கிழிபட்டது.

''அ...அது...எங்க பணமய்யா....'' கிருஷ்ணன் கத்த கத்த அவன் வாய் மேலேயே ஒன்று போட்டான் மீசைக்காரன்.



''ஆயிரம் ரூபாயை வெச்சிருக்கிற மூஞ்சியைப் பாரு...'' சொல்லிக்கொண்டே இடது கையால் கழுத்தை நெட்டி பஸ்ஸிலிருந்தும் கீழே தள்ளிவிட்டான்.

கிருஷ்ணனும் வேலுவும் பஸ்ஸின் படிகளில் குப்புற விழுந்து கீழே உருண்டார்கள்.

வாயில் ரத்தம் கொழகொழவென்று கொட்டியது.

கான்ஸ்டபிள் ஒருவர் எங்கிருந்தோ ஓடிவந்தார்.

''என்னய்யா கலாட்டா...?''

''ஸார்.. இவங்க ரெண்டு பேரும் பிக்பாக்கெட் ஆசாமிங்க சார்... அந்த ஆளோட சர்ட் பாக்கெட்டை பிளேடால அறுத்து பணத்தை எடுத்திருக்காங்க...''

கான்ஸ்டபிளின் கண்கள் சிவப்புக்குப் போயிற்று. கிருஷ்ணனின் சட்டைக் காலரையும் வேலுவின் மார்புச் சட்டையையும் கொத்தாகப் பிடித்தார்.

''கான்ஸ்டபிள் ஸார்... நாங்க பிக்பாக்கெட் அடிக்கலை... இந்த கூட்டத்துல வேற யாரோ செஞ்சதை நாங்க செஞ்சதா சொல்றாங்க. அந்தப் பணம் எங்க பணம்தான்...''

''பொய் சொன்னே பின்னிடுவேன்...''

''நி...நிஜமாகத்தான் ஸார் சொல்றோம்...''

கையிலிருந்த லத்தியால் இரண்டு பேர்களின் முட்டிகளையும் தட்டினார் கான்ஸ்டபிள்.

சர்ட்டுகளைக் கழற்றி கைகளைப் பின்னுக்கு கட்டினார்.

''நடங்கடா ஸ்டேஷனுக்கு...வழியில எவனாவது வாயைத் திறந்தீங்க, இடுப்பெலும்பை உடைச்சுடுவேன்...''

கான்ஸ்டபிள் லத்தியால் உந்தித் தள்ள ரத்தம் வழியும் வாயோடும் வெற்று மார்புகளோடும் ஸ்டேஷனை நோக்கி நடந்தார்கள் வேலுவும் கிருஷ்ணனும்.

## 24



இன்ஸ்பெக்டர் குஞ்சுண்ணி நாயர் தனக்கு எதிரே வந்து நின்ற கிருஷ்ணனையும், வேலுவையும் சிவப்பேறிய கண்களோடு ஏறிட்டுப் பார்த்தார்.

"உங்க ரெண்டு பேர்ல யாருமே பிக்பாக்கெட் அடிக்கலை அப்படித்தானே...?"

"ஆமா..."

நாயர் கான்ஸ்டபிளிடம் திரும்பினார். "ஒருத்தனை மட்டும் லாக்கப்புக்கு கூட்டுட்டு போ... இன்னொருத்தன் இங்கேயே இருக்கட்டும்..."

"எஸ்... ஸார்..."

கான்ஸ்டபிள் கிருஷ்ணனை மட்டும் லாக்கப்புக்கு கூட்டிட்டு போக, வேலு மிரண்ட கண்களோடு நாயரைப் பார்த்தான், அவர் கேட்டார்.

"உம் பேரென்ன...?"

"வேலு... ஸார்...."

"என்ன வேலை பார்க்கிறே...?"

"முனிசிபாலிடி எருக்கிடங்குல வாட்ச்மேன் உத்யோகம்."

"சரி, ரெண்டு பேர்ல யார் பிக்பாக்கெட் அடிச்சது?"

"யாருமே அடிக்கலை ஸார்..."

"இது யாரோட பணம்?"

"என்னோட பணம் ஸார்."

"மொத்தம் ஆயிரம் ரூபாய் இருக்கே... இவ்வளவு பணம் உன்கிட்டே ஏது...?"

"அ...அ...அது நான் சேர்த்து வெச்ச பணம் ஸார்..."

"எங்கே போறதுக்காக பஸ் ஏறினே...?"

"கோயமுத்தூர்."



"அங்கே யாரைப் பார்க்கிறதுக்காக ரெண்டு பேரும் போறீங்க...?"

"வேலு ஒரு மாதிரியாய் முழித்துப் பார்த்துக் கொண்டே யோசித்தான்.

"என்னடா யோசிக்கிறே...? பட்டென்று சொல்லு..."

"எ...எ....என்னோட சொந்தக்காரங்க வீட்ல ஒரு விசேஷம் ஸார்..."

குஞ்சுண்ணி நாயர் மறுபடியும் கான்ஸ்டபிள் பக்கம் திரும்பினார். "கான்ஸ்டபிள்... லாக்கப்புல இருக்கிற அந்த கிருஷ்ணனை கூட்டுட்டு வா..."

கான்ஸ்டபிள் போய் கிருஷ்ணனைக் கூட்டிக் கொண்டு வந்தார். நாயர் கேட்டார். "நீ என்ன வேலைக்குப் போறே...?"

"குப்பை வண்டி ஓட்டிக்கிட்டு இருக்கேன்..."

"உங்க ரெண்டு பேர்ல பிக்பாக்கெட் அடிச்சது யாரு?"

"யாருமில்லை ஸார்..."

"சரி, இந்தப் பணம் யாரோடது?"

"என்னோடது ஸார்..."

குஞ்சுண்ணி நாயர் சிரிப்போடு வேலுவைப் பார்த்தார். "என்னடா, அந்தப் பணம் உன்னோடதுன்னு நீ சொல்றே, இவன் தன்னோடதுன்னு சொல்றான். சரி, எந்த ஊருக்கு போறதுக்காக பஸ்சில ஏறினீங்க...?"

"கோ...கோயமுத்தூர்..."

"இவன் பொள்ளாச்சின்னு சொல்றான்."

"பொ...பொள்ளாச்சியா... ஆமா, பொள்ளாச்சி தான்."

குஞ்சுண்ணி நாயர் குபீரென்று எழுந்தார். கிருஷ்ணன் கன்னத்தை நோக்கி இடியாய் ஒரு அறையை இறக்கினார். கிருஷ்ணன் வலியால் துடித்துப் போய் பின்வாங்க, உறுமினார். "இன்னும் ரெண்டு நிமிஷம் டயம் தர்றேன்... இந்தப் பணம் உங்களுக்கு

ஏது? எங்கிருந்து திருடிட்டு வந்தீங்கங்கூட உண்மையை சொல்லணும். இல்லேன்னா ரெண்டு பேரையும் லாக்கப்புல வெச்சு பின்னிடுவேன்...''

வேலுவும், கிருஷ்ணனும் ஒருத்தரையொருத்தர் பயப்பார்வை பார்த்துக் கொண்டார்கள். நாயர் உறுமினார்.

''ம்... சொல்லுங்க... இந்தப் பணம் ஏது...?''

''டா... டாக்டரம்மா குடுத்தாங்க...'' கிருஷ்ணன் நாயரைப் பார்த்து கும்பிட்டுக் கொண்டே சொன்னான்.

''எந்த டாக்டரம்மா? பேரு...?''

''ஞானசௌந்தரி...''

''எதுக்காக பணம் குடுத்தாங்க? அதுவும் இவ்வளவு பணம்?''

''வ...வந்து... வந்து...''

''சொல்லு...''

கான்ஸ்டபிள் குறுக்கிட்டு இன்ஸ்பெக்டரிடம் சொன்னார். ''ஸார்... இவங்ககிட்டே என்னமோ தப்பு இருக்கு. தெளிவா பதில் சொல்லாமே மாத்தி மாத்தி எதை எதையோ பேசறாங்க. லாக்கப்புக்கு கொண்டு போய் உதைச்சா உண்மை வந்துடும் ஸார்...''

குஞ்சுண்ணி நாயர் தன் உயரமான ஆகிருதியை தூக்கி கொண்டு நாற்காலியினின்றும் எழுந்தார். பிடரியில் கை வைத்து இரண்டு பேரையும் லாக்கப்புக்கு தள்ளிக் கொண்டு போனார்.

★★★

ஹாஸ்பிடலுக்குள் நுழையும் இன்ஸ்பெக்டரைப் பார்த்ததும் முகம் மாறினாள் டாக்டரம்மாள். பதட்டமாய் நாற்காலியைத் தள்ளிக் கொண்டு எழுந்தாள்.

''வா... வாங்க இன்ஸ்பெக்டர்...''

நாயர் உள்ளே வந்தார்.

''டாக்டர்... நீங்க கொஞ்சம் ஜி.எச்.வரைக்கும் வரமுடியுமா?''

''எதுக்கு இன்ஸ்பெக்டர்?''



''ஒரு பொண்ணோட டெட்பாடியை போஸ்ட் மார்ட்டம் பண்ணணும்...''

''அதைப் பண்ண அரசாங்க டாக்டர்கள் இருப்பாங்களே...?'' டாக்டரம்மாள் குழப்பமான முகத்தோடு கேட்டாள்.

''போஸ்ட் மார்ட்டம் பண்ணப் போகிற டெட்பாடிக்கும் உங்களுக்கும் சம்பந்தம் இருக்கிறதா எங்களுக்கு தகவல் கிடைச்சிருக்கு...''

டாக்டரம்மாள் முகத்தில் அதிர்ச்சி அப்பிக் கொண்டது. ''இன்ஸ்பெக்டர், வாட் டூ யூ மீன்...?''

''வேலு, கிருஷ்ணனுக்கு நீங்க எதுக்காக ஆயிரம் ரூபாய் குடுத்தீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

''இ....இ...இன்ஸ்பெக்டர்....''

''யாரந்த பொண்ணுன்னு சொல்றீங்களா?''

டாக்டரம்மாள மௌனம் சாதிக்க, குஞ்சுண்ணி நாயர் மெல்ல சிரித்தார். ''நீங்க எதையுமே மறைச்சு பிரயோஜனமில்லை டாக்டர்... எல்லாமே வெளிச்சத்துக்கு வந்தாச்சு.. யாரந்த பொண்ணு...?''

''அவ.. பேரு தங்கம்.. பாலக்காட்டிலிருந்து வந்த பொண்ணு... கருக்கலைப்பு முயற்சியில செத்துட்டா... விஷயம் வெளியே வந்தா டிஸ்பென்சரியோட பேர் கெடும் என்கிற காரணத்தினாலே....'' பேச்சை முடிக்க முடியாமல் டாக்டரம்மாள் தவிக்க, இன்ஸ்பெக்டர் தொடர்ந்தார்.

''எருமேட்டுல கொண்டு போய் புதைக்கச் சொல்லிட்டீங்களாக்கும்...''

டாக்டரம்மாள் வியர்வை படிந்த முகத்தை கர்ச்சீப்பால் ஒற்றிக் கொண்டாள்.

நாயர் கேட்டார்.

''அந்தப் பொண்ணு தங்கத்தோட யாராது வந்தாங்களா...?''

''ஒரு ஆள் வந்தான்.''

''யாரவன்...?''

"...."

"பேரு...?"

"ராஜன்..."

★★★

இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன் குஞ்சுண்ணி நாயர் சொன்னதைக் கேட்டு ஆச்சரியமானார். "டாக்டரம்மாள் சொல்கிறபடி பார்த்தால் ராஜனும் தங்கமும் தான் அந்த காதலர்கள்னு நிச்சயமா தெரியுது..."

"எஸ்..."

"தங்கத்தோட அப்பா பத்ராச்சலம் டாக்டரம்மாள் கிட்டே தன் மகளைப் பத்தி விசாரிக்கப் போயிருந்தாரா?"

"ஆமா..."

"மிஸ்டர் நாயர்... இந்த கேஸ் ஒரு முடிவுக்கு வந்துடுச்சு... ராஜனைப் பத்தி விசாரிக்கிறதுக்காக நானும் அவினாஷும் பத்ராச்சலத்தைப் பார்க்க போயிருந்தோம். அவர் தன்னோட மக தங்கம் டெல்லில ஏதோ ஒரு வேலைக்கு சேரப் போயிருக்கிறதா சொன்னார். அவர் சொன்னது பொய்ன்னு இப்ப தெரியுது..."

"அவர் எதுக்காக பொய் சொல்லணும்...? அவர் கிட்ட என்னமோ தப்பு இருக்கு..."

"வாங்க... மறுபடியும் ஆசாமியை கேட்டு விசாரிச்சு பார்த்துடலாம்..." குஞ்சுண்ணி நாயர் சொல்ல மூன்று பேரும் ஜீப்பில் கிளம்பினார்கள்.

பத்து நிமிஷப் பயணம்.

ஜீப் தோப்புக்கு வந்தது.

ரோட்டோரத்தில் ஜீப்பை நிறுத்திவிட்டு தோப்புக்குள் நடந்து பத்ராச்சலத்தின் வீட்டைத் தொட்ட மூன்று பேருக்கும் அதிர்ச்சி.

வீட்டின் கதவில் கனமாய் பூட்டு தொங்கிக் கொண்டிருந்தது. நவநீதகிருஷ்ணனும் குஞ்சுண்ணி



நாயரும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

"என்ன நாயர்... வீடு பூட்டியிருக்கு...?"

"பக்கத்து தோப்புல விசாரிச்சு பார்க்கலாம் வாங்க..."

அருகேயிருந்த தோப்பை நோக்கி நடந்து போனார்கள்.

## 25



பக்கத்து தோப்பில் தென்னை மரத்துக்குக் கீழே கயிற்றுக் கட்டிலில் படுத்தபடி பீடியை உறிஞ்சிக் கொண்டிருந்த சண்முகம் நாயர் போலீஸ் யூனிபார்ம்களைப் பார்த்ததும் பரக்கப் பரக்க எழுந்தார். கையிலிருந்த பீடியை வீசியெறிந்துவிட்டு குஞ்சுண்ணி நாயரைப் பார்த்து அவசர அவசரமாய் வணக்கம் போட்டார்.

"என்ன விஷயம் ஸார்...?"

"பக்கத்து தோப்பு பத்ராச்சலம் எங்கே போயிருக்கார்ன்னு தெரியுமா?"

"அவரோட பெரிய பொண்ணு மீராவுக்கு கல்யாணம் ஸார்.... கல்யாணம் குருவாயூர்ல. நேத்திக்கு ராத்திரியே எல்லோரும் புறப்பட்டு போயிட்டாங்க..."

"கல்யாணம் எப்போ?"

"நாளைக்கு காலையில... நானும் முகூர்த்தத்துக்கு போகணும். ஏன் ஸார்? என்ன விஷயம்...?"

"குருவாயூர்ல எந்த கல்யாண மண்டபத்துல கல்யாணம்?"

"பால கிருஷ்ணா கல்யாண மண்டபம்..."

"தகவல் கொடுத்ததுக்கு ரொம்ப நன்றி" மூன்று பேரும் பூட்ஸ் சத்தங்களோடு அங்கிருந்து நகர்ந்தார்கள்.

குருவாயூர்.

பாலகிருஷ்ணா கல்யாண மண்டபம்.

விடியற்காலை ஐந்து மணி.

கல்யாண மண்டபத்துக்குள்ளே நாதஸ்வரம் வீறிட்டுக் கொண்டிருக்க, மண்டப வாசலில் பத்ராச்சலமும், மங்களமும் நின்று வருகிறவர்களை வரவேற்று உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தார்கள். மண்டபம் கொஞ்சம் கொஞ்சமாய் நிறைந்து கொண்டிருந்த அதே விநாடி –

பத்ராச்சலத்தின் முகம் சட்டென்று மாறியது. பதட்டமான குரலில் கூப்பிட்டார்.

''மங்களம்...''

''எ...என்னங்க...?''

''அங்கே வர்றது யார்ன்னு பார்த்தியா...'' வெள்ளை வேஷ்டி வெள்ளை சட்டையில் வந்து கொண்டிருந்த அந்த இரண்டு பேர்களைக் காட்டினார்.

மங்களம் உற்றுப் பார்த்தாள். பிறகு குழப்பமாய் கணவனின் முகத்தை ஏறிட்டாள்.

''யார்ங்க அவங்க...?''

''நல்லா உத்துப்பாரு... நம்ம வீட்டுக்கு வந்து விசாரணை பண்ணின அந்த ரெண்டு இன்ஸ்பெக்டர்ஸும் யூனிபார்ம் இல்லாமே மப்டியில வர்றாங்க...''

மங்களம் கலவரமானாள்.

''என்னங்க இது? போலீஸ்காரங்க... இங்கேயும் வந்துட்டாங்க...''

''ஏன் கவலைப்படறே...? அவங்க கோயிலுக்கு சாமி தரிசனம் பண்ண வந்திருக்கலாம்...''

''எனக்கு அப்படி தோணலீங்க... அவங்க இங்கேயே பார்த்துக்கிட்டு வர்றாங்க... உண்மையை தெரிஞ்சுகிட்டு வர்றாங்களோ என்னவோ...?''



''ஸ்... இப்படி வேர்த்து வழியாதே... கல்யாணத்துக்கு ஜனமெல்லாம் வந்துட்டிருக்காங்க. சிரிச்ச மாதிரி நில்லு...''

இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணனும், அவினாஷும் மண்டப வாசலை நெருங்கினார்கள். பத்ராச்சலத்தைப் பார்த்து புன்னகைத்தார்கள்.

''எங்களுக்கு அழைப்பு குடுக்க மறந்துட்டீங்களே பத்ராச்சலம்...?''

''வா... வாங்க ஸார்...''

''கோயிலுக்கு வந்தோம். மண்டப வாசல்ல நீங்க நின்னுட்டிருக்கிறதைப் பார்த்தோம். கல்யாணத்துக்கு நாங்களும் வரலாமா?''

''வாங்க ஸார்... நீங்களே பிரியப்பட்டு கல்யாணத்துக்கு வர்றதுதான் எங்களுக்கு சந்தோஷம்... உள்ளே வாங்க ஸார்...''

பத்ராச்சலம் இரண்டு பேரையும் பிரியப்பட்டு உள்ளே கூட்டிக் கொண்டு போனார். நாற்காலிகளில் உட்கார வைத்துவிட்டு மறுபடியும் வாசலுக்குப் போகத் திரும்பினவரை நவநீதகிருஷ்ணனின் குரல் நிறுத்தியது.

''பத்ராச்சலம்! முகூர்த்தம் எத்தனை மணிக்கு?''

''ஆறு மணிக்கு.''

''இன்னும் ரொம்ப நேரம் இருக்கு. ஒரு அஞ்சு நிமிஷம் எங்க பக்கத்துல வந்து உட்காருங்க பத்ராச்சலம். உங்ககூட கொஞ்சம் பேசணும்...''

''எ...எ...என்ன பேசணும்...?'' மெல்லிய குரலில் கேட்டுக் கொண்டே அவர்களுக்குப் பக்கத்தில் காலியாய் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தார்.

''உங்களுக்கு எத்தனை பொண்ணுன்னு சொன்னீங்க...?''

''ரெண்டு... பெரிய பொண்ணோட பேரு மீரா... ரெண்டாவது பொண்ணோட பேரு தங்கம்...''

''ரெண்டாவது பொண்ணு டெல்லிக்குப் பக்கத்துல வேலைக்கு போயிருக்கிறதா சொன்னீங்களே... அந்தப் பொண்ணு கல்யாணத்துக்கு வந்திருக்கா...?''

''இ...இ...இல்ல.''

''ஏன் அக்காவோட கலயாணத்துக்கு வரலை?''

''லீ...லீவு கிடைக்கலைன்னு....''

''பத்ராச்சலம்... கல்யாணம் நடக்கிற இந்த இடத்துக்கு யூனிபார்ம்ல வந்தா மாப்பிள்ளை வீட்டுக்காரங்க மத்தியில சலசலப்பு கிளம்புமேன்னுதான் நாங்க ரெண்டு பேரும் சிவில் ட்ரஸ்ல வந்தோம்...''

''ஸ...ஸார்...''

''தங்கம் நிஜமாகவே வேலைக்கு சேர டெல்லிக்குப் போயிருக்காளா...?''

''ஆ....ஆமா ஸார்...''

''பொய் சொல்லாதீங்க. உங்க பொண்ணு ஓலவக்கோடு ஜெனரல் ஹாஸ்பிடல் மார்ச்சுவரியில பொணமா படுத்திட்டிருக்கா...''

திக்கென்று அதிர்ந்து போய் நெஞ்சில் கை வைத்துக் கொண்டு எழுந்தார். ''இ....இ... இன்ஸ்பெக்டர்... நீ... நீங்க சொல்றது...் உண்மையா...?''

''உண்மை... டாக்டர் ஞானசௌந்தரிகிட்டே கருக்கலைப்புக்காகப் போன உங்க டாட்டர், அந்த ட்ரீட்மெண்ட் பலனளிக்காமே செத்துட்டா. விஷயம் வெளியே தெரிஞ்சா ஹாஸ்பிடலோட பேர் கெடும் என்கிற காரணத்துக்காக டாக்டரம்மா ரெண்டு பேரோட உதவியாலே, எருமேட்டுல புதைச்சுட்டாங்க... இப்போ டாக்டரம்மா போலீஸ் காவலில் இருக்காங்க...''

பத்ராச்சலம் வீறிட்டு வந்த அழுகையை அடக்க சிரமப்பட்டார். கல்யாண கும்பலின் சலசலப்புக்கு மத்தியில் அழுதால் அது தன்னைக் காட்டிக் கொடுத்துவிடும் என்று எண்ணி மேல்துண்டால் வாயைப் பொத்திக் கொண்டார்.

நவநீதகிருஷ்ணன் கேட்டார்.



''டாக்டரம்மாவைப் போய் நீங்களும் பார்த்திருக்கீங்க...?''

''ஆ...ஆமா... இன்ஸ்பெக்டர்...''

''விஷயம் உங்களுக்குத் தெரிஞ்சிருந்தும் ஏன் அதை போலீஸுக்கு சொல்லலை...?''

''பொண்ணோட கல்யாண நேரம்... அதான்...''

''சரி, ராஜனை எங்கே வெச்சு கொலை பண்ணீங்க...?''

''இ...இ...இன்ஸ்பெக்டர்...''

''இதோ பாருங்க பத்ராச்சலம்... நாங்க சகலவிதமான விஷயங்களையும் தெரிஞ்சுகிட்டுதான் இங்கே வந்திருக்கோம். உங்க நண்பர் கோபாலசாமி ஏன் இன்னும் இந்த கல்யாணத்துக்கு வரலை தெரியுமா? அவர் போலீஸ் லாக்–அப்புல இருக்கார். அவர் போலீஸ்ல சொன்ன விஷயங்களை பார்க்கும்போது நீங்கதான் ராஜனை கொலை பண்ணியிருக்கணும்ங்கிற முடிவுக்கு வந்திருக்கோம்...''

''ஸ...ஸார்....''

''உண்மையை உள்ளபடி ஒத்துக்குங்க... கல்யாணத்தை ஒழுங்கா நடக்க விடறோம். இல்லேன்னா. கோயிலுக்குப் பக்கத்துல ஜீப்புல இன்ஸ்பெக்டர் குஞ்சுண்ணி நாயர் யூனிபார்ம்ல உட்கார்ந்திட்டிருக்கார். நீங்க உண்மையை ஒப்புக்க மறுத்தா அவர் இங்கே வந்துடுவார்...''

பத்ராச்சலம் கையெடுத்துக் கும்பிட்டார்.

''வே...வேண்டாம் ஸார்... நா... நான் உண்மையை ஒத்துக்கிறேன். ராஜனை கொ... கொன்னது நான்தான். உங்களுக்கு எல்லா விபரத்தையும் சொல்றேன் இன்ஸ்பெக்டர்... எம் பொண்ணு கழுத்துல தாலி விழட்டும். கல்யாணம் முடிஞ்சதுமே மாப்பிள்ளை பொண்ணைக் கூட்டிகிட்டு கொச்சி போய் அங்கிருந்து மும்பை போயிடப் போறார். அவர்க்கு துபாய்ல வேலை... மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்தவங்க எல்லாரும் ஊருக்கு

புறப்பட்டுப் போனதும் நானே போலீஸ்ல வந்து சரணடைஞ்சுடடேறன்...''

''நம்பலாமா...?''

''என்னை தாராளமா நம்பலாம் இன்ஸ்பெக்டர்... எனக்கு இந்தக் கல்யாணம்தான் முக்கியம்... இது முடிஞ்சதும் நானே ஸ்டேஷனுக்கு வந்து குற்றத்தை ஒத்துக்கிடறேன்...''

''குட்... போய் கல்யாண காரியங்களை கவனிங்க. நாங்களும் இருந்து உங்க பொண்ணை வாழ்த்திட்டு கிளம்பறோம்...''

நவநீதகிருஷ்ணன் சொல்ல, பத்ராச்சலம் தளர்வாய் எழுந்து மணவறையை நோக்கிப் போனார்.

தவில் உச்ச ஸ்தாயியில் முழங்க நாதஸ்வரம் இனிமையாய் பீறிட்டது. அவருடைய மனைவி மங்களம் நெருங்கினாள்.

''என்னங்க... அவங்க என்ன சொன்னாங்க...?''

''சட்டம் நமக்காக காத்திட்டிருக்கு மங்களம்... பொண்ணை அவ புருஷன் கிட்டே அனுப்பிச்ச கையோட நாம போலீஸ்ல சரணடையணும்...''

''இது நாம எதிர்பார்த்ததுதானே... வாங்க... பாணிக்கிரஹணம் பண்ண அய்யர் கூப்பிடறார்...'' மங்களம் கண்ணில் துளிர்த்த நீரை சேலைத்தலைப்பால் ஒற்றிக் கொண்டே மணவறையை நோக்கி நடந்தாள்.

(முற்றும்)

Owned & Published by M.Manivannan on behalf of **RAAJ SRI PUBLICATIONS**, 49-B, SURYA AVENUE, Near Kurinji Nagar, Chrompet, Chennai-600 044.Printed by S.B.KUSHALSHA at Sulekhar Printers, Chennai-5. Editor: **R.M.KUMARAVEL**.
Regd. Off.: 6, Typoon Alikhan St., Chennai-5.



1. அழகாகத்தான் இருக்கிறது
உன்னை நேசித்த பூக்களைவிட
நீ நேசித்த பூக்கள்...

2. எங்கே சென்றது என் இதயம்?
நீ கடந்து போன நிமிடங்களிலிருந்து..
மருத்துவர்கள் மறுபரிசீலனை
செய்கிறார்கள்..
மறுப்புச் சொன்னதால்
மரித்துப் போனது என்று..

3. எல்லோரும் சொல்லுகிறார்கள்
தாஜ்மகால் காதலின் சின்னமாம்.
நமது காதல் சின்னம் எது?
நீயும்-நானும் பார்க்கையில்
மௌனமாய் பேசிக் கொண்டது - நம்
இதயங்கள்தானே..

4. பூ வாங்கித் தரவில்லையே என்ற
வருத்தம் உனக்கு - நீ
நேசித்த பூக்கள் பூக்கவில்லையே
என்ற வருத்தம் எனக்கு...

**- கவிஞர் அ. சார்லஸ்**
**ஈரோடு.**